Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 17 செவ்வாய்க்கிழமை (03.12.2013) பக்கங்கள் 20 ஓசை - 064

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3110)

05

எதிர்ப்பது சரியா?

06

தடை

14

தடைகளைத் தகர்த்த...

## இந்திய மீனவர்கள் 30 பேருக்கு விளக்கமறியல்

காங்கேசன்துறை கடற்பரப்பில் அண்மையில் கைது செய்யப்பட்ட 30 இந்திய மீனவர்களைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் 4ஆம் திகதி கடலில் வைத்துக் கைது செய்யப்பட்ட இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் இவர்களின் வழக்கு விசாரணை மல்லாகம் நீதிமன்ற நீதிபதி எஸ்.கஜநிதிபாலன் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே குறித்த 30 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (25)

## இந்தியப் பிரதமர் மன்மோகன் வடக்கே சென்றால் எதிர்ப்போம்

### ஐ.தே.கட்சி தெரிவிப்பு

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் அழைப்பை ஏற்று இந்தியப் பிரதமர் வடக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்வாரானால் அதனை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கும் என அதன் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு-செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தை ஆரம்பித்து வைத்து பேசும்போதே அவர் இதனைக் (19) பக்கம் பார்க்க...

## வடக்கின் அபிவிருத்திப் பணிகளுக்கு அதிக நிதி அரசு செலவிட்டுள்ளது

### அமைச்சர் பசில் தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கில் அபிவிருத்திப் பணிகளைமேற்கொள்வதற்காகப் பெருளாதார அபிவிருத்தி அமைச்சு பெருமளவு நிதியைச் செலவிட்டுள்ளதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த அபிவிருத்திப் பணிகள் யுத்தம் நிறைவடைந்த கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரியவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி மீள்குடியேற்றம், வீடமைப்பிற்காக 7075 மில்லியன் ரூபாவும், நீர்ப்பாசன கால்வாய்கள் புனரமைப்பிற்கு 2.75 பில்லியன் ரூபாவும், பெரியளவிலான நீர்ப்பாசன வாய்க்கால் புரனமைப்பிற்கு 5.247 பில்லியன் ரூபாவும், சமூக அடிக்கட்டுமானத்திற்காக 2.611 பில்லியன் (19) பக்கம் பார்க்க...

ஆசிரியர்களுக்கான மெய்வல்லுநர் போட்டி

## மூன்று போட்டிகளில் தங்கம்; நெல்லியடி ஆசிரியர் சாதனை



(யாழ்ப்பாணம்)

நுவரெலியா சினிசித்தா விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஆசிரியர்களுக்கான விளையாட்டு விழாவில் நெல்லியடி மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர் எஸ்.அன்ரனி மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற்று கல்லூரிக்கும், வடமாகாணத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

25 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்ட போட்டியில் 400 மீற்றர், 800 மீற்றர் மற்றும் 1500 மீற்றர் கொண்ட மூன்று (19) பக்கம் பார்க்க...

## யாழ்.வருகிறார் ஐ.நா.சிறப்புத்தூதுவர்



(கொழும்பு)

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் தற்போதைய நிலையை அறியும் முகமாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் சிறப்புப் பிரதிநிதியான சாலோகா பெயானி யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார். அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் ஐ.நா.வின் சிறப்புத் தூதார் சாலோகா பெயானி, (19) பக்கம் பார்க்க...

# அரசியல் முரண்பாடு இருந்தாலும் இராணுவ உறவில் பாதிப்பு இல்லை

## இந்திய பாதுகாப்பு அமைச்சு தகவல்

THE NEW INDIAN EXPRESS

(புதுடில்லி)

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் அரசியல் விவகாரங்களில் முரண்பாடுகள் காணப்பட்டாலும், இருநாடுகளுக்கும் இடையிலான இராணுவ உறவு மிகவும் வலுவானதாகவே உள்ளதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்த மேற்படி தகவல்களை புதுடில்லியில் இருந்து வெளிவரும் நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் விலாவாரியாக வெளியிட்டுள்ளது.

இலங்கையுடனான இராஜதந்திர உறவுகளில் அவ்வப்போது இறுக்கமான நிலைப்பாட்டை புதுடில்லி கடைப்பிடித்தாலும் இரு நாடுகளுக்குமிடையிலான இராணுவ ஒத்துழைப்புக்களும், பாதுகாப்புக்கான ஒருங்கிணைவும் தொடர்ந்தும் ஒரு உச்சக்கட்ட சுமூகநிலை நீடித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சை ஆதாரம் காட்டி வெளியிடப்பட்டிருக்கும் இச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளின் அழுத்தங்களுக்கேற்ப, இலங்கையுடனான அரசியல் இராஜதந்திர உறவு சில சமயம் ஆட்டம் காணலாம்.

ஆனால், இத்தகைய காரணிகளால் இருநாட்டு இராணுவ உறவுகளைக் கட்டிப்போட முடியாது என்றும் அரசியல் விவகாரங்கள், இராணுவ உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் கொழும்புடனான பாதுகாப்பு உறவுகள் இந்தியாவின் பாதுகாப்புடன் தொடர்புடையது.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் இலங்கை ஒரு மிகவும் முக்கியமான நாடு என்று இந்தியாவின் மூத்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதனைத் தெளிவுபடுத்தும் வகையில், இந்தியக் கடற்படைத்தளபதி அட்மிரல் ஜோஷி அண்மையில் ஐந்து நாள் பயணமாக இலங்கை சென்று, அந்த நாட்டின் அரசியல் மற்றும் இராணுவ உயர்மட்டங்களை சந்தித்துப் பேசியுள்ளார்.

அதுபோல, பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவைக் கடந்த வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் புதுடில்லியில் தங்கியிருந்து இந்திய வெளிவிவகார அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளை சந்தித்துள்ளார்.

அவர் அங்கிருந்து கொழும்புக்கு புறப்பட்டுச் செல்லும் வரை இந்தச் சந்திப்புகள் தொடர்பான விபரங்கள் அனைத்தும் இரகசிய மாக வைக்கப்பட்டிருந்தன என்றும் நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

## பாதுகாப்பு ஊடக நிலையம் கலைப்பு

பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் கலைக்கப்பட்டுள்ளது. உடன் அமுலுக்கு வரும் வகையில் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் செயற்பாடுகள் அனைத்தும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

நவம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் செயற்பாடுகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்தார்.

## யாழ்.பல்கலை மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முற்பகல் பல்கலைக்கழகத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தை நீண்ட நாட்களுக்கு மூடியதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஈடு பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.பல்கலைக்கழகம் கடந்த மாத நடுப்பகுதியில் மூடப்பட்டு நேற்று மீண்டும் ஆரம்பமாகியதனைத் தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்று கூடி பல்கலைக்கழகத்தில் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முற்பகல் ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்டம் நண்பகல் வரை நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தை அடுத்து யாழ்.பல்கலைக்கழக வாயிலில் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். (பா)

## சர்வதேச அழுத்தங்களுக்கு அரசு அடிபணியாது



(கொழும்பு)

நாட்டின் மீது அழுத்தங்கள் பிரயோகித்தாலும் மிரட்டல்கள் விடுத்தாலும் அரசு இவற்றுக்கு அடிபணியப்போவதில்லை என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

மனித உரிமை மீறல் குறித்து விசாரணை நடத்துமாறு இலங்கைக்கு வலியுறுத்தும் சர்வதேச நாடுகள் அதனை குறிப்பிட்ட காலத்தில் செய்து முடிக்க வேண்டும் என எமக்குக் கட்டளையிட முடியாது என அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

எந்த விசாரணைகள் முன்னெடுக்கப் (19) பக்கம் பார்க்க...

# சமூகமட்ட குடிநீர் விநியோகத்திட்டம்
# கல்லாறில் நடைமுறைப்படுத்த ஆய்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்லாற்றில் சமூகமட்ட குடிநீர்விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவதற்கான செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதனின் தலைமையில் நேற்று முன்தினம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சினால் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்லாறு ஆனைவிழுந்தான், வலைப்பாடு முழுங்காவில், ஜெயபுரம், காந்திக் கிராமம். போன்ற பகுதிகளிலும் சமூகமட்ட குடிநீர் விநியோகத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இதற்கான நிதியினை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஸ்குணவர்த்தன தனது அமைச்சினூடாக வழங்குவதற்கு உறுதியளித்துள்ள நிலையில். திட்டமுன்மொழிவுகள் வழங்கப்பட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆய்வுகள் குறித்த கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ் ஆய்வின்போது நீர் பெறும் இடங்களை தெரிவு செய்தல் திட்டத்திற்கு மக்களின் பங்களிப்பைப் பெறுதல், திட்டத்திற்கான செலவு மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகள் முதன்மைப்படுத்தப்படுகின்றன. அத்தோடு. குறித்த நீர்விநியோகத் திட்டத்தின் விசேட அம்சமாக ஒவ்வொரு வீடுகளுக்கும் குழாய்வழி நீர்விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ள அதேவேளை ஒவ்வொரு வீடுகளுக்கும் நீர்க்கொள்கலன்களையும் வழங்கி நீரைசேமிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பான செயற்பாடும் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனடிப்படையில் நேற்று முதற்கட்டமாக கல்லாறுக்கிராமத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் வை.தவநாதன் தலைமையில் நடைபெற்ற இவ் ஆய்வின்போது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உதவி முகாமையாளர் செனிவரட்ன மற்றும் சபையின் பொறியியலாளர்கள் அதிகாரிகள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை இத்திட்டத்தை தெரிவுசெய்யப்பட்ட ஏனைய கிராமங்களிலும் துரிதகதியில் நடைமுறைப்படுத்தும் வகையில் அந்தந்த கிராமங்களில் மேற்படி ஆய்வுகளை நடாத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## "வடக்கின் வசந்தம்" திட்டத்தில் புங்குடுதீவில் செயற்றிட்டங்கள்



(புங்குடுதீவு)

புங்குடுதீவு மடத்துவெளிக் கிராமத்தில் வடக்கின் வசந்தத்தின் கீழ் மின்சாரக் கம்பங்கள் நடப்பட்டுவரும் நிலையில் ஒழுங்கைகளை புனரமைப்பதற்கு வேலணை பிரதேச சபைத் தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை பிரதேச அமைப்பாளருமாகிய சின்னையா சிவராசா (போல்) ஆலோசனையினை வழங்கியிருந்தார்.

அதனடிப்படையில் கடந்த வெள்ளிக்கிழமை ஒழுங்கைகள் துப்புரவுப்பணியினை அவ்வூர் மக்கள் மேற்கொண்டார்கள் அவர்களின் அம்முயற்சியினை வேலணை பிரதேச சபைத் தவிசாளர் பார்வையிட்டார்.

புங்குடுதீவுக் கிராமத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் மின்சாரம் சென்றடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் வேலணைப பிரதேசசபைத் தவிசாளரிடம் மக்கள் வீதிகளை செப்பனிட்டுத் தரும்படியும் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இவ்விடயத்தினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டுசென்று புனரமைப்புச் செய்வதாகவும் அவர் உறுதியளித்தார்.

## "அமைதிப்பூங்கா" சிறுவர் நாடக நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருக்குடும்ப கன்னியர் மட ஆசிரியர் யோ.யோண்சன் ராஜ்குமார் எழுதிய எட்டு சிறுவர் நாடகங்கள் அடங்கிய அமைதிப் பூங்கா என்னும் நாடக நூல் இன்று காலை 10.30 மணிக்கு திருக்குடும்ப கன்னியர்மடப் பாடசாலையில் வெளியிடப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் அருட்சகோதரி தயாநாயகி செபமாலை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தனிநாயகம் முத்தமிழ் மன்றத்தினால் முன்னெடுக்கப்படுகிறது. நூலின் முதற்பிரதியை மூத்த மெல்லிசைப் பாடகரும், நடிகருமான வி.அன்ரன் டேவிற் பெற்றுக்கொள்கின்றார்.

பிரதம விருந்தினராக திருமறைக்காலா மன்ற இயக்குநர் அருட் கலாநிதி நி.மரியசேவியர் அடிகளும், சிறப்பு விருந்தினராக வட மாகாண அழகியல் பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி மதிவாணி விக்னராஜா கலந்துகொள்வதோடு அருட்திரு செ.அன்பு ராசா அடிகள் ஆசியுரை நிகழ்த்துகின்றார்.

நூலுக்கான ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக நாடகமும் அரங்கியல் விரிவுரையாளர் திருமதி நவதர்ஷினி கருணாகரன் நிகழ்த்துகின்றார்.

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் வெகு சிறப்புற நடைபெற்று வருகின்றன.

இந்தவகையில் கடந்த மாதம் 29 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட செயற்பாட்டில் நேற்று வேலணை கிழக்கு, மேற்குப் பகுதிகளில் பொதுச் சுகாதாரப் பிரிவினரும், பிரதேச சபையினரும், கிராம சேவகர்களும், சமுர்த்தி உத்தியோகத்தர்களும் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இன்று அல்லைப்பிட்டிப் பகுதியிலும், நாளை மண்கும்பான் பகுதியிலும், நாளை மறுதினம் வியாழக்கிழமை சரவணைப் பகுதியிலும் இந்நடவடிக்கை இடம்பெறவுள்ளது. (21)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் கே.கே.தவகீஸ்வரர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொ.அருநகிரிநாதன், சிறப்பு விருந்தினராக யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக பாடசாலை பழைய மாணவர்களான இ.நடராஜா, இ.சத்தியநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (10)

## சொரூபத் திறப்பு விழா

(மானிப்பாய்)

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் நாளை மாலை 5.30மணியளவில் புனித அந்தோனியாரின் சொரூபம் திறந்து வைக்கப்பட உள்ளது.

ஆலய வளாகத்திலேயே புதிதாக அமைக்கப்பட்ட புனித அந்தோனியாரின் சொரூபம் யாழ். மாவட்ட குருமுதல்வர் வண. யஸ்ரின்ஞானப்பிரகாசத்தினால் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு மானிபபாய் பங்குத்தந்தை வண. ஜேம்ஸ் அடிகளார் அழைப்பு விடுத்துள்ளார். (114)

## இரண்டாவது தடவையாகவும் வர்த்தக நிலையம் உடைப்பு

(ஆறுகால்மடம்)

ஆறுகால்மடத்தடியில் உள்ள நாராயணன் ஸ்ரோஸ் நேற்று முன்தினம் இரவு இரண்டாவது தடவையாகவும் உடைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு மழை பெய்துகொண்டிருந்த சமயம் இந்தப் பலசரக்குக் கடை திருடர்களால் உடைக்கப்பட்டபோதும் அதில் இருந்து பொருட்கள் எதுவும் களவு போகவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்பக்கக் கதவு உடைக்கப்பட்டு திறந்த நிலையில் காணப்பட்டதனை அடுத்தே கடை உரிமையாளருக்கு தகவல் கொடுக்கப்பட்டதாகவும், எனினும் பொருட்கள் எவையும் களவு போகவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கடை உரிமையாளரினால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், பொலிஸாரும் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த 28 ஆம் திகதி இரவு இந்தப் பலசரக்குக் கடை திருடர்களால் உடைக்கப்பட்டு ஒரு இலட்சம் ரூபா பணமும், ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களும் களவு போயிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

## ஒன்பது கிராமங்களுக்கு குடிநீர் விநியோகம்

(கிளிநொச்சி)

இலங்கை நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினால் கிளிநொச்சி மாவட்டடத்தில் ஒன்பது கிராமங்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் கிளிநொச்சி அலுவலகம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமங்களான கணேசபுரம், ஆனந்தபுரம், பாரதிபுரம், அறிவியல் நகர், பாரதிபுரம் கிழக்கு, விவேகானந்தாநகர், கிருஸ்ணபுரம், மலையாளபுரம், பொன்னகர் போன்ற கிராமங்களுக்கே குடிநீர் விநியோம் கொள்ளப்படுகிறது.

மேற்படி கிராமங்களில் ஆயிரம் லீற்றர் கொள்கலன் இருபதும், இரண்டாயிரம் லீற்றர் கொள்கலன் மூன்றும் வைக்கப்பட்டுள்ளதாகவும், ஆயிரம் லீற்றர் கொள்கலனில் மேலும் இருபது கொள்கலன்களை மேற்படி கிராமங்களில் வைக்கப்படவுள்ளதாகவும் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை கரைச்சி பிரதேச சபைக்கு ஒரு பாரவூர்தி நீர்த்தாங்கி ஒன்றும், பூநகரி பிரதேச சபைக்கு இரண்டு பாரவூர்தி நீர்த்தாங்கியும், ஒரு உழவு இயந்திர நீர்த்தாங்கியும், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (29)

## மாற்றுவலுவுடையோர் தினவிழா

(வடமராட்சி)

வடமாகாணக் கல்வித்திணைக்களம் நடாத்தும் சர்வதேச மாற்றுவலுவுடையேர் தின நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு யாழ். இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்திய கலாநிதி ச.நந்தகுமாரன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை விரிவுரையாளர் பொன். ஸ்ரீ வாமதேவன், யாழ்.தேசிய கல்வியற்கல்லூரி விரிவுரையாளர் ஆ.ரவீந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (109)

## சான்றுப்பொருட்கள் ஏலத்தில் விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டு உரிமை கோரப்படாத சான்றுப்பொருட்கள் எதிர்வரும் 7 ஆம் திகதியன்று பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏல விற்பனை காலை 10 மணிக்கு ஆரம்பிக்கப்படும். பொருட்கள் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவாக பணத்தினை மட்டும் கொடுக்க வேண்டும். காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. என நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

## டெங்குத்தொற்று: இருவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

டெங்குத்தொற்றிற்கு இலக்காகிய இருவர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சங்கானை மற்றும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்தே இவர்கள் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை நேற்று முன்தினம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து ஒருவர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த மாதம் மட்டும் 29 பேர் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இந்த வருடத்தில் இதுவரை 551 பேர் இவ்வாறு சிகிச்சை பெற்றதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# முன்பள்ளி மாணவருக்கு கல்வி புகட்டும்

# ஆசிரியர்களின் சேவை மகத்தானது

## உயரப்புலம் பாடசாலை அதிபர்



(திருநெல்வேலி)

நாட்டின் எதிர்காலத் தூண்களாகத் திகழப்போகின்றவர்கள் முன் பள்ளிக் கல்வியை பெற்றுக்கொள்ளும் சிறு பிள்ளைகளே. அவர்களுக்கு சிறந்த கல்வியைப் போதிக்கும் ஆசிரியைகள் இறைவனுக்கு ஒப்பானவர்கள். தாயின் பாசத்தோடு பிள்ளைகளுக்கு கல்வி புகட்டும் முன்பள்ளி ஆசிரியைகளின் பணி போற்றுதற்குரியது என உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் வித்தியாலய அதிபர் கு.திலீபன் தெரிவித்தார்.

கொக்குவில் காந்திஜீ சன சமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை நிலைய முன்றலில் அ.ஜெபராஜ் தலைமையில் இடம் பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய அதிபர், முன்பள்ளி ஆசிரியைகள் பொறுமை நிறைந்தவர்கள் என்பதோடு சிறந்த அறிவாற்றலையும் கொண்டவர்கள்.

முன்பள்ளிப் பிள்ளைகளுக்கான விளையாட்டுப் போட்டிகளும், பரிசளிப்பு விழாக்களும் அவர்களுக்கு குதூகலத்தை ஏற்படுத்துவதுடன் அவர்களின் மனதில் உற்சாகத்தையும் ஏற்படுத்தவல்லன. கற்றல் நடவடிக்கையோடு உடல் உள நலத்தை ஏற்படுத்தும் விளையாட்டுப் போட்டிகளும் முன்பள்ளிச் சிறுவர்களுக்கு அவசியம் தேவை.

முன்பள்ளிப் பருவம் ஒரு மனிதனின் வாழ்வில் முக்கிய கட்டமாகும். வாழ்வுக்கான திறன், மனப்பாங்குகளுக்கான அடித்தளம் இப்பருவத்திலேயே இடப்படுகின்றது. முன்பள்ளி ஆசிரியர்கள் சிறந்த அறிவுள்ளவர்களாகவும், பொறுப்புள்ளவர்களாகவும், அதிகளவு பயிற்சித் திறன் கொண்டவர்களாகவும் திகழ்வது அவசியம். இடம் சார் பெற்றோர்களாகவும் விளங்கும் இவர்கள் இறைவனால் ஆசீர்வதிக்கப்படுவர் எனக் கூறினார். (137)

# பருத்தித்துறை பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு செயற்பாடு

(வடமராட்சி)

பருத்தித்துறைப் பிரதேசத்தில் இவ்வருடத்தின் இதுவரை 36 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு சிகிச்சை பெற்றுள்ள நிலையில் தற்போது டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைத் தகவல் தெரிவித்துள்ளது.

இதன்படி பணிமனைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வீடுகள், பாடசாலைகள், திணைக்களங்கள் மற்றும் பொதுமக்கள் நடமாடும் இடங்கள், நுளம்பு பரவக்கூடிய இடங்கள் போன்றவற்றை சுகாதார அதிகாரிகள், பொலிஸ உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோர் பார்வையிட்டு உரிய நடவடிக்கைகளும் ஆலோசனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதைவிட நுளம்பு பரவக்கூடிய வகையில் சுற்றுச் சூழலை வைத்திருப்போர் மீதும் உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கபடுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் தேசிய நுளம்பு கட்டுப்பாடு வாரத்தில் பருத்தித்துறை பிரதேசத்தில் பல்வேறுபட்ட பரப்புரை நிகழ்ச்சித் திட்டங்களும் மத்திய சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு கமைய மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும் இப்பிரதேசத்தில் இருந்து கொழும்பு சென்று திரும்புபவர்களில் பலர் டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். இந்நிலையில் இவ்வாறு வெளிமாவட்டங்களுக்கு பயணத்தை மேற்கொள்வோர் மிக அவதானத்துடன் செயற்படவேண்டும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதனை விட இப்பிரதேசத்தில் பரவலாக புகையூட்டல் செயற்பாடுகளும் விழிப்புணர்வுச செயற்பாடுகளும் தற்போது இடம்பெற்று வருவதாக பணிமனையின் தகவல்கள் தெரிவித்துள்ளன. (116)

## பிரதேச இளைஞர்கழகத்தின் புதிய நிர்வாகத் தெரிவு

(மனிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச சம்மேளனத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. 2014/2015ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் இதன் மூலம் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர். இதன் ஒரு அங்கமாக பண்டத்தரிப்பு J/146 கிராம சேவகர் பிரிவிற்கான இளைஞர் கழகத்தின் புனரமைப்பு நேற்று ஞாயிற்றுக் கிழமை அ.டொன்சிங் தலைமையில் பிறைர் ஸ்ரார் விளையாட்டுக் கழக மண்டபத்தில் இடம்பெற்றது.

புதிய ஆண்டிற்கான J/146 கிராம சேவகர் பிரிவிற்கான இளைஞர் கழகத்தின் தலைவராக சு.கமில்டன் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக ஜீன் கார்த்திகாவும், பொருளாளராக கிறிஸ்டியனும், உபதலைவராக யுகிஸ்ரா மைதிலியும், உப செயலாளராக ஜோன் பற்றிக்கும், அமைப்பாளராக பேர்ணாட் நிறோஜனும் தெரிவுசெய்யப்பட்டனர். (48)




இளவாலை வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வொன்று நாவலடி கலைமகள் படிப்பகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதேசத்தின் இளைஞர்கள், பொதுமக்கள், பொலிஸார் இரத்ததானம் செய்வதைக் காணலாம். (48)

# என்ன கூத்து... ஐங்கரா இது...?




ஐயோ ஐயோ ஐங்கரநேசா, உங்களை நினைச்சா எனக்குச் சிரிப்புத்தான் வருது ராசா வருது....

என்ன கூத்து என்ன கூத்து.... ராசா? இது அதிரடிக் கூத்தோ.... ஆரியக் கூத்தோ??

உண்மையைச் சொல்லுங்கோ அப்பு, நீங்கள் நாடகத்துறையில இல்லாட்டி நடிப்புத்துறையில படிச்சனிங்களோ இல்லை தாவரவியல்துறையிலதான் படிச்சனியளோ எண்டு.

நடிப்பில நல்லாய்ப் பிச்சு உதறுகிறீங்களப்பு...

உங்களுக்கு முந்தியோ பிந்தியோ அரசியலுக்கு வந்த மற்றவையெல்லாம் உங்களுக்குக் கிட்டவும் வர மாட்டினம்.

அப்பிடி அதிரடி வேலைகளில இறங்கிக் கலக்கிறீங்கள் குஞ்சு.

சிறிதரன், கஜேந்திரன் எல்லாம் உங்கட கால் தூசுக்கும் வரமாட்டினம். சரவணபவன் எட்டியும் பாக்க முடியாது.

அமைச்சுப் பதவி கிடைச்சவுடன் நெடுந்தீவுக்குப் பறந்தீங்கள்.

பிறகு பார்த்தால் திருக்கேதீஸ்வரத்தில் நிக்கிறீங்கள்.

அதுக்கிடையில் வலி வடக்கில உண்ணாவிரதம் இருக்கிறீங்கள்.

கிளிநொச்சிக்குப் போய் ஜனாதிபதியின் பிறந்த நாள் நினைவுக்கு மரம் நட்டீங்கள்.

ஜனாதிபதிக்கு மரம் நட்டதை நாலு பேர் சொல்லிப் பிரச்சினையைக் கிளப்பிப் போட்டாங்கள் எண்டதால், மாவீரர் நினைவாகவும் மரம் நடவேணும் எண்டு சொல்லி முதலமைச்சரைக் கொண்டு அதையும் செய்தீங்கள்.

என்ன மாதிரியான ஒரு ஐடியா உங்களுக்கு? உங்களுக்கு எதிராக வந்த அலையை அப்பிடியே அமத்திப் போட்டீங்கள்.

'மக்களின் விடுதலைக்காய் மண்ணில் புதைந்த மாவீரரின் நினைவுக்காலம்' எண்டு சொல்லிக்கொண்டு, அதுக்கு மாறாக அதே காலத்தில் 'கலேர்ஸ் நைற்' கொண்டாடினீங்கள்.

இதுக்குள் மாவீரர் நாளையொட்டி யாழ்ப்பாணத்தில ஒரு பத்திரிகைக் காரியாலயத்துக்குள் புகுந்து இரத்ததானம் வேறப்பா!

பிறகு பாத்தால் நிலாவரைப் பகுதியில பாதீனியம் செடியை அழிப்பு. அதுக்கும் முதல்வர் அழைப்பு.

இதெல்லாம் நல்ல காரியங்கள்தான்.

ஆனால், இதுகளை அமைச்சராக முன்னரும் செய்திருக்கலாம். சேவைக்குக் கால நேரம் எண்டு எதுவும் தேவையில்லை. பதவி, பவிசு கூடத் தேவைப்படாது.

போராட்டம் நடந்தபோதுதான் காயப்படும் போராளிகளுக்கு அதிகளவில் இரத்த தானம் தேவைப்பட்டது. அதைச் செய்யிறதுக்கு அப்ப உங்களைக் காணவில்லை. [அப்ப காணாமற் போனவைதான் இப்ப களத்தில் நிற்கினம்].

அமைச்சர் எண்டவுடனதான் எல்லாத்துக்கும் ஞானம் பிறக்குதாக்கும்.

போற போக்கைப் பார்த்தால் அடுத்த முதலமைச்சருக்கு அடுக்குப் போல தான் இருக்கு.

இப்ப இருக்கிற முதலமைச்சர், அவரவை தங்கட தங்கட தேவைக்குத் தூக்கிக் குத்திற றப்பர் முத்திரை மாதிரித்தான் இருக்கிறார்.

இது உங்களுக்கு நல்லா வாய்ச்சுப் போச்சு.

உங்களுக்கு மட்டுமல்ல உங்கட சகபாடிகளுக்கும் நல்லாய்த்தான் வாய்ச்சிருக்கு.

ஆனால், சனங்களுக்குத்தான் கேடு.

அவர் கொழும்புக்குப் போனால் அங்க ஒரு கதை.

யாழ்ப்பாணத்துக்கு வந்தால் பிறகொரு கதை.

மன்னாருக்குப்போனால் அங்க இன்னொரு கதை.

இப்பிடியே இடத்துக்குத் தோதாகவும் சந்தர்ப்பத்துக்கு ஏத்தமாதிரி இப்ப சிங்கன் கதைக்கலாம்.

ஆனால், இந்தச் சுத்து மாத்து கனகாலத்துக்குத் தாக்குப்பிடிக்காது.

ஆராவது அவருக்குக் கொஞ்சம் கூடுதலாக நெருக்கடி குடுத்தால் அவர் பேசாமல் சாமியிட்டயோ சந்நியாசியிட்டயோ பாரத்தைப் போட்டிட்டு 'எல்லாம் அவன் செயல்' எண்டிடுவார்.

இதுவும் உங்களுக்கெல்லாம் நல்லா வாய்ச்சுப் போட்டுது.

ஆனால் ராசா, உங்கள விட பென்னாம் பெரிய கொடி, குடை, ஆலவட்டம், படை பலம், ஆளணி, அம்பு சேனை எண்டு எல்லா வளத்தோடயும் இருந்த ஆக்களின்ர சரித்திரமெல்லாம் எப்பிடி முடிஞ்சதெண்டு கொஞ்சம் நினைக்கோணும்.

இல்லாட்டி நாளைக்கு உங்களைப் பத்தி ஆரும் கவலைப்பட மாட்டினம்.

கனக்கத் துள்ளிற அது பொதி சுமக்காதாம்.

நீங்கள் நல்லாத் துள்ளிறியள்.

சும்மா படங்காட்டாமல் எதையாவது கொஞ்சம் உருப்படியாச் செய்யுங்கோ தம்பி.

அதைத் தான் சனங்கள் எதிர்பாக்குதுகள்.

அமைச்சர் எண்டால் ஆரும் கட்டின கட்டிடங்களைத் திறக்கிறதும் ஆரோ வெட்டின வாய்க்கால்களில் தண்ணி விடுறதும் இல்லை.

நீங்களும் ஏதாவது செய்ய வேணும். அதைச் செய்யுங்கோ.

உங்களுக்குப் புகழ் வேண்டுமெண்டால் அப்படி நாலு காரியம் செய்யுங்கோ அப்பு. சனங்கள் பாராட்டுங்கள்.

தூய்மையான உள்ளத்தில் வஞ்சக எண்ணங்களுக்கு சிறிதும் இடம் கிடையாது.

- ஔவையார்.

தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## பார்வையும் அறிதலும்

பாடப்புத்தகங்களும் படிப்பும் சடங்காக மாறிவிட்ட அல்லது மாற்றிக்கொண்டுவிட்ட சூழலில் வாழ்கிறோம். படிப்பு என்பது வயிற்றுக்கு சாப்பாடும், வாழ வசதியும் பெற்றுத்தரும் ஒரு தொழிலுக்கான கடவுச்சீட்டு என்கிற முறையில் நம் கல்வி முறை உருவானதால் ஏற்பட்டுள்ள சீர்கேடு இது.

'ஏதோ படித்துப் பாஸாகித் தொலைக்க வேண்டி இருக்கிறது' என்ற எண்ணத்துடன்தான் கலைப் பாட மாணவர்களும் சரி விஞ்ஞானப் பாட மாணவர்களாக இருந்தாலும் சரி... கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களும் பரீட்சைகளுக்காக மட்டுமே தாங்கள் கற்பிப்பதை உணர்ந்து அதை மீறாமல், அரசாங்கச் சுகாதாரப் பணியாளர்கள் பற்றற்றுப் பிரசாரம் செய்துகொண்டிருப்பது போல பாடம் நடத்திவிட்டுப் போகிறார்கள்.

கல்வி என்பது வேலை கிடைப்பதற்கான ஒரு சடங்காக கருதப்பட்டுக் கொண்டிருக்கிறது. கல்வி வெறுமனே தொழிலுக்கானதல்ல, பிரபஞ்ச அதிசயங்களை உணர்ந்து கொள்ள அதன் மர்மங்களில் பிரயாணிக்க ஒரு துடுப்பு என்பதனை மாணவர்களை உணரச் செய்யவேண்டும்.

அதற்கு கல்வி இன்று கொண்டுள்ள நிலைப்பாட்டினையே மாற்றியமைக்க வேண்டும். சி.பி.ஸ்னோ என்ற விஞ்ஞானி, அறிவியலுக்கும் சமுதாய அறிவுப்புலங்களுக்கும் இடையில் விரிந்து கொண்டு போகும் அபாயகரமான பிளவினைப் பற்றிக் கூறியுள்ளார். அந்த அபாயகரமான பிளவு நம் சமுதாயத்தை வெறும் சுயநலச் சமூகமாக மாற்றியிருப்பது மட்டுமல்லாமல் புதிய சிந்தனைகளை நாடவோ தேடவோ விரும்பாதவர்களாகவும் ஆக்கியிருக்கிறது.

பாடசாலைக்கு வெளியே விரிந்து கிடக்கும் வாழ்வு பற்றி எதுவும் உணர்த்தும் திறனில்லாக் கல்வியைக் கரைத்துக் குடித்துவிட்டு வெளியேறும் நம் இளைஞர்கள், நமக்கு வெளியேயுள்ள சமூகங்கள் பற்றியோ உலகங்கள் பற்றியோ பார்வையின்றி ஒற்றைப் போக்குச் சிந்தனைகளுடன் சுருங்கிவிடுகிறார்கள்.

இயற்கை வளங்களையும் அதனுடன் தன் வாழ்வு பின்னிப்பிணைந்து கிடக்கும் முறைகளையும் உணராமல் பாடசாலைகள், பல்கலைகளிலிருந்து வெளிவந்து பட்டங்களை மட்டும் பெறுபவர்களாகிறார்கள்.

இவர்களில் பலருக்கு அறிவியல் என்பதெல்லாம் ஆடைகள், அழகுசாதனங்கள் போல தங்களை மற்றவர்களிடமிருந்து உயர்த்திக் காட்டவும் பீற்றிக் கொள்ளவுமான ஓர் அடையாளம் மட்டுமே. எனவே அறிவியல் மனப்பான்மையோ சமூக மனப்பான்மையோ வளராமல் ஆவேசம்-வெறுப்பு-வன்முறை மனப்பான்மைகளையே வளர்த்தவர்களாக உள்ளார்கள்.

இப்படித்தான் 'படித்தவர்களை'யும் 'அறிவாளிகளை'யும் கொண்ட நம் சமூகம் அழிவைத் தடுக்கவோ, அழிவிலிருந்து மீளும் வழிகளைக் காணவோ, அடுத்த சமூகங்களுக்கு இணையாக நகரவோ முடியாமல் அல்லாடுகிறது.

அறிவுடையோர் என்று சொல்லிக் கொள்ள முடிவதன் பொருள், அவர்கள் புதிய காலத்திற்கும் புதிய மாற்றங்களுக்கும் ஏற்ப மனித நடத்தைகள் ஒழுங்குகளைச் சூழலுடன் பொருத்தித் தெரிந்து கொள்கிறார்கள் என்பதே. அறிவியலின் அடிப்படையாக இருப்பது தேடல்.

தேடலை ஊக்குவிப்பதான கல்வியே நமக்கு முக்கியம். "நம்முடைய முன்னோர்களுக்கு அணுவைப் பற்றிய அறிவு இருந்தது" என்பது போல போலியான பெருமிதங்களிலும், நமது சிந்தனைக்கப்பால் சரி எதுவுமில்லை என்ற கர்வ உணர்வுகளிலும் தேங்கிவிடுவது நம் பார்வையைக் குருடாக்கிவிடும்.

விஞ்ஞானக் கற்கை என்பதும் நாம் சமூகத்தை, உலகை, இன்றைய உலக யதார்த்தத்தைப் புரிந்தவர்களாக விரிவடைவதற்கே உதவ வேண்டும். அறிவியல் என்பது தொழில்நுட்பம் சார்ந்தது இல்லை, பார்வையும் அறிதலும் சார்ந்தது.

- ஆசிரியர்.

# அபிவிருத்தியை மேற்கொள்ளவே அரசாங்கம் கடன்களை பெற்றது

### ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவே அரசாங்கம் கடனைப் பெற்றது ஆனால் அதனை விமர்சிப்போர் பாண் உண்பதற்காக கடனைப் பெற்றனர் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஹொரணை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம் பெற்ற கலையரங்கம் ஒன்றை திறந்து வைக்கும் வைபவத்தில் பேசும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2014ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 382 மில்லியன் ரூபா கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான நிதியுதவிகள் பெருமளவில் அதிகரிக்கப்பட்டுள்ளன. இது பற்றி ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசவில்லை. அத்துடன் பிரிவேனாவில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

எவர் எப்படியான விமர்சனங்களை முன்வைத்தாலும் நாங்கள் முன்னோக்கிச் செல்வோம். நாட்டை கட்டியெழுப்பும் தேவையே எமக்குள்ளது.

நாட்டில் இன்று புனரமைக்கப்படாத வீதிகளே கிடையாது. வடக்கை அபிவிருத்தி செய்யும் பொழுது எம்மை விமர்சிக்கின்றனர். கடன் பெறும் போது விமர்சிக்கின்றனர்.

அவர்கள் பாண் உண்பதற்கு கடன் பெற்றனர். நாங்கள் அபிவிருத்திக்காக கடன் பெறுகிறோம். அதிவேக வீதி ஒன்றை நிர்மாணிக்க 1986ஆம் ஆண்டு ஜப்பானிடம் இரந்து 568 மில்லியன் யென்களை பெற்றுள்ளனர். எந்த அதிவேக வீதிகளும் நிர்மாணிக்கப்படவில்லை. நாங்கள் கடன் பெற்றோம் அதிவேகவீதிகளை நிர்மாணித்தோம் என்றார்.

# எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து அரசாங்கத்தை அமைப்பதே புத்திசாலித்தனம்

### என்கிறார் அசாத்சாலி

(கொழும்பு)

அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும் காலம் ஏற்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் அனைத்து எதிர்க்கட்சிகளும் இணைந்து அரசாங்கத்தை அமைப்பதே புத்திசாலித்தனம் என ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய மாகாண சபை உறுப்பினர் அஸாத் சாலி தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு இயக்கங்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டமும் இன்றைய பொருளாதார சிக்கல்களும் மக்களால் தாங்கிக்கொள்ள முடியாத அளவில் உள்ளது. அத்தியாவசியப் பொருட்கள் அனைத்துக்கும் வரிகளை அறவிட்டு அப் பணத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்பம் உண்டு வருகின்றது.

கசினோ சூதாட்டக்காரர்களுக்கும் சர்வதேச வியாபாரிகளுக்கும் ஏற்ற வரவு-செலவுத் திட்டத்தினை ஆரம்பித்து அப்பாவி மக்களின் வயிற்றில் அடித்துவிட்டனர். இந்த நிலை மேலும் அதிகரிக்கும்.

சர்வதேச நாடுகளிடம் வாங்கிய கடன்களை கட்ட வேண்டுமாயின் மக்களிடம் வரி அறவிட்டு பணத்தைக் கொள்ளையடிப்பது மட்டுமே ஒரே வழி. அதனையே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செய்து வருகின்றார்.

அதேபோல் இன்று அமைச்சர்களே அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட ஆரம்பித்து விட்டனர். அரசாங்கத்தால் கொண்டு வரப்படும் திட்டங்களுக்கு அமைச்சர்களே முரண்பட ஆரம்பித்து விட்டனர். விலையேற்றமும், பண நெருக்கடியும் சிறுபான்மை மக்களுக்கு மட்டுமல்ல அனைவருக்கும் என்பதை இன்று பலர் உணர்ந்து விட்டனர்.

எனவே, எதிர்வரும் மார்ச் மாதத்தோடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் கவிழ்க்கப்படும். மக்களே அரசாங்கத்தினை வீழ்த்தி புதிய அத்தியாயத்தினை நாட்டில் ஆரம்பிப்பார்கள். மேலும், இன்று சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு அரசாங்கம் பணிந்துவிட்டது. மக்கள் மத்தியில் இனவாதத்தையும் பிரிவினையையும் தூண்டுவதற்காகவே ஜனாதிபதி சர்வதேசத்தினை பகைத்துக் கொள்வதைப் போன்று நாடகமாடுகின்றார். ஆனால், அரசாங்கத்தின் சாவி இன்று சர்வதேசத்திடம் அகப்பட்டு விட்டது என்றார்.

# வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் பதவி விலக வேண்டும்

### மங்கள சமரவீர எம்.பி. கோரிக்கை

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பதவி விலக வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட் சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சரின் ஆபிரிக்க இராஜதந்திர கொள்கையானது, பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பங்கேற்ற ஆபிரிக்க கண்டத்தின் அரச தலைவர்களது எண்ணிக்கையில் புலப்பட்டுள்ள இந்த நிலையில், அவரது ஆபிரிக்க கொள்கையின் நிலைமையை அறிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.

அண்மைக்காலமாக வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், மேலைத்தேய நாடுகளின் தேவைப்பாடு தமக்கு அவசியம் இல்லை என்றும் ஆபிரிக்க நாடுகளுடன் எமது புதிய வெளிநாட்டுக் கொள்கை செயற்படுவதாக கூறியிருந்தார்.

ஆபிரிக்கக் கண்டத்தில் 19 நாடுகள் பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கின்றன. எனினும் இலங்கை மாநாட்டில், வெறும் 7 நாடுகளே கலந்து கொண்டன. இதன் மூலம் அவரின் செயற்பாட்டின் தன்மை புரிவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேர்தல்களில் தனித்துப்போட்டி

### அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைந்து செயற்பட்டாலும் எதிர்வரும் தேர்தல்களில் அரசுடனோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியுடனோ கூட்டணியில் இணைந்து போட்டியிடாது தனித்தே போட்டியிடும் என அதன் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பூகொட பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இருந்து கொண்டு ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்தும்.

இன்றைய அரசாங்கம் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை நேர்மையாக ஆராய்ந்து பார்க்க நடவடிக்கை எடுத்தாலும் சில மத அமைப்புகள் முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன. எந்த இனமும் தாம் விரும்பிய மதத்தை பின்பற்றவும் அரசியலில் ஈடுபடவும் உரிமைகள் உள்ளன. இதனை சகலரும் புரிந்து கொள்ள வேண்டும். அரசுடன் இணைந்து செயற்பட்டாலும் கட்சியின் கொள்கை மற்றும் யாப்புக்கு இணங்க முஸ்லிம் காங்கிரஸ் எப்போதும் சுயாதீனமாகவே செயற்படும். அதற்கான உரிமை எமக்கு இருக்கின்றது என்றார்.

# ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவராக நியமிக்கப்பட்டதை எதிர்ப்பது சரியா?

## பாரம்பரிய கைத்தொழில் அமைச்சின் ஆலோசகர் எம். தவராசா நேர்காணலிலிருந்து

**ஜனாதிபதி முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எழுதிய கடிதத்தில் மகிந்த சிந்தனையின் அடிப்படையில் செயற்படவேண்டும் என்று குறிப்பிட்டது ஒரு அரசியல் நோக்கத்தில் கொள்ளாமல் தேசிய பொருளாதாரக் கொள்கையாகக் கொள்ள வேண்டும். அதாவது மகிந்த சிந்தனை ஏற்கெனவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, இது நாட்டின் தேசிய பொருளாதாரக் கொள்கை. நாட்டின் அரசியல் அமைப்புக்கு விசுவாசமாக நடப்பேன் என்று சத்தியப் பிரமாணம் செய்துதான் பதவிக்கு வந்துள்ளார்கள். அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் தேசியக் கொள்கைகள் மத்திய அரசுக்கு சொந்த மானது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே ஜனாதிபதி, மத்திய அரசின் தேசியக் கொள்கைக்கு அமைவாக செயற்படுங்கள் என்று குறிப்பட்டதை தவறாக கருதமுடியாது.**

**கேள்வி :** யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பகிஷ்கரிக்கப் போவதாக தெரிவித்துள்ளதே இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?

**பதில்:** அவர்கள் பகிஷ்கரிப்பதற்கு கூறியுள்ள முக்கிய காரணிகளில் ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வட ம ாகாண முதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரனுடன் இணைத் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பது. கடந்த வாரம் கூட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வழங்கியிருந்த செவ்வியில், முதலமைச்சர் இல்லாத காலகட்டத்தில் ஆளுநரும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இணைத் தலைவர்களாக இருந்திருக்கலாம். ஆனால் இப்போது முதலமைச்சர் பதவியில் இருப்பதால் வடமாகாண முதலமைச்சரே யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு தலைமை தாங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு என்பது பல வருடங்கள் நடைமுறையில் இருந்தபோதும், 1996 ஆம் ஆண்டில் சந்திரிகா பண்டாரநாயக்க ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில்தான் அது மீண்டும் புத்துயிர் பெற்றது. அதனுடைய தற்போது இருக்கின்ற முதலாவது நிர்வாக சுற்றறிக்கை பொதுநிர்வாக அமைச்சினால் 1996ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வெளியிடப்பட்டது. அந்தச் சுற்றறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது மத்திய அரசினால் ஒரு மாவட்டத்தில் செயற்படுத்தப்படுகின்ற வேலைத் திட்டங்களையும், மாகாண சபையினால் செயற்படுத்தப்படுகின்ற வேலைத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து அந்த வேலைத்திட்டங்களை சிறப்பாகச் செயற்படுத்துவதற்காகவே இந்த ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டது.

இது தொடர்பில் குறித்த சுற்றுநிருபத்தில் தெட்டத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. முதலமைச்சர் ஓர் இணைத்தலைவர், ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு அமைச்சர் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் இன்னோர் இணைத்தலைவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 1996 ஆம் ஆண்டில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். அந்தக் காலகட்டத்தில் சந்திரிகா பண்டாரநாயக்காவால் அவர் இணைத்தலைவராக நியமிக்கப்பட்டார். இது மத்திய, மாகாண மற்றும் பொது அமைப்புக்களின் வேலைத்திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கான ஒரு குழு. ஏனைய மாவட்டத்தில் எவ்வாறு செயற்படுகிறார்கள்? எவ்வாறு செயற்படுத்தப்படுகிறது? என்பதைவிட் சுற்றுநிருபங்களில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதோ அதற்கு அமையத்தான் நடைமுறை இருக்க வேண்டும்.



**1977ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் தமிழ் அரசுக்குத்தான் ஆணை வழங்கினார்கள். அடுத்த தேர்தல் தமிழ் ஈழத்தில்தான் என்று அந்த ஆணையை மக்கள் வழங்கினார்கள். மக்கள் ஆணை வழங்கிவிட்டார்கள் என்பதற்காக எல்லாம் அதன்படி நடைபெறும் என்று குறிப்பிடமுடியாது. மக்கள் ஆணையைத்தான் செய்வோம் என்று குறிப்பிடுபவர்கள் அரசியல் அமைப்புக்குக் கீழ் சத்தியப் பிரமாணம் எடுக்கத் தேவையில்லை.**

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டாரா? என்பது எனக்கு உறுதியாகத் தெரியாது. ஊடகங்களின் மூலம்தான் நான் தெரிந்து கொண்டேன். அவர் சட்டங்களை நன்கு தெரிந்தவர். ஆனால் அவர் குறிப்பிட்டதாக ஊடகங்களில் வெளியாகியிருந்தது. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முதலமைச்சர் தலைமையில் நடைபெற வேண்டிய நிலையில்,மகிந்த சிந்தனை என்ற அரசியல் நோக்கத்துக்காக இந்த இணைத்தலைமையினை ஏற்றுச் செயற்பட முடியாது என்று குறிப்பிட்டிருந்தார். ஒருங்கிணைப்புக்குழு மகிந்த சிந்தனை என்ற அரசியல் நோக்கத்துக்காக ஏற்படுத்தப்படவில்லை. இணைத்தலைமை என்பது ஒரு நடைமுறை. எல்லா மாகாணங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று சுற்றுநிருபங்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பொதுவான நடைமுறை யாழ்ப்பாணத்துக்கோ, அல்லது சி.வி.விக்னேஸ்வரனுக்கோ ஏற்படுத்தப்பட்டதல்ல. 1996 ஆம் ஆண்டிலிருந்து இது நடைமுறையில் இருந்து வருகின்ற விடயம். மகிந்த சிந்தனை என்பது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனமாக ஆரம்பத்தில் இருந்தாலும். 2006ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகளில் மகிந்த சிந்தனை என்ற அடிப்படையில் பத்து வருட பொருளாதார வேலைத்திட்டத்தை ஒரு இணைப்பாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்கள். இந்த மகிந்த சிந்தனை என்பது ஒரு தேசிய கொள்கை. 13 ஆவது திருத்தச் சட்டத்தை எடுத்துக் கொண்டால் தேசியக் கொள்கை மத்திய அரசுக்குரியது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எழுதிய கடிதத்தில் மகிந்த சிந்தனையின் அடிப்படையில் செயற்படவேண்டும் என்று குறிப்பிட்டது ஒரு அரசியல் நோக்கத்தில் கொள்ளாமல் மகிந்த சிந்தனை என்பது தேசிய பொருளாதாரக் கொள்கை யாகக் கொள்ள வேண்டும். அதாவது ஏற்கெனவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே. இது நாட்டின் தேசிய பொருளாதாரக் கொள்கை. நாட்டின் அரசியல் அமைப்புக்கு விசுவாசமாக நடப்பேன் என்று சத்தியப் பிரமாணம் செய்துதான் பதவிக்கு வந்துள்ளார்கள். அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் தேசியக் கொள்கைகள் மத்திய அரசுக்கு செந்தமானது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே ஜனாதிபதி மத்திய அரசின் தேசியக் கொள்கைக்கு அமைவாக செயற்படுங்கள் என்று குறிப்பட்டதை தவறாக கருதமுடியாது என்பது எனது கருத்து.

**கேள்வி :** வடமாகாண அமைச்சர்களின் செயலாளர் தெரிவு தொடர்பில் யார் தீர்மானிப்பார்கள்?

**பதில்:** 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவாக மாகாண சபையின் அதிகாரிகளின் நியமனங்கள் தொடர்பிலும் இடமாற்றம் தொடர்பிலும் பொது நிர்வாக ஆணைக்குழுவே முடிவெடுக்கும். அதனை ஆளுநரே கட்டுப்படுத்துவார்.

**கேள்வி :** அந்த நியமனங்களின்போது முதலமைச்சருடன் கலந்தாலோசிக்கப்பட மாட்டாதா?

**பதில்:** நல்லுறவின் அடிப்படையில் கலந்தாலோசிக்கப்படலாம். ஆனால், சட்டத்தின் அடிப்படையில் அதற்கு அவசியமில்லை. பரஸ்பரம் உறவின் அடிப்படையில் தேவையெனில் கலந்தாலோசிக்கலாம்.

**கேள்வி :** வடமாகாண ஆளுநரை பதவி நீக்கவேண்டும் என்று வட மாகாண சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. இது தொடர்பில் என்ன கருதுகிறீர்கள்?

**பதில்:** வடமாகாண சபை எந்தவொரு தீர்மானத்தையும் நிறைவேற்றலாம். ஆனால், ஆளுநரை நியமிப்பதோ அல்லது நீக்குவதோ நூறு வீதம் ஜனாதிபதியின் அதிகார வரம்பிற்கே உட்பட்டது. அதைத் தேர்தல் பிரசாரக் காலங்களில் கூட மிகவும் தெட்டத் தெளிவாக மக்களிடம் தெரியப்படுத்தியிருந்தேன். பொய்யான பிரசாரத்தை மேற்கொள்கின்றார்கள். அதாவது 13ஆவது திருத்தச் சட்டத்தின் மாகாண சபைகளுக்கு இருக்கின்ற அதிகார வரம்பை மீறுகின்ற வகையில் எவரும் செயற்பட முடியாது.

**கேள்வி :** ஆனால், உங்களது கருத்தை மக்கள் நிராகரித்து விட்டார்களே?

**பதில்:** ஆம்! அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், இன்று நடைமுறையில் அவர்களுக்கு உண்மை நிலை தெரிய வருகின்றது. நாங்கள் தெரிவித்ததை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. பிழையான கருத்தை தெரிவித்தவர்களுக்கு ஆணை வழங்கினார்கள். ஆனால், அவர்கள் ஆணையிட்டாலும் நடைமுறைக்கு சில விடயங்கள் சாத்தியப்படவில்லையே.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட விடயங்களை அவர்களால் செய்து முடிக்க முடியும் என்றால் அதற்கும் நிச்சயமாக நாங்கள் ஆதரவை வழங்குவோம். எங்களைப் பொறுத்தவரை அவர்கள் நடைமுறைக்கு சாத்தியமற்ற பொய்ப் பிரசாரங்களைச் செய்து வந்தார்கள் என்று நாங்கள் குறிப்பிட்டோமே தவிர அவர்கள் குறிப்பிட்ட விடயங்களை அவர்கள் சாதித்துக் காட்டுவார்களேயானால் அதற்கு நாங்கள் எந்த விதத்திலும் தடையாக இருக்கமாட்டோம்.**

**கேள்வி :** மனித உரிமை ஆர்வலர்கள், புத்திஜீவிகள் உட்பட அனைவரும் வடமாகாணத்தில் முன்னாள் இராணுவ அதிகாரி ஆளுநராக இருப்பது பொருத்தமற்றது என்று விமர்சிக்கின்றார்கள். இது தொடர்பில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நிலைப்பாடு என்ன?

**பதில்:** முதலாவதாக, வடமாகாண சபையில் இது தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை தொடர்பில் நோக்கும்போது, தீர்மானம் எடுப்பது முக்கியமல்ல, அவர்கள் எடுக்கும் தீர்மானம் சட்ட வரம்புக்குள் உட்பட்டதாக இருக்க வேண்டும். 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் நோக்கும்போது, ஆளுநரை நீக்கும் அதிகாரம் மாகாண சபைக்கு இல்லை. எனவே எந்தவொரு தீர்மானத்தை எடுத்தாலும் அதில் பயனில்லை. இரண்டாவதாக, முன்னாள் இராணுவத்தளபதி ஆளு நராக இருக்கலாமா? என்பது எங்களைப் பொறுத்தவரை யார் ஆளுநராக இருக்கின்றார்கள் என்பது முக்கியமல்ல. அவர் ஒரு தனி மனிதர். அவருடைய அவருடைய அதிகாரம் அனைத்தும் ஜனாதிபதியின் விருப்புக்கு உட்பட்டது. அவர் ஜனாதிபதியின் பிரதிநிதியாகவே செயற்படுவார். அதாவது 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைய ஆளுநர் ஜனாதிபதி சொல்வதைத்தான் செயற்படுத்த முடியும்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# 4 பேரைக் கொண்ட குடும்பத்திற்கு மாதாந்தச் செலவு 40 ஆயிரம் ரூபா




(கொழும்பு)

நாட்டு மக்கள் பட்டினியில் வாடும் நிலையில் இந்த அரசாங்கம் உலக உணவுத் திட்டத்திறகு நன்கொடைகளை வழங்கி வருகின்றது 4 பேரைக் கொண்ட குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கான செலவுக்காக 40 ஆயிரம் ரூபா தேவைப்படுகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

முக்கியமற்ற சில நாடுகளுடன் உறவுகளைப் பேணிக் கொள்வதில் அரசாங்கம் தீவிரம் காட்டி வருகிறது.

இலங்கையின் ஏற்றுமதி நிறுவனங்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் தெளிவான திட்டமொன்றை உருவாக்க வேண்டும்.


இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் பாரியளவு நகைச்சுவைகளே காணப்படுகின்றது.

எனினும் அரசாங்கம் அரச ஊழியர்களின் கொடுப்பனவை 1200 ரூபாவினால் உயர்த்தியுள்ளது. உண்மையில் ஒரு மணித்தியாலத்திற்கான கொடுப்பனவு 1.68 ரூபாவினால் உயர்த்தப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட யோசனையில் 50000 மெற்றிக் தொன் எடையுடைய அரிசியை உலக உணவுத் திட்டத்திற்கு வழங்குவதாக யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

கருணை அடிப்படையில் கொடைகளை வழங்குவது மிகவும் சிறந்தது என்ற போதிலும், உள்நாட்டு மக்கள் பட்டினியில் வாடும் போது வெளிநாடுகளுக்கு நன்கொடை வழங்குவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

# சட்டம், ஒழுங்கு நிலைமை நாட்டில் பலவீனமடைந்துள்ளது



நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமை பலவீனமடைந்துள்ளது. அதனை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத் துவப் பேரவைத் தலைவர் கருஜய சூரிய தெரிவித்துள்ளார்.

ஹக்மீமன பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். சட்டம் ஒழுங்கு நிலைமை சீர்குலைந்துள்ளமை ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதித்துள்ளது.

17ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் சுயாதீன ஆணைக் குழுக்களை அமைத்து, நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமையை வலுப்படுத்த ஐக்கிய தேசியக்கட்சி முயற்சி எடுத்த போதிலும், அந்த முயற்சி தோல்வியடைந்துள்ளது என்றார்.

# மரணவிசாரணை அதிகாரிகளுக்கு டிப்ளோமா பயிற்சிநெறி ஆரம்பம்



கொழும்பு பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தில் 200 இற்கும் மேற்பட்ட திடீர் மரண விசாரணை அதிகாரிகள், மற்றும் சட்ட வைத்தியர்களுக்கான மரண விசாரணைகள் மற்றும் சட்டநுணுக்கங்கள் மருத்துவ அறிக்கை பற்றிய டிப்ளோமா பயிற்சி நெறி ஒன்று கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வுக்கு நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி ஹிரிம்புருகம மற்றும் மருத்துவ பீட பேராசிரியர் ரவீந்திர பெர்ணான்டோ ஆகியோர் தலைமையில் கடந்த சனிக்கிழமை பொரளையில் உள்ள மருத்துவக் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப் பயிற்ச்சி நெறி ஒரு வருட தொலைக்கல்வி டிப்ளோமா பாடநெறியாக பயிற்றுவிக்கப்படுகின்றது. மரண விசாரணை மற்றும் நீதிமன்ற வழக்குகளில் மரணங்களில் ஏற்படும் சட்டங்கள், வைத்திய பரிசோதனை அறிக்கைகள் இராசயன பகுப்பாய்வுகள் பற்றிய அறிவுகளை மேம்படுத்துவதே இப்பயிற்சி நெறியின் நோக்கமாகும்.

# நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்பட்டுள்ளது

## பிரதி சபாநாயகர் தெரிவிப்பு


(கொழும்பு)

நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டுள்ளதாக பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.ஹக்மீமன பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். கடந்த காலங்களை விடவும் தற்போது சட்டம் ஒழுங்கை அர சாங்கம் பேணிப் பாதுகாத்து வருகின்றது. கடந்த காலங்களில் அரசியல்வாதிகளின் தேவைக்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இப்போது அவ்வாறான ஓர் நிலைமை கிடையாது.

அரசாங்கத்தின் சிறந்த கொள்கைகளே நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமை வலுப்பெறுவதற்கான பிரதான ஏதுவாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வடக்கு, கிழக்கு, ஊவா மாகாணங்களில் இந்த வாரம் மின்னலுடன் கூடிய மழை




இலங்கை மற்றும் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் இந்த வாரம் முழுவதும் மழை நீடிக்கும் என்றும் வடக்கு, கிழக்கு ஊவா மாகாணங்களில் மின்னலுடன் கூடிய மழை இருக்கும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தமிழகத்துக்கு தென்கிழக்கே வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு நிலையால் இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும்

தென்பிராந்தியங்களில் மழை நீடிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.இதேவேளை கொழும்பு வளிமண்டலவியல் அதிகாரி கே.சூரியகுமார் தெரிவிக்கையில்

நாடளாவிய ரீதியாக எதிர் வரும் 3 நாட்களுக்கு பலத்த காற்றுடனான கடும் மழை பெய்யும். இதன் காரணமாக இலங்கையைச் சூழவுள்ள வளிமண்டலம் மேலும், பாதிப்படையலாம். அதற்கமைய 150 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சியினை எதிர்பார்க்க முடியும் மின்னலுடன் கூடிய மழை குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பெய்யலாம் எனத் தெரிவித்துள்ளார்.

# முகத்தை மறைத்து உடை அணிய மொறட்டுவ பல்கலையில் தடை

(கொழும்பு)

முஸ்லிம் மாணவிகள் முகத்தை மூடும் வகையில் நிகாப் அணிவதை மொறட்டுவ பல்கலைக்கழகம் தடை செய்துள்ளது. எனினும் உடலின் ஏனைய பகுதிகளை முழுமையாக மறைப்பதில் ஆட்சேபனை இல்லை எனத் தெரிவித்துள்ளது.பாதுகாப்பு காரணங்களுக்காக முகத்தை மறைப்பதனை மட்டும் அனுமதிக்க முடியாது என பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஏ.கே.டபிள்யு. ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

முதன் முறையாக இரண்டு முஸ்லிம் மாணவிகள் கண்கள் மட்டும் தெரியும் வகையில் முகத்தை மூடிக்கொள்ள அனுமதி கோரியிருந்தனர்.எனினும் பாதுகாப்பு விடயங்கள் இருப்பதால் அதற்கு அனுமதி வழங்க முடியாது என மாணவிகளுக்கு அறிவிக்கப்பட்டது. முகத்தை மூடிக் கொண்டு குற்றவாளிகள் பல்கலைக்கழகத்திற்குள் பிரவேசிக்கக் கூடும் என்பதால் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் முஸ்லிம் உறுப்பினர்கள் உள்ளிட்ட நிர்வாகத்துடன் கலந்துரையாடிய பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டது.



முகத்தைத் தவிர்ந்த தலை உள்ளிட்ட உடலின் ஏனைய பகுதிகள் மறையும் வகையில் ஆடைகளை அணிய முஸ்லிம் மாணவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 200 கண்டுபிடிப்புக்களை நாசமாக்கிய பெற்றோலில் இயங்கும் அடுப்பு

பொதுநலவாய நாடுகளின் அமர்வின் போது ஊடக நிலையமாக பயன்படுத்தப்பட்டு வந்த பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் தற்காலிக கட்டடம் கடந்த சனிக்கிழமை எரியுண்ட போது சுமார் 200 புதிய கணடுபிடிப்புக்கள் நாசமாகியுள்ளன.

சுற்றாடல்துறை அமைச்சினால் புதிய கண்டுப்பிடிப்பாளர் களின் கண்காட்சி ஒன்று இந்த கட்டடத்தில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

இந்தநிலையில் அந்தக் கண்டு பிடிப்புகளில் ஒன்றான பெற்றோலில் இயங்கும் அடுப்பு ஒன்றை இயக்கியபோது தீ ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக அங்கு கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்த சுமார் 200 புதிய கண்டு பிடிப்புக்கள் நாசமாகின.

குறித்த கட்டடம் வெறும் பிளாஸ்டிக்கினால் அமைக்கப்பட்டிருந்தமை காரணமாக தீ விரைவாக பரவி முழுமையாக கட்டடத்தையும் அழித்தது.

இதன்பின்னரே தீயணைப்பு படையினர் தமது நடவடிக்கைகளை மேற்கொண்ட னர். குறித்த மண்டபம் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவினால் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டு 15 நிமிடங்களில் தீக்கிரை யாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஹொரண நகர சபை கட்டடத் தொகுதியைப் பார்வையிடுவதற்காக, நேற்று முன்தினம் பிற்பகல் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்ட போது...





யாழ். அல் அஸ்ஹார் முன்பள்ளி மாணவர்களின் பொருட்காட்சியும், சந்தை விற்பனையும் கடந்த சனிக்கிழமை யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெற்றபோது யாழ். உதவிப் பிரதேச செயலர் கண்காட்சியை திறந்து வைப்பதையும், விருந்தினர்கள் கண்காட்சியை பார்வையிடுவதையும், சிறார்களின் விற்பனை சந்தையையும் காணலாம். (105)

# மாதாந்த உதவிக் கொடுப்பனவுகளை நடமாடும் சேவையூடாக வழங்குங்கள்

## கரியாலை நாகபடுவான் மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

பூநகரி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கரியாலைநாக படுவான் கிராம அலுவலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம், நோய் உதவிக் கொடுப பனவுகள், 70 வயதை அடைந் தோருக்கான 1000 ரூபா கொடுப் பனவு போன்றவற்றைப் பெறுப வர்கள் தமது கொடுப்பனவைப் பெறுவதற்காக 15 கிலோ மீற் றர் தூரத்திலுள்ள முழங்காவில் தபாலகத்திற்குச் செல்ல வேண்டி யுள்ளதாக கவலை தெரிவித் துள்ளனர்.

தமது கொடுப்பனவை மாதத தில் ஒருநாள் முழங்காவில் தபாலகத்தின் மூலம் நடமாடும் சேவையாக தமக்கு வழங்கி உதவ வேண்டுமென இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தபாலக உத்தியோகத்தர்கள், பிரதேசசெயலக சமூக சேவை அதிகாரி ஆகியோருடன் இணைந்து இச சேவையை வழங்க வேண்டு மெனவும் இதன் மூலம் தமது பிரயாணக் கஷடங்களைக் குறைக்க முடியுமெனவும் அவர் கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கண்டாவளை பிரதேச செய லகப் பிரிவில் பிரமந்தனாறு கிராம மக்களுக்கு இவ்வாறாக கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவிலும் மலையாளபுரம், பார திபுரம், கிருஸ்ணபுரம், விவேகா னந்தநகர் ஆகிய கிராம மக்க ளுக்கும் தபாலதிபரின் மூலமாக கொடுப்பனவுகளை நடமாடும் சேவையின் மூலம் விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

அதுபோல கரியா லைநாக படுவான் கிராம மக்கள தமக் கும் தபாலகத்தின் நடமாடும் சேவை மூலமாக கொடுப்ப னவுகள் வழங்கப்பட வேண்டு மெனக் கோரிக்கை விடுத்துள் ளனர். (90)

# பருத்தித்துறை சாலைக்கு புதிய பேருந்து வழங்கல்

(வடமராட்சி)

இலங்கை போக்குவரத்துச் சபை தலைமையகத்தினால் பருத்தித்துறை சாலைக்கு புதிய ஒரு கதவுடைய பேருந்து வழங் கப்பட்டுள்ளது.

கடந்த 27ஆம் திகதி பருத்தித்துறை சாலைக்கு இப்பேருந்து வழங்கப்பட்ட நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் இப்புதிய பேருந்து சேவையில் ஈடுபட்டுவருவதாக பருத்தித்துறை சாலை முகாமை யாளர் கந்தசாமி தெரிவித்துள்ளார். (116)

# நிழல்களின் நிஜங்கள் ஒளிப்படக் கண்காட்சி

(மானிப்பாய்)

யாழ்.இந்துக் கல்லூரியின் ஒளிப்படக்கலைக் கழகத்தின் ஏற்பாட்டில் 'நிழல்களின் நிஜங்கள்' ஒளிப்படக் கண்காட்சி நாளை, நாளை மறு தினம், மற்றும் 6ஆம் திகதிகளில் யாழ்.இந்துக் கல்லூரி நூலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.இந்துக்கல்லூரி ஒளிப்படக்கலைக்கழ கத்தின் தலைவர் சி.அனுஷாந் தலைமையில் நாளை மு.ப. 10 மணிக்கு இடம்பெறும். தொடக்க நிகழ்வின் பிரதம விருந்தினராக ஊடகவளங்கள் பயிற்சி மையத்தின் இயக்குநர் தே.தேவானந்த் கலந்து கொள்வார்.

இக் கண்காட்சி கல்லூரி மாணவர்களின் ஒளிப்படக் கலையியலின ஆர்வத்தினைத் தூண்டு வதற்காகவும், மாணவர்களின் திறமைகளை வெளிகொணரும் விதத்திலும் மாணவர்களின் புத்தாக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் இடம்பெறவுள்ளது. இக் கண்காட்சியில் யாழ். இந்துக்கல்லூரியின் மாணவர்கள், பழைய மாணவர்கள், கற்பிக்கும் ஆசிரியர்களினால் படம் பிடிக்கப்பட்ட புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட வுள்ளன.

இதனைக் கல்லூரி மாணவர்கள் மட்டுமன்றி பெற்றோர்கள், புகைப்படத்துறை ஆர்வலர்கள் உட்பட்ட அனைவரும் பார்வையிட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக கழகத்தின் பொறுப்பா சிரியர் நா.கு.மகிழ்ச்சிகரன் தெரிவித்துள்ளார். (48)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபையின் 2014ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பரீட்சைக்கு விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் நாளை புதன் கிழமை நண்பகலுக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அல்லது மாவட்ட இணைப்பு காரியாலயங்களுடாகவோ அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# அச்சுவேலி ஆஸ்பத்திரி வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(அச்சுவேலி)

அச்சுவேலி ஆஸ்பத்திரி வீதியானது கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் புனரமைப்புச் செய்யப்பட்ட நிலையில். தற்போது மீண்டும் சேதமடைந்து காணப்படுவதாக பயணிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதியானது குண்டும், குழியுமான காணப்படும் நிலையில் இவ்வீதியால் போக்கு வரத்தை மேற்கொள்வோர் பல்வேறு அசௌகரி யங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

மேலும் மழைகாலங்களில் வீதியானது சேறும் சகதியுமான நிலையில் காணப்படுவதுடன் பாத சாரிகளும் மற்றும் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வருவோரும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கு வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனவே, இந்த வீதியை தரமானமுறையில் புனரமைத்து தருமாறு உரியவர்களை பயணிகள் கேட்டுள்ளனர். (85)

# விருது வழங்கி கௌரவிப்பு




(யாழ்ப்பாணம்)

அகில இன நல்லுறவு ஒன்றி யத்தினால் சமூக சேவையாளர் களை கௌரவிக் கும் வகையில் வழங்கப்படும் சாம ஸ்ரீ தேசகீர்த்தி விருது யாழ். மாவட்டத்தின் சுதுமலை வடக்கைச் சேர்ந்த கணபதிப் பிள்ளை தவசீலன் என்பவருக்கு வழங்கப் பட்டுள்ளது.

கடந்த 23ஆம் திகதி திருகோணமலை சென்.மேரிஸ் கல்லூரியில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சர்குல் ஹாஜ் நஜீப் ஏ மஜீத் இவருக்கான விருதினை வழங்கி கௌரவித்தார். (54)

# முரசின் இன்றைய பலன்



(03.12.2013 செவ்வாய்க்கிழமை)

விஜய வருஷம் கார்த்திகை மாதம் 17 ஆம் திகதி.
அனுசம் காலை 06.26 வரை. கேட்டை பி.இ. 05.02 வரை.
அமாவாசை/பிரதமை.
இராகுகாலம் 03.15 - 04.45 வரை. சுபநேரம் 10.45 - 12.15 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சொத்துச் சேர்க்கவேண்டி நியாயம் தவறி நடத்தல், இழுபட்டுக் கொண்டிருக்கும் விவாகம் வெற்றி யடைந்ததால் மனமகிழ்வு. |
| ரிஷபம் | தேச சௌக்கியம் மேலோங்குவதினால் கை விட்டிருந்த வெளியூர் பயணத்தை மேற்கொள்ள முயற் சித்தல். |
| மிதுனம் | பிள்ளைகளுடன் அன்பாகப் பழக முயற்சி எடுத்தல், கள்ளப்பணம், கவரிங் நகை பற்றி விழிப்பாக இருந் தமையால் மோசடி நிலைவராதிருத்தல். |
| கடகம் | தலைக்கசவம் திருட்டுப் போனதால் அச்ச மடைதல், பாதுகாப்பில் அதிகளவு கவனம் எடுத்ததால் திருடர் கைவரிசை ஏற்படாமை. |
| சிம்மம் | எதிர்பாராமல் ஏற்பட்ட பாதிப்பினால் உளநலம் குன்றி அவதிப்படல், திடீர் சோதனையால் தண்டம். |
| கன்னி | இழுபட்டுக் கொண்டிருந்த பதவி உயர்வு முயற் சியால் கிடைத்ததில் மகிழ்வு, நட்டத்தில் இயங்கிய வியாபாரத்தைக் கைவிட்டு பங்குத்தொழிலை நாடுதல். |
| துலாம் | தவறைத் திருத்திக்கொள்ளல், விபத்தில் மயிரிழையில் தப்பி விடல். |
| விருச்சிகம் | காதல் என்ற பெயரில் ஏமாற்றமடைதல், எதிர்பாராத சிக்கலில் மாட்டிக்கொள்ளல். |
| தனுசு | வெளிநாட்டுவேலை வாய்ப்பை புறக்கணித்தல், விஷக்கடிக்கு சிகிச்சை பெறத்தவறியதால் ஏற்புநிலை பற்றிய அச்சம். |
| மகரம் | பொருளாதார நெருக்கடி ஏற்படல், திருமணத் திற்காக பெற்றோர் அலைந்து திரிந்ததால் உடல் நலக்குறைபாட்டினால் அவதியுறல். |
| கும்பம் | வெளியூர் பயணம் பணத்தால் கைநழுவிடல், சட்டபூர் வமற்ற முறையில் மின்சாரம் எடுத்து பாவனை செய் ததால் பிடிபட்டு தண்டம் செலுத்துதல். |
| மீனம் | வேண்டத்தகாத விடயத்தால் மனம் வருந்துதல், ஆலயவழிபாட்டில் நாட்டம். |

# உயர்தர பயிற்சியாளருக்கு இரண்டு மடங்கு ஊதியம்

## தயங்கும் இலங்கை கிரிக்கெட் சபை

Sri Lanka Cricket

(கொழும்பு)

உயர்தரத்திலுள்ள பயிற்றுவிப்பாளர்களை பணிக்கு அமர்த்துவதாயின் தற்போது இலங்கை கிரிக்கெட் சபை வழங்கி வரும் ஊதியத்தின் 2 மடங்கினை வழங்க வேண்டி ஏற்படும் என இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் தற்போதைய பயிற்றுவிப்பாளரான கிரஹம் போர்ட் எதிர்வரும் ஜனவரியுடன் தனது பதவியிலிருந்து விலகவுள்ள நிலையில், இலங்கை கிரிக்கெட் சபை புதிய பயிற்றுவிப்பாளரொருவரைத் தேடி வந்தது.

இதன்படி இலங்கையின் உதவிப் பயிற்றுவிப்பாளரான மார்வன் அத்தபத்துவும், மற்றொருவராக மார்க் டேவிஸும் இறுதிக்கட்ட நேர்முகத் தேர்விற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எனினும் மேலதிக வாய்ப்புகள் குறித்தும் இலங்கை கிரிக்கெட் சபை ஆராய்ந்து வருவதோடு, உயர்தர பயிற்றுவிப்பாளர்களை அணுகும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது.

இதன் ஓர் அங்கமாக அவுஸ்ரேலியாவின் உதவிப் பயிற்றுவிப்பாளர் ஸ்டீவன் ரிக்ஸன் அணுகப்பட்டபோதிலும், அவர் தனக்கு வழங்கப்பட்ட ஊதியம் தொடர்பாக பகிரங்கமாக விமர்சனங்களை வெளிப்படுத்தியிருந்தார். இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள நிஷாந்த ரணதுங்க, உயர்நிலைப் பயிற்றுவிப்பாளர் ஒருவர் நிச்சயமாக 100 சதவீதம் அதிகமான ஊதியத்தை எதிர்பார்ப்பார் எனவும், தங்களால் முடிந்த சிறந்த ஊதியத்தை தாங்கள் வழங்க முன்வந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சில நாடுகள் தங்களை விட 800 சதவீதம் அதிகமான வருமானத்தைக் கொண்டு வருவதாகக் குறிப்பிட்ட நிஷாந்த ரணதுங்க, ஆனால் இலங்கையின் வருமானத்தைக் கருத்தில் கொண்டே ஊதியத்தை வழங்க முடியும் எனக் குறிப்பிட்டார். எனினும் வருமானம் மாத்திரமே பிரச்சினையாக அமைந்தால் அது பற்றி ஆராயவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.


மார்வன் அத்தபத்து இலங்கையின் பயிற்றுவிப்பாளர் ஆவதற்கான தகுதிகளைக் கொண்டுள்ள போதிலும், தன்னைப் பொறுத்தவரை அவர் இன்னுமொரு பயிற்றுவிப்பாளரின் கீழ் 2015ஆம் ஆண்டு உலகக்கிண்ணம் வரை பணியாற்றுவதை விரும்புவதாக அவர் குறிப்பிட்டார்.



## எதிர்பார்ப்பு பூர்த்தி வென்றது மட்ரிட்

லா லிகா கால்பந்து தொடரில் வேலடாலிட் அணிக்கு எதிராக கேரத் பேல் ஹட்ரிக் கோல் அடித்தார். இதன் மூலம் ரியல் மட்ரிட் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஸ்பெயின் நாட்டின் மட்ரிட் நகரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இத்தொடரின் லீக் ஆட்டத்தில் ரியல் மட்ரிட் மற்றும் வேலடாலிட் அணிகள் மோதின. காயம் காரணமாக ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ பங்கேற்கவில்லை. இதனால் மற்றொரு நட்சத்திர இளம் வீரர் கேரத் பேல் மீது அதிக எதிர்பார்ப்பு எழுந்தது.

தன் மீதான எதிர்பார்ப்பை கெரத் பூர்த்தி செய்தார். மார்சிலோ உள்ளிட்ட சக வீரர்கள் கடத்திக் கொடுத்த வாய்ப்புகளை வீணடிக்காமல் கேரத் ஹட்ரிக் 'கோல் அடித்தார். இதற்கு எதிரணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. ஆட்ட நேர முடிவில் ரியல் மட்ரிட் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் ரியல் மட்ரிட் அணி, புள்ளிப் பட்டியலில் 3ஆவது இடத்துக்கு முன்னேறியது.



## புதிய இனிங்ஸ்

(கராச்சி)

கடந்த 2010ஆம் ஆண்டு கிரிக்கெட் சூதாட்டத்தில் சிக்கிய பாகிஸ்தான் வேகப் பந்து வீச்சாளர் முகமது ஆசிப்புக்கு 5 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது. கிரிக்கெட்டில் இருந்து ஒதுங்கி இருக்கும் அவர் தனது புதிய இனிங்ஸ் ஒன்றை ஆரம்பித்திருக்கின்றார். அவர் திரைப்படம் ஒன்றில் நடிக்க ஒப்புக் கொண்டுள்ளார்.

ஒன்ஸ்மோர் இன்டர்நஷனல் நிறுவனம் தயாரிக்கும் இந்தப் படத்தை பொலிவுட் இயக்குனர் இக்ரம் அக்தர் இயக்குகிறார். புதிதாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் சினிமா வாய்ப்பை ஏற்றுக் கொண்டதாக ஆசிப் தெரிவித்தார்.

# இளம் வீரர்களுக்குச் சவால்

(மும்பை)

தென்னாபிரிக்காவுக்கு எதிரானதொடர், அணியில் உள்ள இளம் வீரர்களுக்கு சவால் நிறைந்ததாக இருக்கும் என இந்திய கப்டன் டோனி தெரிவித்துள்ளார்.

மூன்று ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க டோனி தலைமையிலான இந்திய அணி நேற்று முன்தினம் தென்னாபிரிக்கா சென்றது.

மும்பை விமான நிலையத்தில் பத்திரிகையாளர் சந்திப்பின்போதே டோனி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சச்சின் இல்லாமல் செல்வது புதிய ஆரம்பம். அணியில் இடம்பெற்றுள்ள நிறைய வீரர்கள், அதிக டெஸ்ட் போட்டியில் விளையாடிய அனுபவமற்றவர்கள். ஆனால் ஒருநாள்போட்டிகளில் நிறைய பங்கேற்றுள்ளனர். எனவே இவர்களுக்கு தென்னாபிரிக்க தொடர் சவால் நிறைந்ததாக இருக்கும்.

இத்தொடர் மூலம், இளம் வீரர்கள் நிறைய விடயங்களை கற்றுக் கொள்ளலாம். பொதுவாக சொந்த மண்ணில் நடக்கும் போட்டியை விட, வெளிநாடுகளில் விளையாடும் போட்டிகள் சவாலானதாக இருக்கும். இம்முறை டெஸ்ட் தொடருக்கு முன், ஒருநாள் தொடர் அமைந்திருப்பது சிறப்பு. இதன்மூலம் இங்குள்ள ஆடுகளத்தின் தன்மை, தட்பவெப்பநிலைக்கு ஏற்ப வீரர்கள் தம்மை தயார் படுத்திக் கொள்ளலாம். எனவே, ஒருநாள் தொடர்,டெஸ்ட் போட்டி களுக்கான சிறந்த பயிற்சியாக அமையும் என நம்புகிறேன்.

சச்சினின் ஓய்வுக்குப் பின், துடுப்பாட்ட வரிசையில் 4ஆவது வீரராக யாரை களமிறக்குவது என இன்னும் முடிவு செய்யவில்லை. எந்த ஒரு வீரரும்,யாருடைய இடத்தையும் பூர்த்தி செய்ய முடியாது. வாய்ப்புக் கிடைத்தால் 4ஆவது இடத்தை நீக்கிவிட்டு, 1, 2, 3, 5, 6,...12 என களமிறங்கலாம்.

இப்பயணத்தில் வேகப்பந்துவீச்சாளர்கள் சாதிக்க வாய்ப்பு உள்ளது. ஏனெனில் தென்னாபிரிக்க ஆடுகளங்கள் பவுன்சர் மற்றும் வேகப்பந்துவீச்சுக்கு அதிகம் ஒத்துழைப்பு கொடுக்கும்.சமீபத்திய போட்டிகளில் இந்திய அணியின் பந்துவீச்சு முன்னேற்றம் அடைந்துள்ளது. ஒருநாள் போட்டியை பொறுத்தவரை கடைசி 10 ஓவர்கள் முக்கிய பங்குவகிக்கும். கடைசி 10 ஓவரில் துல்லியமாக பந்துவீசும் பட்சத்தில் அதிகளவு ஓட்டங்கள் வழங்குவதை கட்டுப்படுத்தலாம். டெஸ்ட் போட்டியில் தேவைப்படும் பட்சத்தில் 5ஆவது பந்து வீச்சாளரைப் பயன்படுத்துவோம்.கடைசி இரண்டு டெஸ்டில் 4 பந்து வீச்சாளர்களைமட்டுமே பயன்படுத்தினோம். சுழற் பந்துவீச்சாளர் அஸ்வின், நிச்சயம்



சாதிப்பார் என எதிர்பார்க்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் ஆட்டம் நாளை மறுதினம் ஜோகனஸ்பேர்க்கில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதல் டெஸ்ட் இன்று

(டுனிடின்)

நியூசிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலானமூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் இன்றைய தினம் நியூசிலாந்தின் டுனிடினில் நடைபெறவுள்ளது.

நியூசிலாந்திற்கான கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி மூன்று டெஸ்ட், ஐந்து ஒரு நாள் போட்டி மற்றும் இரண்டு ருவென்ரி-20 போட்டித் தொடரில் மோதவுள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்கு மிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி இன்றைய தினம் நியூசிலாந்தின் டுனிடினில் ஆரம்பமாகவுள்ளது. நியூசிலாந்து அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் வில்லியம்ஸன் காயம் காரணமாக முதல் டெஸ்டில் விளையாடவில்லை.

## திரும்ப வேண்டும் பொற்காலத்திற்கு



(சிட்னி)


அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி தனது பொற்காலத்துக்குத் திரும்ப வேண்டும். அதற்காக வீரர்கள் ஆக்ரோஷ ஆட்டத்தை ஆஷஸ் தொடரில் தொடர வேண்டும் என அந்த அணியின் பயிற்சியாளர் டரன் லீமன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஷஸ் தொடர் அவுஸ்ரேலியாவில் நடந்து வருகிறது. பிரிஸ்பேனில் நடைபெற்ற முதல் போட்டியில் அவுஸ்ரேலியா 381 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பிரமாண்ட வெற்றி பெற்றது. இதே ஆக்ரோஷ ஆட்டத்தை தொடர் முழுவதும் வெளிப்படுத்த வேண்டும் என லீமன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது, டென்னிஸ் லில்லி, ஜெப் தோம்ஸன், சப்பல், ஸ்ரீவோ ஆகியோர் அணியில் இருந்த நாட்கள் அவுஸ்ரேலிய கிரிக்கெட்டின் பொற்காலம். அந்தப் பொற்காலத்துக்கு அவுஸ்ரேலிய அணி மீண்டும் திரும்ப வேண்டும்.

மெர்வ் ஹியூக்ஸ், ரொட் மோர்ஸ், அலன் போடர் ஆகியோர் கிரிக்கெட்டின் மிகச்சிறந்த அடையாளமாக விளங்கினர். நாம் விதிமுறைகளுக்கு உட்பட்டு விளையாடினாலும், முகத்தில் ஆக்ரோஷத்தை விட்டுவிடக்கூடாது. மேற்சொன்ன ஜாம்பவான்கள் காலத்தில் அவுஸ்ரேலிய அணி அப்படித்தான் இருந்தது. பிரிஸ்பேனில் நடைபெற்ற முதல் போட்டியைப் போலவே, அவுஸ்ரேலியா தனது உச்சபட்ச திறனை வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

## உதைக்கத் தெரியும்; நடிக்கத் தெரியாது

(லண்டன்)



எனக்கு கால்பந்தை உதைக்கத்தான் தெரியும், நடிக்கத் தெரியாது, அதனால் எதிர்காலத்தில் திரைப்படங்களில் நடிக்கும் எண்ணம் இல்லை என்று பிரபல கால்பந்து வீரர் டேவிட் பெக்காம் தெரி வித்துள்ளார்.

பிரிட்டன் கால்பந்து அணி யின் முன்னாள் கப்டனான அவர், சில மாதங்களுக்கு முன்பு சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். உலகம் முழுவதும் கோடிக் கணக்கான இரசிகர்களைக் கொண்டுள்ள அவர் தனது இளமைக்காலம், எதிர்காலம் குறித்து மனம் திறந்து பேட்டியளித்துள்ளார். அவர் கூறியிருப்பதாவது:

ஓய்வு பெற்ற கால்பந்து வீரர்கள் சிலர் திரைப்படங்களில் நடித்து வருகின்றனர். எனக்கு கால்பந்தை உதைக்கத் தெரியும், நடிக்கத் தெரியாது. அதனால் எதிர்காலத்தில் திரைப்படங்களில் நடிக்கும் எண்ணம் இல்லை. அடிடாஸ் உள்ளிட்ட நிறுவனங்களின் விளம்பரப் படங்களில் ஓரளவுக்கு நடித்திருக்கிறேன். திரைப்படத்தில் எனது கதாபாத்திரத்தில் யாராவது நடிக்கலாம் என்றால் அதற்கு பொலிவுட் நடிகர் பிராட் பிட் மிகவும் பொருத்தமாக இருப்பார்.

அவருக்கு அடுத்தபடியாக லியானார்டோ டிகார்பியோவும் (டைட்டானிக் ஹீரோ) எனது கதாபாத்திரத்தை ஏற்று நடிக்கக் கூடியவர். அவர்களுக்கும் எனக்கும் உருவ ஒற்றுமைகள் உள்ளன.


என்னைவிட நான் மிகவும் நேசித்தது கால்பந்து. அந்த விளையாட்டில் இருந்து ஓய்வு பெற்றது எனக்கு மிகுந்த மனஉளைச்சலை ஏற்படுத்தியது. மனம் ரணமாக வலித்தது. சுமார் 4 மாதங்கள் எதுவுமே செய்யத் தோன்றவில்லை. இப்போது மனதைத் தேற்றிக் கொண்டு இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பியுள்ளேன் என்றார் பெக்காம்.

## பாக். அணி அறிவிப்பு

இலங்கை அணிக்கெதிரான ருவென்ரி -20 போட்டிகளுக்கான பாகிஸ்தான் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

2 ருவென்ரி-20 சர்வதேசப் போட்டிகள், 5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், 3 டெஸ்ட் போட்டிகள் அடங்கிய தொடரில் இலங்கை, பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன. இதில் ருவென்ரி-20 போட்டிக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

குழாம்: மொஹமட் ஹபீஸ் (கப்டன்) அஹமட் ஷெஹ்த், ஷார்ஜீல் கான், சொஹைப் மகூத், உமர் அமின், உமர் அக்மல், அப்ரிடி, சுல்பிகர் பாபர், பிலாவல் பற்றி, யுனைட் கான், சொஹைல் தன்வீர், அன்வர் அலி, சயீட் அஜ்மல், ஹரிஸ் சொஹைல்



கண்காட்சி கராத்தேயின் போது வீரர் மற்றும் கராத்தே ஆசிரியரின் அசைவுகளையும், பதக்கம் வென்றோர் விருந்தினர்களுடன் நிற்பதையும் காணலாம்

# மாகாண கராத்தே போட்டியில் பளை மத்திய கல்லூரி அசத்தல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட மாகாண மட்ட கராத்தே போட்டியில் கிளிநொச்சி பளை மத்திய கல்லூரி வீரர்கள் ஆறு தங்கம் உட்பட 16 பதக்கங்களை வென்று அசத்தியுள்ளனர்.

இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் வடக்கு மாகாண வீர,வீராங்கனைகளுக்கான கராத்தே போட்டி அண்மையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் முதன் முறையாகப் பங்குகொண்ட கிளிநொச்சி பளை மத்திய கல்லூரி வீரர்கள் ஆறு தங்கம் உட்பட 16 பதக்கங்களை வென்று அசத்தியுள்ளனர். பதக்கம் வென்ற வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளருக்கான பாராட்டு பாடசாலையின் பரிசளிப்பு விழாவின் போது இடம் பெற்றது. கடந்த 13ஆம் திகதி கல்லூரி அதிபர் சி. பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வின்போது பதக்கம் வென்ற வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர் சென்.சே. விஜயரர் ஆகியோரின் கண்காட்சி கராத்தே போட்டியும் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த. கலாமணி, சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. இருதயராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(எஸ்.பி.)

## விருது வென்ற பயிற்றுநர்கள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வர்ண இரவு நிகழ்வில் 26 பயிற்றுவிப்பாளர்களுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

வடமாகாண சபையின் நான்காவது வர்ண இரவு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றது. இதில் தேசிய, சர்வதேச போட்டிகளில் பதக்கங்களை வெல்வதற்கு உந்து சக்தியாக இருந்து அவர்களைப் பயிற்றுவித்த பயிற்சியாளர்கள் 26 பேருக்கு விருது வழங்கப்பட்டது.

விருது வென்றோர் விபரம் வருமாறு: ஆர்.சி. அபிசேயன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி), பி.சுஜந்தன் (வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலயம்), கே. சுவாமிநாதன் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ். சிறிதேவகரன் (உடற்கல்வி ஆசிரியர் - மன்னார் நானாட்டான் மகாவித்தியாலயம்), என். சிவறூபன் (பயிற்றுநர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), எம்.ஆர். மோகனதாஸ் (மாவட்ட விளையாட்டு அதிகாரி), ரி. பத்மசொரூபன் (உடற்கல்வி ஆசிரியர் வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி), ரி. தர்மகுமாரன் (உடற்கல்வி ஆசிரியர் உடுவில் மகளிர் கல்லூரி), என். முகுந்தன் (மெய் வல்லுநர் பயிற்றுநர் - கிளிநொச்சி மத்திய கல்லூரி), கே. விஜிதரன் (மெய்வன்மைப் பயிற்றுநர் வவுனியா மத்திய மகாவித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), சி. சுபாஸ்கரன் (ஆசிரியர் மகாஜனக்கல்லூரி), ரி. பாகீஸ்வரன் (உடற்கல்வி ஆசிரியர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி), எஸ். ரமணன் (பயிற்றுநர் யாழ். இந்துக் கல்லூரி), எஸ். அன்ரனி (உடற்கல்வி ஆசிரியர் - நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்), எஸ். முரளி (பயிற்றுநர் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஆர். பரஞ்சோதி (பயிற்றுநர் கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), எஸ். குமரேசன் (உடற்கல்வி ஆசிரியர் - வவுனியா அல் இக்பால் மகாவித்தியாலம்), டி.டபிள்யூ. ஜெயவர்த்தன (ஜூடோ பயிற்றுநர் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி), எஸ். விஜயராஜ் (கராத்தே பயிற்றுநர் சென். ஜோண்ஸ் கல்லூரி), ஏ. விதன் (பளுதூக்கல் பயிற்றுநர் - யாழ்ப்பாணம்), எம்.ஆர்.எம். யஸ்மின் (மன்னார் மாவட்ட ஆண்கள் கால்பந்தாட்டப் பயிற்றுநர்), ஜே.எ.டி.எல். ஜெயசேகர (பயிற்றுநர் வவுனியா மாவட்ட விளையாட்டு அதிகாரி), கே. தகேந்திரன் (முல்லைத்தீவு குத்துச் சண்டைப் பயிற்றுநர்), ஆர். கணேசமூர்த்தி (பயிற்றுநர் - யாழ்ப்பாணம்), எஸ். சிவகுமார் (குத்துச் சண்டைப் பயிற்றுநர் - யாழ்ப்பாணம்), ரி. ஞானராஜ் (உடற்கல்வி ஆசிரியர் - மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி).

## வென்றது நீக்கிலஸ்

(உரும்பிராய்)

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்டு வரும் தலைவர் கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டமொன்றில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி அபார வெற்றிபெற்றது.

கடந்த சனிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் கொக்குவில் பொற்பதி அணியும், நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியும் மோதின.

ஆரம்பம் முதலே அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்திய நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி வெற்றது.

## துணுக்காய் சம்பியன்

(உடுப்புக்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ண கரப்பந்தாட்டத் தொடரின் சம்பியன் பட்டத்தை துணுக்காய் பிரதேச செயலக அணி கைப்பற்றியது.

முல்லைத்தீவு மாவட்ட செயலக நலன்புரிச் சங்கத் தினால் நடாத்தப்பட்டு அரச அதிபர் வெற்றிக் கிண்ண பெரு விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடாத்தப்பட்டு வருகின்றது.

இதில் கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி கடந்தவாரம் உடுப்புக்குளம் அலை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் துணுக்காய் பிரதேச செயலக அணியும்,கரைதுறைப்பற்று பிரதேசசெயலக அணியும் மோதின. ஆரம்பம் முதலே சிறப்பாக ஆடிய துணுக்காய் பிரதேச செயலக அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. ஏனைய போட்டிகள் தற்போது நடைபெற்று வருவதாகபோட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## விளையாட்டு செய்திகள்

# யாழ். மாவட்ட எல்லே தெல்லிப்பளை யூனியன்ஸ் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

இலங்கை எல்லே சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட எல்லே போட்டியில் தெல்லிப்பளை யூனியன்ஸ் அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

வடபகுதியில் எல்லே போட்டி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், தேசிய ரீதியில் சிறந்த வீரர்களை உருவாக்கும் முனைப்புடனும் இலங்கை எல்லே சம்மேளனம் செயற்பட்டு வருகின்றது. இதன் ஓர் அங்கமாக யாழ். மாவட்ட எல்லே அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டி ஒன்றை நேற்று முன்தினம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடாத்தியது.

இதில் யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த பல அணிகள் பங்குகொண்டன. இருப்பினும் இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன்ஸ் அணியும், அரியாலை கரம்பன் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பளை யூனியன்ஸ் அணி 9-0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனாகியது.

இப்போட்டித் தொடரில் பங்குபற்றிய அனைத்து அணிகளுக்கும் எல்லே போட்டிக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதில் இலங்கை எல்லே சம்மேளனத்தைச் சேர்ந்த அதிகாரிகள், யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி மோகன், பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர்கள், மாவட்ட பயிற்றுநர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இப்போட்டி குறித்து கருத்துத் தெரிவித்த இலங்கை எல்லே சம்மேளன அதிகாரி, எல்லே போட்டி குறித்த விழிப்புணர்வு இன்மை காரணமாகவே இப்போட்டியை வீர,வீராங்கனைகள் நாடுவதில்லை. இது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி, சிறந்த வீரர்களை உருவாக்குவதே எமது நோக்கம். அந்த வகையில் வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் இவ்வாறான போட்டிகளை நடாத்தி விழிப்புணர்வை ஏற்படுத்துவோம். இதன் மூலம் எல்லே போட்டி விழிப்புணர்வு, ஆர்வமும் போட்டியாளர்களுக்கு ஏற்படும் என நம்புகின்றோம். இவ்வாறான செயன்முறையுடன் கூடிய வேலைத் திட்டம் வெற்றி அளிக்கும் பட்சத்தில் இலங்கை அணி எல்லே போட்டிகளில் சர்வதேச ரீதியாக சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ளும் என நம்புகின்றோம் எனத் தெரிவித்தார்.

(எஸ்.பி.)

## விரைவில் இறுதிப் போட்டி

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையிலான கால்பந்துத் தொடரின் இறுதி ஆட்டங்கள் விரைவில் நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். இதில் 14,16,18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில்போட்டிகள் இடம்பெறவுள்ளதாகவும், இதில் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் மட்டுவில் ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம் எதிர் நாவற்குழி மகாவித்தியாலயம், 16 வயதுப் பிரிவில் நாவற்குழி மகாவித்தியாலயம் எதிர் மட்டுவில் ஸ்கந்தவரோதயா வித்தியாலய அணிகள் மோதவுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (93)



உடுப்பி உணவுகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட அறுபது இருக்கும். தோசை அதிலொன்று. முதலில் கிருஸ்ணர் பிரசாதமாகத்தான் இது வழங்கப்பட்டது.

தனித்தனியே அரைத்து, இறுதியில்தான் சேர்த்துக் கலக்க வேண்டும்.

சில இடங்களில் இந்தக் கலவையில் லேசாக மஞ்சள் தூள் சேர்ப்பார்கள். தமிழ்நாட்டில் இந்த வழக்கம் இல்லை என்றாலும் ஆந்திரம், கர்நாடகம், வங்காள மாநிலங்களிலும் இலங்கையிலும் மஞ்சள் தூள் சேர்க்கிற வழக்கம் இப்போதும் இருக்கிறது.




# பருத்தித்துறைத் தோசையின் விசேசம்!



உடுப்பியில் கிருஸ்ணர் கோயில் எழுப்பப்பட்டது கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டு என்பதால் தோசையின் தோற்றமும் அப்போதுதான்...

தோசை ருசியாக இருப்பதற்கு அதன் அரவை நேரம் சரியாக இருக்கவேண்டுமென்பது உடுப்பிக்காரர்கள் சூட்சுமம். தோசை மா என்பது இட்லி மா மாதிரி நறநறவென்று இருக்கக்கூடாது. ரொம்பத் தண்ணியாகவும் ஆகிவிடக்கூடாது. சற்றே இளகிய வெண்ணெய் மாதிரி... திரண்டிருக்க வேண்டும். அரிசி மற்றும் பருப்பைத்

இலங்கையில் பருத்தித் துறைத் தோசை என்றொரு தோசை மிகப் பிரபலம். இதில் அரிசி, உழுந்துடன் கூட சிறிது கோதுமை மாவும் நிறைய வெந்தயமும் சேர்ப்பார்கள். மாவை அரைத்தபின் புளிக்க வைக்குமுன் அதில் தென்னங் கள் அல்லது பனங் கள் சேர்ப்பது இந்தப் பருத்தித்துறைத் தோசையின் முக்கிய அம்சம். கத்தரிக்காயையும் வெங்காயத்தையும் சேர்த்து வதக்கி, பொரியலுக்கும் கூட்டுக்கும் இடைப்பட்ட பதத்தில் எடுத்து இதற்குத் தொட்டுக்கொள்ளத் தருவார்கள். அதிருசியாக இருக்கும் என்று அத்தனை இலங்கைத் தமிழர்களும் வர்ணிக்கும் இந்தத் தோசை ஏனோ ஈழத்தைத் தாண்டி வரவேயில்லை.

இன்றைக்கு தோசைக்குப் பல முகங்கள் வந்துவிட்டன. வெங்காய தோசை, வெள்ளைப்பூண்டுத் தோசை, மசாலா தோசை, முட்டை தோசை, கல் தோசை, இளந் தோசை, குண்ணுத் தோசை, ரவா தோசை, தக்காளி தோசை, வெஜிடபிள் தோசை, வெறும் ஊத்தப்பம், ஆனியன் ஊத்தப்பம், பேப்பர் தோசை, பெப்பர் தோசை, புதினா தோசை"

ஆனால் தோசைக்கு உருளைக்கு கிழங்கு மசாலா தான் சரியான ஜோடி என்பதைக் கண்டுபிடித்த மாமேதை யாரென்று மட்டும் யாருக்கும் தெரியாது!

**(பா.ராகவன் எழுதிய 'உணவின் வரலாறு' நூலிலிருந்து)**

## பிரபலங்களின் பிறந்த தினங்கள்

5, 1901 வோல்ட் டிஸ்னி - கார்ட்டூன் திரைப் படங்களை அறிமுகப்படுத்தியவர்.

11, 1882 பாரதியார் - சுதந்திரத்துக்கு பாடுபட்ட மகாகவி.

18, 1878 ஜோசப் ஸ்டாலின் - ரஷ்யாவின் முன்னாள் தலைவர்.

21, 1804 பெஞ்சமின் டிஸ்ரேலி - இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர்.

21, 1503 நோஸ்டர்டாம்ஸ் - உலக நிகழ்வுகளை முன்னரே அறிவித்த தீர்க்கதரிசி

22, 1853 அன்னை சாரதா தேவி

22, 1887 எஸ். ராமானுஜம் - கணித மேதை

25, 0001 இயேசுநாதர் - கிறிஸ்தவ மத நிறுவனர்.

25, 1642 சேர். ஐசர்க் நியூட்டன் - விஞ்ஞானி.

26, 1893 மா சே துங் - சீனாவின் முன்னாள் பிரதமர் / ஜனாதிபதி.

27, 1822 லூயி பாஸ்டர் - நாய்க் கடிக்கு மருந்து கண்ட மருத்துவர்.

30, 1879 ரமண மகரிஷி

## நினைவு தினங்கள்

10, 1896 அல்பிரட் நோபல் - நோபல் பரிசு ஸ்தாபகர். டைனமைட் கண்டுபிடித்தவர்.

11, 2004 எம்.எஸ். சுப்புலட்சுமி - இசையரசி (எம்.எஸ்.எஸ்)

13, 1784 சாமுவேல் ஜோன்சன் - முதன்முதலாக ஆங்கில அகராதி



# மோடியின் தள்ளி வைக்கப்பட்ட மனைவி

– அ.மார்க்ஸ் –

சுமார் ஆறு மாதங்களுக்கு முன் குஜராத்தின் பனஸ்கந்தா மாவட்டத்தில் உள்ள ராஜோசோனா கிராமத்திற்குச் சென்றார் Open இதழின் செய்தியாளர் ஹைமா. அங்குள்ள அரசுப் பள்ளி ஒன்றில் முதலாம் வகுப்புப் பள்ளி ஆசிரியையாகப் பணிபுரியும் ஒரு 57 வயதுப் பெண்ணை நேர்காண்பது அவரது பயணத்தின் நோக்கம். கழிப்பறை, குளியலறை எந்த வசதியுமில்லாத ஒரு பத்தடிக்குப் பத்தடி "வீட்டில்" வசிக்கும் அப் பெண்ணின் பெயர் யசோதாபென் சிமன்லால் மோடி. குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடியின் தள்ளி வைக்கப்பட்ட மனைவி.

அன்று காலை அந்த அரசுப் பள்ளிக்குத் தன்னைக் காண வந்த ஹைமாவைப் பார்த்து எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ளப் பொங்கும் ஆர்வத்துடனும், இதழ் விரிந்த புன்னகையுடனும் ஓடிவந்த யசோதாவின் தோற்றத்தை இப்படி விவரிக்கிறார் ஹைமா.

"சற்றுப் பொருந்தாத ஜாக்கெட், எளிய பிரிண்டட் புடவை, சற்றே வளைந்த முதுகு, சுருக்கங்கள் விழுந்த முகம், வேலை செய்து கரடு தட்டிப்போன கரங்கள், அழுக்கேறியுள்ள வெடிப்புகள் நிறைந்த பாதங்களில் ரப்பர் செருப்புகள்..."

சுமார் 39 ஆண்டுகளுக்கு முன் வெறும் ஏழாம் வகுப்பு படித்திருந்த 18 வயது யசோதாவிற்கும், அப்போது அரசியல் ஏணியில் இவ்வளவு உயரம் ஏறியிராத நரேந்திர மோடிக்கும் அக்னி சாட்சியாகப் பெரியோர்களின் ஆசியுடன் திருமணம் நடந்துள்ளது.

எவ்வளவு நாட்கள் சேர்ந்திருந்தார்களோ தெரியவில்லை. அரசியலில் வேகமாக முன்னேறிக் கொண்டிருந்த மோடிக்கு இந்தப் படிக்காத கிராமத்துப் பெண்ணைப் பிடிக்கவில்லை. ஒரு சில நாட்களிலேயே தந்தை வீட்டுக்கு அனுப்பப்பட்ட யசோதா அதன்பின் விட்ட படிப்பைத் தொடர்ந்து, ஆரம்பப் பள்ளி ஆசிரியைப் பயிற்சியையும் முடித்து, ஒரு சில அரசுப் பள்ளிகளில் பணியாற்றி, 92ஆம் ஆண்டு முதல் ராஜோசோனாவில் ஆசிரியையாகப் பணியாற்றுகிறார்.

அது முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் கிராமம். மக்கள் மத்தியில் அவருக்கு நல்ல பெயர். பள்ளியில் பயிலும் முஸ்லிம் சிறார்களின் முன்னேற்றத்தில் அவர் காட்டும் அக்கறையை அனைவரும் பாராட்டுகின்றனர். ஒரு வேளை கணவரின் பாவங்களுக்கான பிராயச்சித்தமாக இருக்குமோ?

யசோதாவின் ஒரேஆசை, எதிர்பார்ப்பு எல்லாம் என்றாவது ஒரு நாள் அகமதாபாத்திலுள்ள முதலமைச்சர் அலுவலகம் அல்லது வீட்டிலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வரும் என்பதுதான். பாவம் யசோதா, மோடியின் தொலைபேசி வேறொரு பெண்ணைப் பின்தொடரக் கட்டளை இட்டுக் கொண்டிருப்பதை அறியார்.

"என் கதையைச் சொல்கிறேன்" என ஓடி வந்த யசோதாவை பள்ளித் தலைமை ஆசிரியர் பிரவீண்குமார் வியாசின் இரும்புக் குரல் தடுத்து நிறுத்தியது. "பள்ளி நேரத்தில் பேசக்கூடாது. வகுப்புக்குப் போ" என அவர் ஆணையிட்டார்.

"இடைவேளையின் போது கொஞ்ச நேரம் பேசுறேன்" என யசோதா கெஞ்சியதற்கு வியாஸ் மசியவில்லை.

பத்திரிகையாளர்கள் யாருடனும் யசோதா பேசக் கூடாது என்பது மேலிடத்து ஆணை.

பரிதாபமாகத் திரும்பிச் சென்ற யசோதா சற்று நேரத்தில் ஓடி வந்தார். "மன்னியுங்கள், என் கணவருக்கு எதிராக நான் எதுவும் சொல்லமாட்டேன். அவர் பெரிய அதிகாரத்தில் உள்ளவர். என் பிழைப்புக்கு ஒரே ஆதாரம் இந்த வேலைதான். இதுக்கும் எதுவும் ஆபத்து வந்துவிடக் கூடாது" எனச் சொல்லித் திரும்பிப் பாராது நடந்தார்.

இடையில் பிரவீண்குமார் யார் யாருடனோ தொலைபேசினார். சற்று நேரத்தில் ஏகப்பட்ட வாகனங்கள் பள்ளியை நோக்கி வந்தன. வண்டிகளைப் பள்ளி வளாகத்திற்குள் நிறுத்திவிட்டு இறங்கியவர்கள் தலைமை ஆசிரியரின் அறையை நோட்டம் விட்டவாறு சிறிது நேரம் நின்று விட்டுக் கலைந்தனர்.

மாலையில் பள்ளி விட்டதுதான் தாமதம். தலையைக் குனிந்தவாறே ஓடி வந்த யசோதா அங்கு நின்றிருந்த ஆட்டோ ஒன்றில் ஏறி 20 கி.மீ தூரத்தில் இருந்த தன் சகோதரனின் வீட்டிற்கு ஓடினார்.

சற்று நேரத்தில் ஒரு இளைஞன் அங்கு வந்தான். திகைத்து நின்ற ஹைமாவிடம் தன் பெயர் பிரகாஷ் என்றும் "ராம் சேது" என்கிற அரசு இதழ் ஒன்றின் நிருபர் எனவும் அறிமுகப்படுத்திக் கொண்டு, அவரை விரைவாக அந்தக் கிராமத்தை விட்டு வெளியேறுமாறு எச்சரித்துவிட்டுச் சென்றான்.


கிராமத்து மக்கள் சொன்னவற்றில் ஒன்று: யசோதாவின் ஒரே பொழுதுபோக்கு ஜோசியம் பார்ப்பது. எல்லா ஆருடக்காரர்களிடமும் அவர் கேட்கும் கேள்வி அகமதாபாத்திலிருந்து அழைப்பு வருமா என்பதுதான். ஜோசியர்கள் "நிச்சயம் வரும்" என்று நம்பிக்கை ஊட்டிக் கொண்டே இருக்கின்றனராம்.

# தமிழின் சிறப்பு

நான் 15 வயதிலே எழுத ஆரம்பித்தேன். தமிழே தெரியாத உனக்கு எப்படி எழுத வரும் என்று கேட்டார்கள். எனக்குத்தான் தமிழ் தெரியாது. தமிழுக்கு என்னைத் தெரியும் என்று நான் சொன்னேன்.

எப்படி தன் குழந்தைகளை தாய் அறிந்து கொள்வாளோ அது போல, தமிழ்மொழி என்னை அறிந்து கொண்டது. நான் ஐந்தாம் வகுப்பில் இரண்டு முறை பெயிலானதோடு படிப்பை நிறுத்தியவன் என்றாலும், தமிழிலே பிழையற எழுதவும், பேசவும், படிக்கவும் இயல்பாகவே அறிந்திருந்தேன். அதுதான் தாய்மொழியின் தனிச்சிறப்பு. படிப்பது என்றால் பிற மொழிகளைத்தான் படிக்க வேண்டும். ஓர் ஆசானை வைத்துக்கொள்ள வேண்டும். தாய்மொழியைப் பயில்வதற்கு வாழ்க்கையே சிறந்த ஆசான் என்று கண்டேன்.

**(அமெரிக்காவின் நியூஜெர்ஸி தமிழ் சங்கத்தில் எழுத்தாளர் ஜெயகாந்தன் பேசியது).**



# மனித குலத்திற்கு எச்சரிக்கை!

"கடைசி மரத்தையும் வெட்டிய பின்னர், கடைசி மீனையும் பிடித்த பின்னர், காற்றின் கடைசித் துளியையும் மாசுபடுத்திய பின்னர், ஆற்றின் கடைசிச் சொட்டு நீரையும் விசமாக்கிய பின்னர்தான் தெரிய வரும், இந்தப் பணத்தைத் தின்னமுடியாது என்று".

- இது "செவ்விந்தியர்கள்" என அழைக்கப்படும் அமெரிக்கப் பழங்குடி மக்கள், நவீனத்துவம் என்ற பெயரில் ஆளும் வர்க்கம் இந்தப் பூமியில் செய்யும் அழிவு வேலைகளைக் கண்டு ஆற்றாமையுடன் சொன்ன வாக்கியம்.



# டிசம்பர் மாதத்தில்...



உருவாக்கியவர்.

23, 1524 வாஸ்கோடகாமா - கடல் வழியாக இந்தியாவுக்கு வந்த போர்த்துக்கீசியர்.

24, 1973 ஈ.வெ.ரா.பெரியார்.

24, 1987 எம்.ஜி. ராமசந்திரன் - தமிழக முன்னாள் முதல்வர்.

**சுதந்திரம் கொண்டாடும் நாடுகள்**

1 - ஐஸ்லாந்து
2 - ஐக்கிய அரபு நாடுகள்
5 - போர்த்துக்கல்
6 - பின்லாந்து
11 - தென் ஆபிரிக்கா
12 - கென்யா
16 - கஜகஸ்தான்
16 - பங்களாதேஷ்
21 - ஆர்மினியா
24 - லிபியா
26 - ஸ்லோவேனியா
29 - மங்கோலியா

**முக்கிய நிகழ்வுகள்**

1, 1981 - எய்ட்ஸ் நோய் கண்டறியப்பட்டது.

6, 1992 - அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது.

17, 1903 - ரைட் சகோதரர்கள் முயற்சியினால் முதன் முதலாக வானில் விமானம் பறந்தது.

24, 1968 - அமெரிக்காவின் அப்போலோ - 8 நிலவின் சுற்றுப் பாதையில் சுற்றி வரத் தொடங்கியது - இதுதான் முதன்முதலாக பூமியைத் தவிர இன்னொரு துணைக் கோளின் சுற்று வட்டப் பாதையில் சுற்றியது.

25, 1885 - இந்திய தேசிய காங்கிரஸ் பிறந்தது.

25, 1898 - மேடம் கியூரி ரேடியத்தை அறிவித்த நாள்.

25, 1911 - நோர்வேயைச் சேர்ந்த அமுண்ட்ஸன் என்பவர் அண்டார்டிகாவைக் கண்டுபிடித்தார்.

26, 2004 - சுனாமி பாதிப்பு. இலங்கை, இந்தோனேஷியா, இந்தியா உள்பட 12 நாடுகளில் பூகம்பம், ரிக்டர் 9.00. இரண்டு இலட்சத்துக்கும் மேல் பலி, கட்டடங்கள் இடிபாடு - பலர் காயம்.

**முக்கிய தினங்கள்**

1 - எய்ட்ஸ் தினம்
2 - உலக அடிமைத்தொழில் ஒழிப்பு தினம்
2 - உலக மாசு தடுப்பு நாள்
3 - ஊனமுற்றோர் தினம்
5 - உலகத் தன்னார்வலர் தினம்
7 - உலக விமானப் போக்குவரத்து தினம்
9 - சர்வதேச ஊழல் ஒழிப்பு தினம்
10 - உலக மனித உரிமைகள் தினம்
12 - உலக அமைதி நாள்
13 - உலக ஆஸ்மா தினம்
20 - ஐ.நா. சர்வதேச ஒருமைப்பாடு தினம்
22 - உலக கணக்கு தினம் (கணிதமேதை ராமானுஜம் பிறந்தநாள்)
23 - உலக விவசாயிகள் தினம்
25 - கிறிஸ்மஸ்
26 - சுனாமி தினம்

# குழந்தைகளும் திரைப்படமும்




ஹைதராபாத்தில் நடைபெற்ற 18 ஆவது சர்வதேச குழந்தைகள் திரைப்பட விழாவில் கலந்துகொண்ட நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த பெண்-இயக்குநர் சன்னட் நேயே முன்வைத்த கருத்துகள் முக்கியமானவை.

சன்னட் கூறியதில் முக்கியமான விஷயம், குழந்தைகள் திரைப்படம் என்றால் எவை என்பதை வரையறுக்கும் சீர்மைச் சட்டம் தேவை என்பதுதான். குழந்தைத் திரைப்படங்களில் வன்முறைக் காட்சிகள், மூடநம்பிக்கைகள், சமுதாயத்தில் உள்ள கொடிய வழக்கங்கள், விபத்துக் காட்சிகள் ஆகியவற்றைச் சித்திரிப்பதில் சீர்மைச் சட்டம் தேவை. இது உலகம் முழுமைக்குமான பொதுச்சட்டமாக அமைய வேண்டும் என்பதுதான் அவருடைய விருப்பம். ஏனென்றால் குழந்தைகளை இந்தத் திரைக்காட்சிகள் வேகமாக "தொற்றி"க்கொண்டு விடுகின்றன.

ஹைதராபாத்தில் நிறைவடைந்த குழந்தைகள் திரைப்பட விழாவில் தங்க யானை பரிசு பெற்றிருக்கும் "கவ்போய்" (சிறுபறவை) என்ற படமும் இரண்டாம் பரிசு பெற்றுள்ள A Horse on a Balcony (ஜேர்மன் மொழி) படமும் பெரியவர்-குழந்தைகள்-விலங்குகள் ஆகிய மூவருக்குமான அன்பின் இடைவெளியை இட்டு நிரப்பும் கதைக்களன் கொண்டவை. முதல் படத்தில், தாய் இல்லாத வீட்டில் தந்தைக்கும் மகனுக்கும் இடையில் ஏற்பட்ட அன்பின் விரிசலுக்கு குறுக்கே புரிதலை ஏற்படுத்தி இணைக்கிறது சிறுபறவையின் வரவு. இரண்டாவது படத்தில், லொத்தரில் பரிசாகக் கிடைத்த குதிரையை விற்று கடனை அடைக்க விரும்பும் அண்டை வீட்டுக்காரரின் தேவையைப் பூர்த்தி செய்ய சிறுவனை உந்துகிறது குதிரையின் மீதான நேசம்.

இந்த இரு படங்களிலும், பெரியவர்களால் கவனிக்கப்படாத சிறுவர்கள், தாங்கள் எதிர்கொள்ளும் பறவை, குதிரையால் ஆட்கொள்ளப் படுகிறார்கள். பிராணிகள் மீதான அன்பின் வழியாக பெரியவர்களைப் புரிந்துகொள்கிறார்கள்.

தமிழில் இத்தகைய கதைகளுக்கு பஞ்சமே கிடையாது. புராணக் கதை தொடங்கி, நவீன கதைகள் வரை எல்லாவற்றிலும் இத்தகையக் கதைகள் உள்ளன. பாரதத்தில் நீதிக்கதைகள் அனைத்திலும், மனிதர்களின் தீயகுணங்களையும் நல்ல குணங்களையும் விலங்குகளின் மீது ஏற்றிச் சொல்லப்படுவதைக் காணலாம்.

ஆனால், தமிழில் - குழந்தைப் படங்களில் கதைமாந்தராக இடம்பெறும் குழந்தைகள் பேசும் வசனங்கள் பெரியவர்களுக்கு உரித்தானவை. செய்யும் சாகஸங்களும் பெரியவர்களுக்கானவை. ஆனால் நடிப்பவர்களோ குழந்தைகள்.

"வா ராஜா வா" படத்தில் இடம் பெற்ற சிறுவனை விட, "குட்டி" படத்தில் (தனுஷ் -ஸ்ரேயா நடித்தது அல்ல) இடம்பெறும் சிறுமி பல மடங்கு பரவாயில்லை. அந்த கதைபாத்திரமும் வளர்இளம் பெண்ணுக்குரியது. ஆனால் சிறுமி நடித்த பட்டம். "தாரே ஜமீன் பார்", "தங்கமீன்கள்" இவற்றிலும்கூட பெரியவர்களுக்கான செய்தி அதி-கமாகி, குழந்தைகளுக்கான உலகம் பின்தங்கிவிடுகிறது. காரணம், வணிகச் சந்தை. போட்ட அசலாவது கிடைக்க வேண்டுமே என்கிற எண்ணம்.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். தமிழ்ப்படக்கதைகள் சிறுபிள்ளைத்தனமானவை. கதாநாயகிகள் எல்லாரும் குழந்தைத்தனமாக இருக்கிறார்கள். கனவுக்காட்சிகளில் அவர்கள் அணியும் உடைகள், "பேபி ஷொப்"பில் தேர்வு செய்யப்பட்டு இவர்களுக்காக பெரிதாக தைக்கப்படுபவை-பெரியவர்கள் ரசிப்பதற்காக!

இலங்கை நேரப்படி கடந்த 28-11-2013 நள்ளிரவு 12.15 மணிக்கு ஐசோன் வால்நட்சத்திரம் சூரியனுக்கு வெகு அருகில் போனதை, உலகத்தில் உள்ள அத்தனை தொலைநோக்கிகளும், விண்ணியல் ஆர்வலர்களும் ஆர்வமுடன் அவதானித்தனர். ஐசோன் என்னாகப் போகிறது, சூரியனுக்கு அருகே அது போகும்போது என்ன நடக்கும் என்று அத்தனை பேரும் காத்திருந்தனர்.

அது தப்பிப் பிழைக்க வாய்ப்பில்லை, பொசுங்கிவிடும் என்று பொதுவான கருத்து இருந்தாலும் அது தப்பிப் பிழைக்க வாய்ப்புள்ளதாகவும் சிலர் நம்பிக்கையுடன் காத்திருந்தனர். ஐசோன் வால்நட்சத்திரம் சூரியனுக்கு மிக அருகே போகும் காட்சியை நேரடியாக தொலைநோக்கிகள் மூலம் காண பல்வேறு நாடுகளில் உள்ள விண்வெளி அமைப்புகள், கோளரங்கங்கள் ஏற்பாடு செய்திருந்தன.

செப்ரெம்பர் 2012இல் சர்வதேச ஒளி ஊடகக் கூட்டமைப்பு (ஐசோன்) தான் இந்த வால்நட்சத்திரத்தைக் கண்டுபிடித்தது. எனவே அதற்கு ஐசோன் என்று பெயரிடப்பட்டது. சூரிய மண்டலத்துக்கு அடுத்துள்ள "ஊர்ட்" எனும் மேகப் பகுதியில் இருந்து வரும் ஒரு புதிய வால்நட்சத்திரம் இது. மேலும், பௌர்ணமி நிலவின் பிரகாசத்தை விட மிக அதிக பிரகாசமாக இந்த வால்நட்சத்திரம் இருக்கும் என்று நம்பப்படுவதால் இதற்கு அதிக முக்கியத்துவம் கிடைத்துள்ளது.

கடந்த 200 ஆண்டுகளாக நாம் பார்த்த வால்நட்சத்திரங்கள் எல்லாம் மீண்டும் மீண்டும் சூரியனையே சுற்றி வருபவை ஆகும். ஆனால் முதன்முறையாக சூரியனை நோக்கி வந்தது இந்த ஐசோன் வால்நட்சத்திரம். "ஊர்ட்" மேகப் பகுதியில் இருந்து வரும் இந்த வால்நட்சத்திரம் சூரியக் குடும்பம் தோன்றியபோது உருவானது.

# சூரியனை நெருங்கிய ஐசோன் வால்நட்சத்திரம்



அதனால் அது சூரியக் குடும்பம் தோன்றிய காலத்தில் உள்ள தகவல்களைப் பத்திரமாக வைத்திருக்கும். அதன் மூலம் உலகம் தோன்றியதைப் பற்றி மேலும் புதிய ஆய்வுகளை முன்னெடுக்க உதவும் என்பதே அது முக்கியமாகக் கவனிக்கப்பட்டதற்கு காரணம்.

உலகம் முழுவதும் பெரும் பரபரப்பையும், விறுவிறுப்பான எதிர்பார்ப்பையும் ஏற்படுத்திய இந்த ஐசோன் வால் நட்சத்திரம், சூரியன் சுற்று வட்டத்தை நெருங்கியதும் அடுத்த சில நிமிடங்களில் மறைந்தது. ஐசோனை மீண்டும் பார்க்கவில்லை என்று நாசா விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

எனவே ஐசோன் சிதறுண்டு சூரியனின் வெப்ப அலையில் சிக்கி பொசுங்கிப் போயிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஆனால் ஐசோன் வால்நட்சத்திரம் முழுமையாக அழிந்து போகவில்லை. அதன் சிதறலின் ஒரு பகுதி தப்பிப் பிழைத்துள்ளதாக சிலர் கருத்து தெரிவித்துள்ளதால், ஐசோன் முழுமையாக அழியவில்லையோ என்ற விவாதம் எழுந்துள்ளது. தப்பிப் பிழைத்த ஐசோனின் பகுதியை மீண்டும் காண முடியும் என்ற நம்பிக்கையிலும் இவர்கள் உள்ளனர். இந்த சிதறல் தப்பிப் பிழைத்தது உண்மை என்றால் டிசம்பர் மாதத்திலும் ஐசோ-னின் ஒரு பகுதியைக் காணும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கும் என்பது இவர்களின் கருத்தாகும்.

ஆனால், கடும் வெப்பம் அதாவது கிட்டத்தட்ட 2600 பாகை செண்ரிகிரேட் மற்றும் சூரியனின் ஈர்ப்பு சக்தி ஆகியவற்றின் காரணமாக ஐசோன் வால்நட்சத்திரம் சிதறுண்டு போயிருக்கவே அதிகம் வாய்ப்புகள் உள்ளன.




# முயற்சி



படிப்பில் படுசுட்டியான ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங் பிரிட்டனில் 1942 ஆம் ஆண்டு பிறந்தவர். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் மூன்றாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்த போது, தன் உடல் தளர்ந்திருப்பதை உணர்ந்தார். காரணமின்றி அடிக்கடி கீழே விழுந்தார்.

21 வயதில் மருத்துவ சோதனைகள் பல செய்தார் தசைகளை வெட்டி எடுத்து பரிசோதனை செய்த போதிலும் மருத்துவர்களால் தெளிவான முடிவுக்கு வரமுடியவில்லை. ஆனால் இரண்டு மூன்று ஆண்டுகளில் மர ணம் உறுதி என்று தீர்மான மாகக் கூறினார்கள்.

மருத்துவமனையில் துயரத்தில் இருந்த ஸ்டீபனுக்கு அருகே சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட ஒரு சிறுவனின் மரணம் பயம் தருவதற்குப் பதிலாக தைரியம் கொடுத்தது. உடல் தன் கட்டுப்பாட்டில் இல்லாவிட்டாலும், மூளையும் சிந்தனையும் முழு உற்சாகத்துடன் இருப்பதை உணர்ந்தார்.

சக்கர நாற்காலியில் இருந்தபடியே பல்கலைக்கழக ஆய்வினை முடித்து பேராசிரியர் ஆனார். ஏ.எல்.எஸ்.எனக் கண்டறியப்பட்ட நரம்பு நோய் முற்றியதால் 1985 ஆம் வருடம் அவரது உடல் முழுவதும் செயல் இழந்தது.

ஆனாலும் முயற்சி நம்பிக்கையை இழக்காமல வலது கண்ணை மட்டுமே அசைத்து எழுத்துக்களை அடையாளம் காட்டிப் பாடம் நடத்தியதுடன், வரலாற்றுத் திருப்புமுனையான புத்தகம் ஒன்றும் எழுதினார். (A Brief History of Time) என்ற அந்தப் புத்தகம் ஸ்டீபனின் புகழை உச்சிக்கு உயர்த்தியது.


கலிபோர்னியாவைச் சேர்ந்த கணனி நிபுணர் ஒருவர் ஸ்டீபனின் கண்ணசைவுக்கு இயங்கும் கணிப்பொறி மென்பொருள் ஒன்றைக் கண்டுபிடித்து சக்கர நாற்காலியில் பொருத்தித் தர, சிரமம் குறைந்து அதிகமாகச் சிந்தித்து நிறைய எழுதிக் குவித்தார் ஸ்டீபன்.

**வாழ்வின் எல்லைகளையும் கடந்து நம்மை வாழ்விப்பது முயற்சி ஒன்றே என்பதை உள்வாங்கிக் கொண்டால் நம் வாழ்வும் வரலாறாகும்.**

காலம் எப்போது தொடங்கியது? எப்போது முடியும்? காலத்தை பின்னோக்கிச் சென்று காண முடியுமா? விண்வெளிக்கு எல்லை உண்டா? என எல்லோர் மனதிலும் இருக்கும் கேள்விகளுக்கு அறிவியல் ரீதியாகப் பதில் சொல்லி மலைக்க வைத்த ஸ்டீபன் ஹாக்கிங்கின் வாழ்வு மருத்துவர்களுக்கு இன்றும் ஒரு புதிர் தான்.

ஒரே ஒரு கண்ணை மட்டும் வைத்துக் கொண்டு தொடர்ந்து முயற்சி செய்து கண்ணை மீண்டும், மீண்டும் அசைத்து, அறிவியல் ரீதியாக விளக்கங்களைத் தந்து ஒரு மனிதரால் உலகப்புகழ் பெற முடியும் என்றால் முயற்சியின் வலிமை எத்தனை மகத்தானது என்பதை உணரலாம்.

# செல்வம்




புத்தரை வழிகாட்டியாகக் கொண்ட துறவி ஒருவர் வாழ்ந்து வந்தார்.அந்த ஊரின் மிகப் பெரும் பணக்காரர் ஒருவர், ஒருநாள் அவரைச் சந்திக்கச் சென்றார். அப்போது பணக்காரர், எனது மகிழ்ச்சியையும், செல்வத்தையும் பெருககும் வகையில் ஊக்கப்படுத்தும் வார்த்தைகள் ஏதாவது எழுதிக் கொடுங்கள் அது என்னுடைய குடும்பத்தையும், எனது சந்ததியினரையும் வளமாக்கட்டும் என்று பணக்காரர் துறவியிடம் கேட்டார்.

அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த அந்தத் துறவி ஒரு பெரியதாளில் தந்தை இறப்பான், மகன் இறப்பான், பேரன் இறப்பான் என்று எழுதிக் கொடுத்தார்.


இதனைப் பார்த்த அந்தப் பணக்காரருக்கு கடும் கோபம் வந்துவிட்டது. நான் உங்களிடம் எனது மகிழ்ச்சியையும், செல்வத்தையும் பெருக்கும் வகையில் ஊக்கப்படுத்தும் வார்த்தைகளை எழுதிக் கொடுக்கச் சொன்னால், மனதைப் பாதிக்கும் வார்த்தைகளை எழுதிக் கொடுக்கிறீர்களே? இது சரியா...? என்று கேட்டார். அமைதியாகத் துறவி சொன்னார், உனக்கு முன்னர் உன் மகன் இறந்தால், உன் குடும்பம் துயரமடையும்.

அதேபோல் உன் மகனுக்கு முன்னால் உன் பேரன் இறந்து விட்டால் அதைவிடப் பெரும் துயரம் உங்களைச் சூழும். நான் சொன்ன வரிசைப்படி உங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் இறப்பார்களேயானால அதுவே இயற்கை. அதுவே சிறந்த செல்வம் மற்றும் மகிழ்ச்சி.

# இரண்டும் ஒன்றல்ல கண்டுபிடியுங்கள் வேறுபாட்டை



# அமெரிக்க கிரகாம் மலை தொலைநோக்கி கொலம்பஸ் திட்ட தொலைநோக்கி




அமெரிக்காவில் அரிசோனா மாநிலத்தில் உள்ள கிரகாம் மலை உச்சியில் 10,500 அடி உயரத்தில் அமைக்கப்பட்ட தொலைநோக்கி தான் உலகில் மிகப் பெரியது.

மிகத் திறனுடையது. இரு கண்கள் வழியாக ஓர் ஆடியின் விட்டம் 8.4 மீற்றர். இதன் குவிய தூரம் (Focus Length) 9.6 மீற்றர். உலகின் விண்வெளி ஆய்வில் இது முக்கிய பங்கு வகிக்கிறது.

இந்தியாவில் மிகப் பெரிய தொலைநோக்கி தமிழகத்தில் வேலூர் மாவட்டத்தில் காவலூரில் உள்ளது. 2.34 மீற்றர் விட்டமும், 3.25 மீற்றர் குவியல் தூரமும் உடையது. ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை?

# அம்புக்குறியால் பயணித்து அந்த 2013 ஐ அடையுங்கள்




# நிலவுக்குச் சுற்றுலா



1968 ஆம் ஆண்டில் மனிதன் முதன்முதலில் நிலவில் கால் வைத்தான். இது நடந்து 45 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது மனிதர்கள் நிலவுக்கு சுற்றுலா செல்லப் போகிறார்கள்.

உலகம் முழுதும் சுற்றி அலுத்து விட்டதல்லவா? விண்வெளியில் தங்கும் விடுதி அமைத்து அங்கு மனிதர்களை அழைத்துச் செல்லும் அணியை ஒரு ரஷ்ய நிறுவனம் தொடங்கியிருக்கும் செய்தியை கடந்த இதழில் படித்திருப்பீர்கள். இது லண்டனைச் சேர்ந்த எகஸ்காலிபர் அல்மாஸ் என்ற நிறுவனம் நிலவுக்கு சுற்றுலா அழைத்துச் செல்லும் செய்தி. இன்னும் இரண்டு ஆண்டுகளில் அதாவது 2015 இல் நிலவுச் சுற்றுலா தொடங்கப்போகிறது. நிலவுக்கு சென்றுவர செலவு எவ்வளவு தெரியுமா? 700 கோடி ரூபாயாம். இதற்காக ரஷ்யாவிடமிருந்து 6 சிறப்பு விண்கலங்களை வாங்கிவிட்டார்கள். ஒரு விண்கலத்தில் 3 பேர் மட்டுமே பயணிக்க முடியுமாம். முதல் சுற்றுலாவில் 18 பேர் செல்லப் போகிறார்கள். அதற்கான முன் பதிவும் ஆரம்பித்து விட்டார்கள். பூமியிலிருநது 3 இலட்சத்து 76 ஆயிரத்து 586.5 கிலோமீற்றர் தூரம் சென்று திரும்பும் இச்சுற்றுலா தொடர்பான செயல்முறை விளக்கத்தையும் காட்டிவிட்டர்கள்.

# வடமாகாண விவசாய அமைச்சினால் பாதீனியத்தை ஒழிக்கும் நடவடிக்கை



(மானிப்பாய்)

"படையெடுக்கும் பாதீனியத்திற்கு விடை கொடுப்போம் வாரீர்' என்னும் தலைப்பிலான பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கைகள் வடமாகாண விவசாய கமநலசேவைகள் கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசன மற்றும் சுற்றாடல் அமைச்சு ஆரம்பித்துள்ளது,

பாதீனியச் செடிகளை அழிக்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இச்செயற்பாட்டில் கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட நிலாவரைப் பகுதியிலி ருந்து பாதீனியச் செடிகளை அழிக்கும் நடவடிக்கையை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து நவக்கிரி விவசாயப்பண்ணையில் விவசாயிகளுடனான கலந்துரையாடல் ஒன்றும் இடம் பெற்றது.

வடமாகாண விவசாய அமைச்சின் பாதீனியஅழிப்பு நடவடிக்கைகள் எதிர்வரும் 31ஆம் திகதிவரை மேற் கொள்ளப்படவுள்ளது.

எனவே, ஒவ்வொரு விவசாயத் திணைக்களங்களும், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து இதனை அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இதன்போது தெரிவிக்கப்பட்டது. (48)

# சுகாதாரத் திணைக்களத்தின் தகுதிகாண் பரீட்சைகள்

(யாழ்.நிருபர்)

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் ஆரம்ப வைத்திய உத்தியோகத்தர்கள் IIஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு முன்பும், பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் தமது சேவையை உறுதிப்படுத்துவதற்கு முன்பும் தேர்ச்சியடைய வேண்டிய திணைக்களப் பரீட்சைகள் எதிர்வரும் ஜனவரிமாதம் 12ஆம் திகதி நடைபெறுமென சுகாதார அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாக தயாரித்து இம்மாதம் 17ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத் தலைவரிடம் சமர்ப்பிக்கவேண்டும். விண்ணப்பத்துடன் முகவரி எழுதப்பட்ட 30 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9x4 அளவுள்ள கடித உறை ஒன்றும் அனுப்பப்படல் வேண்டும்.

நிறுவனத்தலைவர்கள் சான்றுப்படுத்திய விண்ணப்பங்களை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னதாக சுகாதார அமைச்சுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (10)

# பருத்தித்துறை சென்.தோமஸ் பாடசாலையின் ஒளிவிழா

(வடமராட்சி)

பருத்தித்துறை சென்.தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையின் ஒளிவிழா இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் அருட்சகோதரி மேயூட் லூமினா ஜோர்ஜ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை ஜோன்மௌலீஸ், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய கத்தோலிக்க பாடசேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி டொறின மன்மதராஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக அருட்தந்தை நிருபன் நிஷாந்தன் ஓய்வுநிலை அதிபர் திருமதி சீதாதேவி சிவசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (109)

# காரை நலன்புரிசங்கம் பிரான்சில் கூட்டம்

(யாழ்.நிருபர்)

பிரான்ஸ் காரை நலன்புரி சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரான்சில் நடைபெற்றது 14 நிர்வாக சபை உறுப்பினர்களைக் கொண்ட இச் சங்கத்தின் 13 உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

காரைநக்ர் பிரதேசத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைகள் பற்றியும் சங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் இக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் தெரிவித்துள்ளார். (10)

# தேசிய நாடகப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரி முதலிடம்



(மானிப்பாய்)

கலாசார மற்றும் கலைஅலுவல்கள் அமைச்சும் கொழும்புரவர் திரையரங்க மண்டபமும் இணைந்து நடாத்திய நாடகப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 'எங்களின் வாழ்வு' என்னும் நாடகம் வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற நாடகப் போட்டியில் தெரிவு செய்யப்பட்டு தேசியமட்ட நாடகப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

இந்நாடகத்திற்கான எழுத்துருவாக்கம் நெறியாள்கையினை கல்லூரி நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.குமரன் மேற்கொண்டுள்ளார்.

இசையினை கோகுல் பிரசாத் றொசான் ஆகியோரும் மேடை முகாமையினை பிரவீனும் மேற்கொண்டுள்ளார்கள்.

இந்நாடகத்தில் நடிகர்களாக அபிசேக், சண்முகப்பிரியன், கயேந்திரன், அபினாஸ், கனோஜன், ஜனார்த்தன் தர்மிசன், சுகிர்தன், லக்ஸன், பிரவீன், சதீஸ்குமார், பெல்ஜியோ, தர்சன், சாள்செபஸ்ரியான், விதுர்சன், அட்சரன், சுரேஸ்மோகன், பௌறசரன் ஆகியோர் நடித்துள்ளனர். தேசிய மட்டப்போட்டிகள் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ரவர் கொழும்பு மண்டபத்திரையரங்கில் இடம்பெறவுள்ளது. (48)

# பதிவிருக்கப் பெட்டகம்

நாம் எல்லைப்புறத்தில் இருந்தாலும்
நமக்குள் எல்லைகள் இருக்கவில்லை
சந்திரர் சூரியர் மீதான
நேசிப்புப் போல
நம்மீதான நமது
நேசிப்பும்
பொதுவானதுதான்
உன்னை நோக்கிய
ஆயுததாரியும்
உறவுக்காரன்தான்.

– ரத்னஸ்ரீ

இப்போது தீ அணைந்துவிட்டது
வீட்டுக்கு வாருங்கள்
சிறுசுகளையும் சுமந்துகொண்டு...
கோவில் முன்றலில்
தேவியக் கண்டு
மனம் ஒட்டிக்கொண்டபோது
சொல்லாமலே
அவளுடன் சென்றாய்
நாம் அனுமதி மறுத்தபோதும்.
இப்போது கோபம் தணிந்துவிட்டது
பாசத்தால் மனம் கனிந்துவிட்டது
யாழ்ப்பாண வண்ணங்கள் பதித்த
பாயொன்று கொண்டுவா.

– மகிந்த சந்திரசேகர

வீடொன்றைக் கட்டவென
ஏழெட்டு இடங்களில்
வாங்கிய கடன்களை
சாகும்வரை அடைக்க
வேண்டியிருப்பினும்
பெரிதாக இல்லாவிடினும்
இருக்கிறது எனக்கே எனக்கென
அசிங்கமற்ற சிறு வீடொன்று
தன்பாட்டில் விழுந்து கிடக்க....
வலிக்காமல்
ஊசி முனைகள் மீது
நடந்து செல்லும் விதத்தை
இப்போது நன்கறிவேன் நான்.

– இஸுரு சாமர சோமவீர

பூரணம் என்றே
எண்ணியிருந்தேன்
நீ வந்து – இதயத்தின்
இடைவெளிகளை
காட்டும் வரை

– மாலினி விஜேசேகர

விடிகாலையிலெழுந்து வேலைக்குப் போகும் அப்பா
இருள் சூழ்ந்த பிறகு வீட்டுக்கு வருவார்
விடிகாலையிலெழுந்து வேலைக்குப் போகும் அம்மா
இருள் சூழ்ந்த பிறகு வீட்டுக்கு வருவார்
விடிகாலையிலெழுந்து பள்ளிக்கூடம் செல்லும் நான்
பள்ளிக்கூடம் விட்டு வகுப்புக்கள் முடிந்து
இருள் சூழ்ந்த பிறகு வீட்டுக்கு வருவேன்
எமக்கென இருக்கிறது
நவீன வசதிகளுடனான அழகிய வீடொன்று.

– தக்ஷிலா ஸ்வர்ணமாலி

முதியவளான என்னில் துப்பாக்கிக் கத்தியால்
குத்திக் குத்தி என்ன தேடுகிறாய் பிள்ளையே
வெடிப்புக்கள் கண்டு பால் வறண்ட மார்புகளன்றி
வேறெவை சுருக்கங்கள் விழுந்த என்னிடம்
வெடிக்கக் கூடியவை அனேகம்
பலவீனமான என் நெஞ்சுக்குள் உள்ளன
தென்படாது உன் இதயத்துக்கு அவை
நானும் உன் மத்தியில் இன்னுமொரு தாய்தான்
உன் புன்சிரிப்பைக் காணவென பாசத்தின் ஈரத்தை நிரப்பி
உனை நோக்கிப் புன்னகைக்கிறேன்
உனது வதனத்திலொரு மாற்றத்தைக் காண இயலாவிடினும்
இச்சீருடையைக் களைந்ததன் பின்னர் எப்பொழுதேனுமுனக்கு
புன்முறுவல் தோன்றுமென்பது நிச்சயம்.

– தர்மசிறி பெனடின்

இது என்ன விசித்திரமான தேசம்
கைக் குழந்தைகள் தவிர்த்து
ஆண் வாடையேதுமில்லை
எல்லோருமே பெண்கள்
வயதானவர்கள்
நடுத்தர வயதுடையோர்
யுவதிகள்
எல்லோருமே பெண்கள்
விழிகளில் வியப்பைத்
தேக்கிய நண்ப
பாழ்பட்டுச் சிதைந்து
வெறுமையான
இவ் விசித்திர நகரில்
எஞ்சியுள்ள
எல்லோருமே விதவைகள்
எமக்கெனவிருந்த
கணவர்களைத்
தந்தையரை சகோதரரை
புத்திரர்களை
சீருடை அணிவித்து
வீரப் பெயர்கள் சூட்டி
மரியாதை வேட்டுக்களின்
மத்தியில்
புதைத்திட்டோம்
செத்துப்போனவர்களாக

– சஜீவனீ கஸ்தூரி ஆரச்சி

புண்ணியம் நிறைந்த
அரசமரத் தடாகத்தில்
நன்னீர் எடுத்து
கோயில் முன்றலில்
மல்லிகையுடன்
ரமழான் நிலவொளியில்
பாங்கோசையுடன்
நாம் கல்வாரி மலை ஏறுவோம்
நாம் சிறிபாத மலை ஏறுவோம்
பூமியெங்கும் பூக்கள் நிறைந்தது
நமக்குத் தம்பியே
கிளைகள் பிளந்து
கனிகள் வருவது
நமக்குத் தங்கையே
இந்த நிலத்தைப் பிரித்த
கோட்டைத் தாண்டி வா தம்பியே
மனதில் பூத்த மலர்ச்செண்டை
தா தம்பியே
காசிம், தர்மே,
அந்தனி, ராஜசுந்தரம்
கண்ணீரில் வள்ளம் போகுமா?
நமதுலகை நாமே சமைப்போமா?

– ஜயதிலக பண்டார

# புனரமைப்பு பணி முடிவுறும் நிலையில் புதுக்குடியிருப்பு மருதமடுக் குளம்



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பிலுள்ள மருதமடுக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் முடிவடையும் நிலையிலுள்ளன.

யுத்தம் காரணமாக 2008ஆம் ஆண்டு சேதமடைந்த இந்தக் குளத்தினைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், 2011ஆம் ஆண்டு 200 மில்லியன் ரூபா செலவில் இந்தக் குளத்தை புனரமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நிறைவுக் கட்டத்தினை அடைந்துள்ளது.

இந்தக் குளத்தில் சேகரிக்கப்படுகின்ற நீரின் மூலம் 4,000 ஏக்கர் பயிர்ச்செய்கையினை சிறுபோகத்தின்போது மேற்கொள்ள முடியும் என்பதுடன், இதனால் 1000 விவசாயக் குடும்பங்கள் பயன்பெறுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (கே)

# மோதித்தள்ளியது ரயில்

கையடக்கத் தொலைபேசியில் உரையாடியவாறு ரயில் பாதையில் பயணித்துக் கொண்டிருந்த ஒருவர் சரக்கு ரயிலில் மோதுண்டு காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம், ஹட்டன் ஜந்தா ரயில்வே கடவையில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில், ஹட்டன் ரொத்தர்ஸ் கொலனியை சேர்ந்த கிருஸ்ணன் (51 வயது) என்பவரே காயமடைந்துள்ளார்.

இவர் ஆபத்தான நிலையில் டிக்கோயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

# மின்சார விநியோகம்



வவுனியா மாவட்டத்தின் ஆச்சிபுரம் கிராமத்திற்கு "வடக்கின் வசந்தம்" திட்டத்தின் கீழ் மின்சார இணைப்பு நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

ஆச்சிபுரம் கிராமத்திற்கு சுமார் 15 வருடங்களின் பின்னர் மின்ணிணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வடமாகாணசபை உறுப்பினர் தர்மபால செனவிரத்தின, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், சிறிடெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மாற்றுவலுவுடையோரும் சமூகத்தின் பணிகளும்



ஐக்கிய நாடுகள் சாசனத்தால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தினம் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 3ஆம் திகதி ஒவ்வொரு கருப்பொருளில் உலகம் பூரா அனுஸ்டிக்கப்பட்டுவருகின்றது. வலுவிழந்தோர் எதிர்நோக்கும் இயலாமைப் பிரச்சினைகள், சவால்கள் தடைகள் தொடர்பில் சமூகத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் இது கொண்டாடப்படுகின்றது.

இந்த வருடம் "தடைகளைத் தகர்த்த திறந்த கதவுகளுக்கு ஊடாக அனைவருக்குமான சமுதாயம்" எனும் தொனிப்பொருளில் நிகழ்வுகள் அனுஸ்டிக்கப்படுகின்றது.

அரச, தனியார் துறை நிறுவனங்கள் மாற்றுவலுவுள்ளோரைப் பாதுகாக்கும் அமைப்புக்கள் எனப் பல்வேறு மட்டத்திலும் இந்நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

இன்று உலகத்தில் நோய், விபத்து, கலவரம், உள்நாட்டு பிரச்சினைகள் போன்ற பல்வேறு காரணிகளால் இயலாமைப்பிரச்சினை உள்ளவர்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றார்கள்.

உலகம் முழுவதும் 600 மில்லியன் மக்கள் மாற்றுத்திறனாளர்களாக இருக்கின்றார்கள் அல்லது உலக சனத்தொகையில் 10 வீதம் அவைகளில் 400மில்லியன் மக்கள் ஆசியா, பசிபிக் பிராந்தியத்தில் வசிக்கின்றார்கள்.

இலங்கை சனத்தொகையில் 1.6வீதம் பேர் வலுவிழந்தவர்களாக உள்ளனர் (274,711) என்று ஒரு புள்ளிவிபரம் கூறுகிறது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலக எல்லைக்குள் 8995 (சமூக சேவை திணைக்களத்தினுடைய புள்ளி விபரம்) மாற்றுத்திறனாளிகள் வசித்து வருகின்றனர். இவர்களில் உடல் ரீதியாகவும், செவிப்புலனற்றவர்களாகவும், பார்வைத் திறன் குறைவானவர்களாகவும், உளநோய்க்கு உட்படடுள்ளனர். இவர்களில் பலர் தொழில் வாய்ப்புகளின்றி உள்ளனர், சமூக துணையின்றி ஒதுங்கியுள்ளதுடன் மற்றவர்களில் தங்கி வாழ்பவராகவும் உள்ளனர்.

சமூகத்தில் இவர்களது உரிமைகள் மறுக்கப்பட்டு அல்லது மழுங்கடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவர்களை பொது இடங்களிலும் வைபவங்களிலும் ஒதுக்கி வைக்கப்படும் தன்மை காணப்படுகின்றது. இதனால் இவர்கள் உடல், உள ரீதியாக மேலும் பாதிப்படைந்துள்ளனர்.

தனிநபர்களும் சமூகத்திலுள்ளோரும் வலது குறைந்தோரை வித்தியாசமானவராக நோக்கும் மனப்பாங்குகளே சமூகக் காரணிகளாகும். அதாவது அவர்களை ஒரே மனித உரிமைகளையும் பொறுப்புக்களையும் உடைய சமத்துவமான மனிதர்களாகக் காண்பதில்லை. ஏனையோருக்கு வழங்கும் அதே சந்தர்ப்பங்களை அவர்களுக்கு வழங்குவதுமில்லை வலது குறைவுடைமை காரணமாக சமூக நீரோட்டத்திலிருந்து அவர்கள் விலக்கி வைக்கப்படுவதுண்டு.

எமது சமுதாயங்களைப் பீடித்துள்ள பல மூடநம்பிக்கைகளில் கலாசாரக் காரணிகள் உள்ளடங்குகின்றன. வலது குறைவுடைமையையும் வலது குறைந்தோரையும் துர்ப்பாக்கியராவும் துர்அதிஷ்டத்திற்கான அடையாளமாகவும் கருதுவதுண்டு.

இயலாமைப் பிரச்சினை

## இன்று சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினம்

உள்ள நபர்களின் சமூக, அரசியல், பொருளாதாரம், அடிப்படை உரிமைகள் மற்றும் கலாசாரம் என்பவற்றுடன் கூடிய முழுமையான பங்களிப்புக்கு 1982ம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சாசனம் பிரகடனப்படுத்தியுள்ளது. இயலாமைப் பிரசசினை உள்ளவர்கள் சமுகத்தில் சகல மட்டங்களிலும் சமஅளவில் பங்குபற்ற ஏற்றவகையில் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த இத்தகைய தினங்களின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இலக்காக அமைகின்றது.

வாழ்க்கையின் அத்தியாவசிய தேவைகளை முழுமையாகவோ, பகுதியாகவோ அனுபவிக்கமுடியாதவாறு தனியாரைக் கட்டுப்படுத்தும் சூழல் மற்றும் பௌதிக தடைகள் என்பதால் வலதுகுறைந் தோரும் ஏனையவர்கள்போல் சமத்துவமாக வாழ சர்வதேசத்தால் மனிதாபிமான நடவடிக் கைகள் மேம்படுத்த இத்தினங்கள் அனுஷ்டிக்கப்பட்டுவருகின்றன.

நாட்டின் வறியவர்களில் மிகவும் வறுமைக்குட்பட்டவர்களாக (வறுமைக்கோட்டின் கீழ்) வாழ்பவர்கள் வலது குறைந்தவர்களே என்று அண்மைய மதிப்பீடுகள் தெரிவிக்கின்றது. சமுகத்தில் உள்ளவர்களால் அவர்கள் உள்வாங்கப்பட்டு சமத்துவமான முறையில் வலுவிழப்புடன் பொருந்திய தொழில், கல்வி, வேலை போன்ற வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்குமானால் இவ்வாறான துரதிஷ்டமான நிலக்குத் தள்ளப்பட்டிருக்கமாட்டார்கள்.

இத்தினங்களில் இயலாமைப பிரச்சினைகள் பற்றிய புரிதலை மேம்படுத்தவும் மற்றும் குறைபாடுடைய நபர்களின் கண்ணியம், உரிமை மற்றும் நல்வாழ்வுக்கான ஆதரவைத் திரட்டும் நோக்கத்தையும் கொண்டுள்ளது. இது எல்லா அம்சங்களிலும் குறைபாடுடைய நபர்களின ஒருங்கிண்ணப்பு மூலம் அரசியல், சமூக பொருளாதார மற்றும கலாசாரத்துடன் கூடிய ஒன்றிணைந்த வாழ்க்கைக்கு விழிப்புணர்வு அதிகரிக்க உதவுகின்றது.

மாற்றுத்திறனாளர்கள் பற்றிய சமுகத்தின் எதிர்மறையான மனோபாவத்தையும் அவர்கள் பற்றிய தவறான கணிப்பீடுகளையும் மாற்றியமைப்பதற்காக இவ்விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் பிரச்சினைகள் என்பவற்றை அடையாளம் காணும் வகையில் இந்நிகழ்வுகள் இடம்பெறுவது வரவேறகத்தக்கது.

மாற்றுத்திறனாளர்களின் உரிமைகள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்பவைகளைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் இந்த மனிதாபிமானப் பணியை அனைவருக்கும் கொண்டு செல்ல நிகழ்வுகளை நடாத்துவது அவசியமானதொன்றாகும். அந்தவகையில் மாற்றுவலுவுடையோர் சார்பாக எமது நாட்டிலும் விசேட சட்டங்களும் சலுகைகளும் விசேட அமைப்புக்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

தேசியக் கொள்கைக் கூற்று "சமூகநீதி என்ற தார்மீக அடிப்படையில் வலது குறைந்தோரின் உரிமைகளை வல[illegible] குறைவு பற்றிய தேசியக் கொள்கையானது மேம்படுத்திப் பாதுகாக்கின்றது. இலங்கையின் சமத்துவமான குடிமக்கள் என்ற வகையில் முழுமையானதும் திருப்திகரமானதுமான வாழ்க்கையை அனுபவிக்கவும் தமது அறிவு, அனுபவம் குறிப்பிட்ட திறன்கள், திறமைகள் மூலம் தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யவும் அவர்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படும்.

அந்தவகையில வலுவிழந்தோரை புரிந்துகொள்ளுதல், பாதுகாத்தல், உயர்த்துதல் போன்ற இலக்குடன் சமூகத்துடன் இணைக்கும் புனர்வாழ்வுப பணிக்கு பல அமைப்புக்கள் ஆர்வமுடன் செயற்பட்டுவருகின்றமை யானது பாராட்டுக்குரியதே.

எனினும் மனித உன்னத பணியில் கடந்த 26வருட காலமாக அர்ப்பணிப்புடன் கூடிய பல சேவைகளைச் செய்துவந்த யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம். மாற்றுவலுவுள்ளோர் மத்தியில் தனக்கென்று தனி இடத்தைப் பிடித்து மாற்றுவலுவுள்ளோரின் அபிவிருத்திப் பணிக்கு ஆற்றி வரும் சேவைகள் வலுவிழந் தோர் இயல்பு வாழ்வு வாழ வழி வகுக்கும் என்பதில் என்றும் ஐயமில்லை.

* * * *

செ.பிரிந்தாபரன்

# க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை - 2013

# கல்வி முரசு

தமிழ்

பகுதி - I - II

2 மணி



1) "பெருந்தடங்கட் பிறை நுதலார்க்கெலாம்..." என்பதில் வந்த "நுதல்" என்பதன் பொருள்
   1) வதனம்   2) தாமரை   3) தவளை   4) நெற்றி

2) "காவலரைத் தன் சேடி காட்டக் கண்டீரிருவர்..." என்பதில் வந்த "சேடி" என்பதன் ஒத்தசொல்
   1) தோழி   2) போர்வீரன் 3) சேவகன்   4) வண்ணமகள்

3) "......கொண்டானின் துன்னிய கேளிர் பிறரில்லை...." இதில் வந்த "கேளிர்" என்பதன் ஒத்தசொல் 2) உறவினர்
   1) தெய்வம்   2) உறவினர்
   3) பகைவர்   4) அரசன்

4) "ஊழி திரண்டதோ கங்குல்...." என்பதில் வந்த "கங்குல்" என்பதன் எதிர்ப்பதம்
   1) உலகம்   2) திங்கள்   3) பகல்   4) இரவு

5) "ஓட்டக் கூத்தர் மீது குலோத்துங்கன் நம்பிக்கை கொண்டிருந்தான்" இதிலுள்ள "நம்பிக்கை" என்பதன் எதிர்ச்சொல்
   1) தும்பிக்கை 2) அவநம்பிக்கை 3) நாணயம் 4) கோரிக்கை

6) "விதவைகள் ஒன்று கூடி சங்கம் அமைத்தனர்" இதில் வந்த "விதவை" என்பதன் எதிர்ப்பாற்சொல்
   1) பாணன் 2) நிபுணன்   3) தனயன் 4) தபுதாரன்

7) "காளமேகம் ஒரு இசை இரசிகனாவான்" இதில் வந்த "இரசிகன்" என்ற வடசொல்லுக்குரிய தமிழ்ச்சொல்
   1) சுவைஞன் 2) கலைஞன்   3) காலன்   4) பாடகன்

8) "ஒரே சமயத்தில் பதினாறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றலுடையவன்" என்ற தொடர்மொழிக்குரிய ஒரு சொல்
   1) சதாவதானி 2) அட்டாவதனி   3) சோடசாவதானி 4) தசாவதானி

9) "உயிர் துறக்கும் துணிவுடன் வடதிசையை நோக்கி ஊணின்றி இருத்தல" என்பதன் ஒரு மொழி
   1) வடக்கிருத்தல் 2) மானியம்   3) ஏகபோகம்   4) பிதிர்க்கடன்

10) "ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம்" ஆகியவற்றின் தொகைச்சொல்
   1) நான்கு உபாயம்   2) நான்மறை   3) நாற்பயன்   4) நாற்கவி

11) "ஐந்து பணத்துக்கு குதிரையும் வேண்டும் அது ஆறு கடக்கப் பாயவும் வேண்டும" என்ற பழமொழியால் உணர்த்தப்படுவது
   1) பணவலிமை 2) பேராசை 3) வறுமையின் செம்மை 4) முயற்சி

12) "குடிப்பது கூழ் கொப்பழிப்பது பன்னீா" என்ற பழமொழியின் கருத்தைத் தரும் பிறிதொரு பழமொழி
   1) அப்பன் அருமை மாண்டால் தெரியும்
   2) ஆடு கொழுக்கிறது இடையனுக்கு இலாபம்
   3) பேச்சுப் பல்லிக்கு தம்பி கால்நடை
   4) இமைக் குற்றம் கண்ணுக்குத் தெரியாது

13) "மாசிலாப்பூங்குழலாள் மற்றவரைக் காணாநின்று" என்பதில் வந்த "பூங்குழலாள" என்பது
   1) இருபெயரொட்டுப் பண்புத்தொகை
   2) வேற்றுமைத் தொகை
   3) 2 ஆம் வேற்றுமைத்தொகை புறத்தே பிறந்த அன்மொழித்தொகை
   4) வேற்றுமைத் தொடர்

14) "கண்மணி கண்வளர்ந்தாள்" இதில் வந்த கண்வளர்தல் என்ற மரபுத்தொடரின் பொருள்
   1) நித்திரை செய்தல்   2) பருவமடைதல்
   3) அழகுண்டாதல்   4) களைப்படைதல்

15) "கல்வியில் பெரியன் கம்பன்" என்பதில் உள்ள வேற்றுமைப் பொருள்
   1) இடப்பொருள்   2) எல்லைப்பொருள்
   3) ஏதுப்பொருள்   4) ஒப்புப்பொருள்

16) "இலங்கை ஒரு ஜனநாயக சோசலிச குடியரசாகும்" என்பது
   1) கலப்பு வாக்கியம்   2) தனி வாக்கியம்
   3) வினா வாக்கியம்   4) செப்பு வாக்கியம்

17) பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயர் அல்லாதது
   1) அறிவியல் 2) மருத்துவம் 3) ஆசிரியர்   4) கொடையாளி

18) பின்வருவனவற்றுள் இயல்புப் புணர்ச்சியாக அமைவது
   1) நூலகம்   2) பாற்கடல்   3) பைந்தமிழ்   4) மரமேசை

19) தமிழில் மொழிக்கு முதலில் வரத்தக்க எழுத்துக்களின் எண்ணிக்கை
   1) 22   2) 102   3) 216   4) 30

20) பின்வருவனவற்றுள் கூட்டொலியமைப்புடைய எழுத்துக்கள்
   1) ஓ, ஆ   2) உ, ஊ   3) ஐ, ஔ   4) ஏ, ஈ

21) கீழ் உள்ளவற்றுள் புறச்சுட்டுக்கு உதாரணமாக அமையாதது
   1) இவன்   2) அம்மலர்   3) இக்குதிரை 4) உப்பிள்ளை

22) சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரத்தக்க வினா எழுத்து
   1) எ   2) ஆ   3) யா   4) ஏ

23) "தூமம் கால்வன் வீரன் சுடுசரம்" என்பதில் வந்த சுடுசரம்
   1) உவமைத்தொகை   2) பண்புத்தொகை
   3) அன்மொழித்தொகை   4) வினைத்தொகை

24) பின்வருவனவற்றுள் பெயராகவும் வினையாகவும் வழங்காத சொல்
   1) நரி   2) ஆள் .
   3) எண்   4) மதி

25) கீழுள்ள உவமைத்தொடர்களுள் மாறுபாடான பொருளைத் தருவது
   1) பாசிமூடிய பவளத்தின் நிறம்
   2) கூடை கவிழ்ந்த விளக்கின் ஒளி
   3) குன்றின் மேல் வைத்த தீபம்
   4) முத்துச் சிப்பியில் உள்ள முத்தின் ஒளி

26) பின்வருவனவற்றுள் திணை வழுவமைதிக்கு உதாரணமாக அமைவது
   1) நாயார் வந்தார்
   2) இரு கண்ணுஞ்சிவந்தது
   3) இவன் ஆண்மையில்லாப் பெண்
   4) தங்கள் வரவு நல்வரவாகுக

27) "மன்னன் அந்தப்புரம் புக்கான்" இதில் வந்த புக்கான் என்ற சொல்லின் காலம் உணர்த்துவது
   1) இடைநிலை   2) விகுதி   3) பகுதி   4) சாரியை

28) "மன்னர் விழித்தாமரை பூத்த மண்டபம்" என்பதில் இடம்பெற்றுள்ள அணி
   1) உவமை   2) உருவகம் 3) தன்மை நவிற்சி 4) தற்குறிப்பேற்றம்

29) ஐ, ஓ, ஔ ஆகிய எழுத்துக்களின் இன எழுத்துக்கள் முறையே அமைந்த தொகுதி
   1) ஓ, ஓ, ஈ   2) ஆ, ஓ, உ   3) எ, ஈ, ஊ   4) இ, ஓ, உ

30) பின்வருவனவற்றுள் நான்காம் வேற்றுமை சொல்லுரு அல்லாதது
   1) கொண்டு   2) பொருட்டு   3) நிமித்தம்   4) ஆக

**பின்வரும் வாக்கியங்களில் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

31. இந்தோனேசியாவில் ஏற்பட்ட .................................. கரையோர மக்கள் பலரது உயிர்களைக் காவுகொண்டது.
   1) கால்கோள்   2) கடல்கோள்   3) எடுகோள்   4) ஊர்கோள்

32. குலோத்துங்க சோழனின் புகழ் .................................. எங்கும் பரவியது
   1) ஆண்டி முதல் அரசன் வரை   2) உணர்மொழி காலம்
   3) வெள்ளிடைமலை   4) குமரிமுதல் இமயம் வரை

33. சேர மன்னவன் வீதியுலா வருகிறார் என .................................. பொதுமக்களுக்கு அறிவித்தான்
   1) நாடகன்   2) கூத்தன்   3) கட்டியக்காரன்   4) நிபுணன்

34. மருந்தே .................................. விருந்தோடு உண்
   1) ஒழிய   2) இருந்தாலும் 3) ஆனால்   4) ஆயினும்

35. வேட்பாளர்கள் தேர்தல் காலங்களில் .................................. எல்லாம் நுளைந்து வாக்குக் கேட்பாாகள்
   1) பட்டி தொட்டி  2) வீடுவாசல் 3) குளம் குட்டை  4) தோட்டம்துரவு

**பிறமொழிக் கலப்பற்ற வாக்கியத்தை இனங்காண்க**

36. 1) அனுஜன் கும்பாபிஷேகத்துக்குப் போனான்
   2) ரமேஸ் அலுமாரிக்குள் பொருட்களை வைத்தான்
   3) இலக்கியன் கவிதை பாடினான்
   4) பரந்தாமன் கலண்டர் வாங்கினான்

37. 1) அத்தர் வாசனை மூக்கைத் துளைத்தது
   2) பாண் விலை அதிகரிப்பை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது
   3) காணாப்பாடகனை பொலிஸ் கைது செய்தது.
   4) விண்மீன்கள் ஒளி வீசின

**எழுத்துப்பிழைகளற்ற வாக்கியத்தை இனங்காணுங்கள்.**

38) 1) பெண்கள் மொட்டாக்கிட்டுச் சென்றார்கள்
   2) அவன் இப்ப மெத்தக் கெட்டுப் போனான்
   3) சிறுகதை என்பது ஓர் உரைநடை ஆக்க இலக்கியம்
   4) கண்ணன் கூட்டத்துக்கு சமூகமளிக்கவில்லை

39. 1) நான் என் வீட்டைப் பனையோலையால் மேய்ந்தேன்.
   2) அவனுடைய குடும்பி குலைந்து விட்டது.
   3) எங்களூரில் மூன்று பண்டகசாலகள் உள்ளன.
   4) ஆராச்சி இல்லாத படிப்பு அதிக பயனைத் தராது

**40 கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தினால் கட்டுக்கோப்பான பந்தி உருவாகும். அதற்கான சரியான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

அ) கல்லூரிகளிலும் நகரங்களிலும், ஊர்களிலும் ஒவ்வோர் நூல் நிலையம் விளங்க வேண்டும்
ஆ) உயர்ந்தாற்றான் மக்களினம் மாட்சி மிக்கதாகும்.
இ) கல்விக்குத் துணையான நூல்நிலையங்களும் யாண்டும் செவ்வையுற அமைந்து
ஈ) இவ்வித விளக்கம் உள்ள நாடுதான் அறிவிலும் பண்பாட்டிலும் மேம்பட்ட நாடு என்று அழைக்கப்படும்.
உ) கால்கள் நான்கும் நேராக அமைந்தாற்றான் நாற்காலி நேராக நிற்கும்.
   1) இ, ஆ, அ, ஈ, உ   2) உ, எ, அ, ஆ, இ
   3) அ, உ, ஆ, ஈ, உ   4) உ, இ, ஆ, அ, ஈ

## 01. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக

1) சுவரொட்டி ஆக்கத்தின்போது கவனிக்கவேண்டிய இரண்டு விடயங்களைக் குறிப்பிடுக.
2) உரையாடலில் ஈடுபடுவதன் மூலம் ஏற்படத்தக்க நன்மைகள் இரண்டினை எழுதுக
3) செவ்வி காண்பவரிடம் இருக்கத்தக்க முக்கியமான தகைமைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

# சைவசமயம்

1) உயிர்கள் அனைத்திற்கும் மேலானவன் என்பதால் இறைவனுக்கு வழங்கும் பெயர்
1) கடவுள் 2) தலைவன் 3) யோகி 4) மூர்த்தி

2) பாடசாலையில் கொண்டாடப்படும் விழாக்களில் ஒன்று
1) நவராத்திரி 2) சிவராத்திரி 3) விளக்கீடு 4) கந்தசஷ்டி

3) "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்று பாடியவர்
1) சம்பந்தர் 2) அப்பர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்

4) உழவர் தமது தொழிலை ஆரம்பிக்கும்போது முதன் முதலாக மேற்கொள்ளும் சடங்கு
1) ஆயுதபூசை 2) முளைப்புச்சடங்கு
3) பொலிச்சடங்கு 4) ஏர்மங்கலம்

5) இறைவனும் இறைவியும் திருமணம் செய்த நாளாகப் போற்றப்படும் தினம்
1) மாசிமகம் 2) தைப்பூசம்
3) பங்குனி உத்தரம் 4) பங்குனித் திங்கள்

6) மகரசங்கிராந்தியில் கொண்டாடப்படும் பண்டிகை
1) தைப்பொங்கல் 2) சித்திரை வருடப்பிறப்பு
3) தீபாவளி 4) ஓணம் பண்டிகை

7) சிவதரிசன பலனை தருபவர்
1) எச்சதத்தன் 2) பிள்ளையார்
3) சண்டேசுவரர் 4) சேக்கிழார்

8) திருமுறைகள் தொகுத்தவர்
1) நம்பியாண்டர்நம்பி 2) இராசஇராசசோழன்
3) சேக்கிழார் 4) வேதவியாசர்

9) பத்தாம் திருமுறையைப் பாடியவர்
1) திருமூலர் 2) சேந்தனார்
3) பட்டினத்தார் 4) நக்கீரர்

10) நாலாயிர திவ்விய பிரபந்தத்தை தொகுத்தவர்
1) சேக்கிழார் 2) இராஜஇராஜசோழன்
3) ஸ்ரீமத்நாதமுனிவர் 4) வள்ளுவர்

11) "சிறையாரும் மடக்கிளியே" என்ற தேவாரம் எவ்வாலயத்தின் மீது பாடப்பட்டது
1) தோணிபுரம் 2) திருவாரூர் 3) சிதம்பரம் 4) பழனி

12) சம்பந்தர் தந்தையின் யாகத்திற்கு பொன்வேண்ட பாடிய தேவாரம்
1) தோடுடைய செவியன் 2) சிறையாரும் மடக்கிளியே
3) மந்திரமாவது நீறு 3) இடரினும் தளரினும்

13) திருப்புகழ் பாடியவர்
1) குமரகுருபரர் 2) கச்சியப்ப சிவாச்சாரியார்
3) அருணகிரிநாதர் 4) அபிராமிப்பட்டர்

14) சேக்கிழார் எந்த அரசனின் ஆட்சிக்காலத்தில் முதலமைச்சராக இருந்தார்
1) அநபாயசோழன் 2) இராஜஇராஜசோழன்
3) இராசேந்திரசோழன் 4) குளக்கோட்டன்

15) தடுத்தாட்கொண்ட புராணத்தின் காப்புச் செய்யுள்
1) திகட சக்கர......... 2) திருவாக்கும் ......
3) உலகெலாம் ...... 4) நமச்சிவாய வாழ்க....

16) முருகனின் திருத்தக்க புகழைக் கூறுவது
1) தேவாரம் 2) திருவாசகம்
3) பராபரக்கண்ணி 4) திருப்புகழ்

17) பறளை விநாயகர் ஆலயம் அமைந்துள்ள இடம்
1) சுழிபுரம் 2) சுன்னாகம்
3) யாழ்ப்பாணம் 4) மானிப்பாய

18) சங்கமம் என்பது
1) இலிங்கம் 2) சிவனடியார் 3) குரு 4) இறைவன்

19) தானாகத் தோன்றிய இலிங்கம்
1) காணலிங்கம் 2) மானிடலிங்கம்
3) சோபிதலிங்கம் 4) சுயம்புலிங்கம்

20) ஈழத்து ஈஸ்வரம் என எதனை அழைப்பர்
1) கேதீஸ்வரம் 2) முன்னேச்சரம்
3) கோணோஸ்வரம் 4) முனீஸ்வரம்

**21 தொடக்கம் 24 ஆம் வினாக்களுக்கு பின்வரும் விபரங்களைப் பயன்படுத்தி விடை எழுதுக**

A - திருஞானசம்பந்தர் E - உத்தமசோழபல்லவன்
I - திருப்புகழ்
B - திருநாவுக்கரசர் F - ஆளுடையபிள்ளையார்
J - பெரியபுராணம்
C - சேக்கிழார் G - மருணீக்கியார்
K - வைகாசி மூலம்
D - அருணகிரிநாதர் H - முருகபக்தர்
L - சித்திரைச் சதயம்

21) சமய முதற்குரவரின் இயற்பெயரின் சரியான ஒழுங்கு
1) B,G 2) A,F 3) C,E 4) B,F

22) தோத்திரப்பாடலைப் பாடியவரை ஒழுங்குபடுத்தினால்
1) D,I,F 2) C,F,I 3) D,F,I 4) D,H,I

23) பொதிச்சோறு பெற்ற நாயனார்
1) A,F 2) C,H 3) B,G 4) D,F

24) பன்னிரண்டாம் திருமுறையைப் பாடியவர் ஒழுங்கில்
1) C,F 2) C,G 3) D,H 4) B,H

25) நாவுக்கரசரை கல்லோடு கட்டிக் கடலில் போட்ட போது பாடிய தேவாரம்
1) தோடுடைய செவி... 2) சொற்றுணை வேதியன் ....
3) மந்திரமாவது நீறு .... 4) திருவே என் செல்வமே ...

26) ஆயுதபூசை நடைபெறும் நாள்
1) சிவராத்திரி 2) விஜயதசமி
3) வருடப்பிறப்பு 4) தைப்பொங்கல்

27) சமணர்களால் துன்புறுத்தப்பட்டவர்
1) சம்பந்தர் 2) சுந்தரர் 3) அப்பர் 4) மாணிக்கவாசகர்

28) சண்டேசுவரரின் இயற்பெயர்
1) விசாரசருமர் 2) மருணீக்கியார்
3) ஆளுடைய அடிகள் 4) சடையனார்

29) விரதம் என்பதற்கு வரைவிலக்கணம் கூறியவர்
1) திருமூலர் 2) ஆறுமுகநாவலர்
3) சேக்கிழார் 4) சேர். பொன். இராமநாதன்

30) ஆழ்வார்கள் எத்தனை பேர்
1) 12 2) 10 3) 9 4) 15

31) பஞ்சாட்சர மந்திரம் பின்வருவனவற்றுள்
1) சூரியமந்திரம் 2) பிரணவமந்திரம்
3) சரவணபவ 4) சிவாயநம

32) மாத விரதங்கள் உள்ளடக்கப்பட்ட தொகுதி
1) கௌரிவிரதம், கந்தசஷ்டி, ஐப்பசி வெள்ளி
2) கந்தசஷ்டி, திருவெம்பாவை, மாசி மகம்
3) தைப்பூசம், மாசி மகம், பங்குனி உத்தரம்
4) திருவாதிரை, பரணி, கார்த்திகை

33) தேவாரத் திருப்பாடல்கள் அமைந்த ஏடுகள் எங்கே பூட்டப்பட்டிருந்தன?
1) மதுரை 2) தில்லை 3) திருவாரூர் 4) தோணிபுரம்

34) யாழ்முரி எனக் கூறப்படும் தேவாரம் எது?
1) மந்திரமாவது நீறு 2) சொற்றுணை வேதியன்
3) சிறையாரும் மட 4) மாதர்மடப்பிடியும்

35) ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரத்தின் இறைவி பெயர்
1) பூலோகநாயகி 2) மீனாட்சி
3) கௌரியம்மன் 4) சிவகாமசுந்தரி

36) கல்நந்தி ஐயர் கொடுத்த புல்லை சாப்பிட்ட ஆலயம் எது
1) ஒட்டிசுட்டான் தான்தோன்றிச்சரம்
2) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்
3) கண்ணகி அம்மன் ஆலயம்
4) நல்லூர் முருகன் ஆலயம்

37) கண்ணைக்கொத்தி காக்கை பிள்ளையார் என்று கூறும் ஆலயம்
1) களுதாவளை பிள்ளையார் 2) பாறளை பிள்ளையார்
3) பரராயசேகரப் பிள்ளையார் 4) மாமாங்கப் பிள்ளையார்

38) "இராவணன் மேலது நீறு" என்று பாடியவர்
1) சம்பந்தர் 2) அப்பர்
3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்

39) உமாதேவியாருக்கு கைலாயத்தில் மலர் பறித்த இரு சேடிப் பெண்கள்
1) கமலினி, அநிந்திதை 2) சுந்தரவல்லி, அமுதவல்லி
3) தெய்வானை, வள்ளி 4) சித்தி, புத்தி

40) பெரியபுராணத்திற்கு "உலகெலாம்" என்று அடியெழுத்துக் கொடுத்தவர்
1) பிள்ளையார் 2) சேக்கிழார்
3) சிவபெருமான் 4) கச்சியப்பர்

# மக்கள் நலனில் அக்கறையுடையோர் சமூகத்தில் உருவாக வேண்டும்

## அரசஅதிபர் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

பொதுமக்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள் எமது சமூகத்தில் மேலும் உருவாக வேண்டும் என்று யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ்.தியாகிகள் அறக்கொடை நிலையத்தின் ஸ்தாபகராகிய வாமதேவா தியாகேந்திரனின் 62 ஆவது பிறந்ததின நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு வாழ்த்துரை யாற்றுகையிலேயே அரச அதிபர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்.நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகிகள் அறக்கொடை நிலையத்தின் சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் அரச அதிபர் தொடர்ந்து தெரிவிக்கையில்

தன்னலம் பாராது பலவழிகளிலும் கொடையளித்து வரும் இவர் போன்றவர்கள் உள்ளனர். சமூகமாகவே எமது சமூகம் கட்டியெழுப்பப்படவேண்டும் எந்த வித அரச உதவியும் இல்லாது தனது சொந்த நிதியைச் செலவு செய்து பலரது துன் பங்களைப் போக்கியும் பலரை நல்ல நிலைக்குக் கொண்டு வரவும் இவர் உதவியளித்து வருகின்றார் என்றார்.

இந்நிகழ்வில் முன்னதாக யாழ்.அரசஅதிபர் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம் பிள்ளை மற்றும் சர்வமதக்குழுவினர் உள்ளிட்டவர்கள் நிறுவனத்தின் வாயிலில் இருந்து வரவேற்கப்பட்டு நிகழ்விடத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

தொடர்ந்து யாழ்.அரச அதிபர யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கியதுடன் யாழ்.அரசஅதிபர் தியாகிகள் அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகரின் பிறந்த தினத்தை முன்னிட்டு வழங்கப்படும் உதவித்திட்டங்களை பயனாளிகளுக்கு வழங்கி வைத்தார்.

இதில் யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் நோய் சிகிச்சைப் பிரிவிற்கு ஒரு இலட்சம் ரூபாவும் சனசமூக நிலையமொன்றிற்கு ஒரு இலட்சத்து ஐம் பதாயிரம் ரூபாவும் அனுராதபுரத்தைச் சேர்ந்த வறுமைப்பட்ட குடும்பமொன்றுக்கு 50 ஆயிரம் ரூபாவும் புதமண தம பதியருக்கு திருமண உதவி நிதியாக ஒரு இலட்சம் மற்றும் பாடசாலைப் பிள்ளைகளுக்கான உதவிகளும் இவற்றில் அடங்கியுள்ளன. (பா)

# திண்மக் கழிவுகளிலிருந்து மின்சார உற்பத்தி

திண்மக்கழிவு முகாமைத்துவத்தின் ஊடாக மின்னுற்பத்தி கல்முனை மாநகர சபையின் திட்டத்திற்கு இந்தியா அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கல்முனை மாநகர முதல்வர் சட்டமுதுமாணி நிசாம் காரியப்பர் தலைமையில் மாநகர சபை உறுபினர்களுக்கும் இந்திய துணை உயர்ஸ்தானிகர் திருக குமரனுக்கும் இடையிலான முக்கிய கலந்துரையாடல் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை மாலை இந்திய தூதரகத்தில் இடம் பெற்றது. இக்கலந்துரையாடலின் போது கல்முனை மாநகர முதல்வர் நிசாம் காரியப்பரினால் முன் வைக்கப்பட்ட கல்முனை நூலக அபிவிருத்தி, சுமார் 250 மில்லியன் பெறுமதியான திண்மக் கழிவு அகற்றல் முகாமைத்துவ வேலைத் திட்டம் மற்றும் அதனூடான மின்னுற்பத்தி போன்றவற்றை விரைவில மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக இந்திய துணை உயர்ஸ் தானிகர் உறுதியளித்தார். இதன்போது இந்திய துணை உயர்ஸ்தானிகர் திருக்குமரனை கல்முனைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு கல்முனை முதல்வர் நிசாம் காரியப்பர் அழைப்பு விடுத்தார்.

அதேவேளை இந்தியாவின் கேரள உள்ளூராட்சி அதிகார நிறுவகத்தின் ஊடாக (KILA) கேரளாவில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் கட்டமைப்பு தொடர்பான கற்கை நெறியினை பயில்வதற்காக கல்முனை மாநகரசபை உறுப்பினர் குழுவினை வருகை தருமாறு இந்திய துணை உயர்ஸ் தானிகர் அழைப்பு விடுத்தார்.

# 41 இலட்சம் மாணவர்களுக்கு இவ்வாரத்தில் இலவச பாடநூல்கள்

(கொழும்பு)

நாட்டிலுள்ள 41 இலட்சம் மாணவ, மாணவிகளுக்கு இவ்வார இறுதிக்குள் பாட நூல்கள் விநியோகித்து முடிக்கப்படுமென்று கல்வி வெளியீட்டு ஆணையாளர் திஸ்ஸ ஹேவாவிதான தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த ஆண்டுக்கான இலவச பாடநூல்களை விநியோகிக்கும் தேசியவைபவம் ஹோமாகம மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 06ஆம் திகதி காலை 8.30 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும்.

437 ரகங்களிலான 37,441,264 மில்லியன் பாடநூல்கள் நாடுபூராவும் விநியோகிக்கப்படும்.

அதிகளவான பாடநூல்கள் மேல் மாகாணத்துக்கே விநியோகிக்கப்படும். இம்மாகாணத்தில் 9,081,607 மில்லியன் பாட நூல்கள் விநியோகிக்கப்படுமென கல்வி வெளியீட்டு ஆணையாளர் திஸ்ஸ ஹேவா விதான தெரிவித்தார்.

# மரக்கறிகளின் விலைகள் வீழ்ச்சி

(கொழும்பு)

மரக்கறி வகைகளின் விலை குறைவடைந்துள்ளது கேள்வியை விட அதிகளவில் மரக்கறிகள் சந்தைக்கு வருகின்றது

குறிப்பாக கோவா, லீட்ஸ், கரட் போன்ற மரக்கறி வகைகளின் விலைகள் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் டீ.பி.ஜீ.குமாரசிறி கூறியுள்ளார்

சந்தைக்குக் கொண்டு வரப்படும் மரக்கறிகளின் தொகை அதிகரிதுள்ளமையே விலையில் வீழ்ச்சி ஏற்படக் காரணம் ஆகும உள்நாட்டு உருளைக் கிழங்கின் விலை குறைவடைந்ததால் நுவரெலியா மாவட்டத்தில் அநேகமான விவசாயிகள் தற்போது மரக்கறிச் செய்கை யில் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

# தாவர உணவுற்பத்தி நிறுவனங்களுக்கு இலட்சினை

(கொழும்பு)

தூய தாவர உணவுகளை விநியோகிக்கும் நிறுவனங்களுக்கு அடையாள சான்றிதழ் மற்றும் இலட்சினைகளை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் லித் சேனவீர தெரிவித்தார்.

எதிர்வரும் வாரமளவில் குறித்த ஆவணங்களை சைவ அல்லது தாவர உணவுகளை உற்பத்தி செய்யும் மற்றும் விருந்தகங்களுக்கு வழங்கும் நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளது.

பொதுமக்கள் இலகு வாக தாவர உணவுகளை விநியோகிக்கும் விருந்தகங்களை இனங் கண்டு தமது தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்கு இயலும். இதன்போது சந்தேகமின்றி பயனடைய முடியும். மின்சக்தியை சிக்கனப்படுத்தும் செயற்பாட்டுக்கு இணங்க குளிர்சாதனப் பெட்டி மற்றும் வாயு சீராக்கி இயந்திரங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# நாட்டில் வருமானம் ஈட்டும் தனியார் நிறுவனங்கள் வீழ்ச்சி

## ஐ.தே.க. எம்.பி சுஜீவ தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் வருமானம் ஈட்டும் தனியார் நிறுவனங்கள் 20 வீதத்தால் வீழ்ச்சிகண்டுள்ளன அரச ஊழியர்களுக்கு 1200 ரூபா சம்பள உயர்வு இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

கடுவெல பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களின் சந்திப்பொன்று நேற்று முன்தினம் கடுவெல போமிரிய பிரதேசத்தில் இடம் பெற்ற போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வருடத்தில் 1200 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. கொடுப்பனவாகவே வழங்கப்பட்டுள்ள்து. அதனை வேண்டிய நேரத்தில் விலக்கிக் கொள்ளமுடியும். இன்று கருவாடு, சீனி பால்மா, உள்ளிட்ட அனைத்துப் பொருட்களினதும் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆனால் கசினோவிற்கு வரிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது என்றார்.

# மீளாய்வுக்கூட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி வலய அதிபர்களுக்கான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வடமராட்சி வலயக் கல்வி அலுவலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார். (109)



ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி பாலர் பாடசாலையின் ஒளிவிழா நிகழ்வும், புலமைப்பரிசில் மாணவர்கள் கௌரவிப்பும் நேற்றுமுன்தினம் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அடைக்கலநாயகி ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை ஜோதிநாதன் மங்கள விளக்கேற்றுவதையும், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவிகளையும் சிறுவர்களின் கலை நிகழ்வையும் காணலாம். (21)

# "மக்கள் புரட்சியால் ஆட்சிக் கவிழ்ப்பு"

# தாய்லாந்தில் வெடித்தது கலவரம்

## 30 ஆயிரம் பேர் பங்கேற்பு; ஐவர் உயிரிழப்பு



தாய்லாந்தில் அரசுக்கு எதிராக பெரும் கலவரம் வெடித்துள்ளது. இதில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

எதிர்க்கட்சிகள் தங்களின் போராட்டத்துக்கு 'மக்கள் புரட்சியால் ஆட்சிக் கவிழ்ப்பு' என்று பெயரிட்டுள்ளனர்.

பிரதமர் இங்லக் ஷினவத்ரா தலைமையிலான அரசில் ஊழல், முறைகேடுகள் அதிகரித்திருப்பதாக குற்றஞ்சாட்டி ஜனநாயகக் கட்சி தலைமையில் அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து பல்வேறு போராட்டங்களை கடந்த ஒன்பது நாட்களாக நடத்தி வருகின்றன.


இந்தப் போராட்டம் கலவரமாக வெடித்துள்ளது. தலைநகர் பாங்கொங்கில் அரச் அலுவலகங்களை ஆக்கிரமித்துள்ள எதிர்க்கட்சியினரை இராணுவ உதவியுடன் பொலிஸார் அப்புறப்படுத்த முயன்றனர். அப்போது இருதரப்புக்கும் இடையே மோதல மூண்டது. ஞாயிற்றுக்கிழமை 8ஆவது நாளாக நீடித்த போராட்டத்தில் சுமார் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் பங்கேற்றனர்.

தாய்லாந்தின் முக்கிய தொலைக்காட்சி ஊடகமான தாய் பிபிஎஸ் அலுவலகத்தையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர். பாங்கொங்கில் உள்ள பொலிஸ் மைதானத்தையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கைப்பற்றினர். தலைநகரின் பல்வேறு இடங்களில் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே கடும் சண்டை நடைபெற்றது. பொலிஸார் தண்ணீரைப் பீய்ச்சி அடித்தும் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் கூட்டத்தைக் கலைக்க முயன்றனர்.

முன்னேற்பாடாக பாதுகாப்பு கவச முகமூடியுடன் வந்திருந்த ஆர்ப்பாட்டக் காரர்கள் பதிலுக்கு கண்ணீர் புகைக் குண்டுகளையும் தீயணைப்பு கருவிகள் மூலம் இரசாயன புகையையும் பரப்பி பொலிஸாரை விரட்டினர். பிரதமர் இங்லக் ஷினவத்ரா அலுவலகம் அமைந்துள்ள அரசு அலுவலக கட்டடத்தையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட முயன்றனர்.

பாங்கொங் ராம்காம்ரயாங் பல்கலைக்கழகத்தில் அரசு எதிர்ப்பாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் இடையே சனிக்கிழமை ஏற்பட்ட மோதலில் 5 பேர் கொல்லப்பட்டனர். கலவரத்தின்போது சுமார் 2000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் சிக்கித் தவித்தனர். அவர்களை நேற்று முன்தினம் காலை பொலிஸார் மீட்டனர்.

# தனித்தெலுங்கானாவுக்கு எதிராக ஜெயலலிதாவிடம் ஆதரவு கோரும் ரெட்டி



தெலுங்கானாவுக்கு எதிராக ஆதரவு திரட்டுவதற்காக தமிழக முதல்வர் ஜெயலலிதாவுடன் ஜெகன்மோகன் நாளை சந்தித்துபபேசவுள்ளார். ஆந்திர மாநிலத்தை 2 ஆக பிரித்து தெலுங்கானா மாநிலம் உருவாக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கு சீமாந்திரா மக்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.ஒன்றுபட்ட ஆந்திராவே நீடிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். ஒன்றுபட்ட ஆந்திராவை வலியுறுத்தி தொடர் போராட்டமும் நடத்திவருகின்றனர்.

தனி தெலுங்கானா மாநிலம் அமைவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் ஆந்திராவை பிரிக்க கூடாது என்பதை வலியுறுத்தியும் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் தலைவர் ஜெகன்மோகன் ரெட்டி ஏற்கனவே ஆந்திராவில் உண்ணாவிரதம் இருந்தார்.

சொத்து குவிப்பு வழக்கில் நிபந்தனைப் பிணையில் இருக்கும் ஜெகன்மோகன் ரெட்டி எங்கு சென்றாலும் அதை நீதிமன்றத்திற்கு முன் கூட்டியே தெரிவிக்க வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது. அதன்படி நீதிமன்றால் அனுமதி பெற்று ஒவ்வொரு மாநிலத்திற்கும் சென்று தலைவர்களை சந்தித்து வருகிறார்.

# தடம் புரண்டது மெட்ரோ ரயில் அமெரிக்காவில் 4பேர் பலி

நியூயோர்க்கில் மெட்ரோ ரயில் தடம் புரண்டதில், அதில் பயணம் செய்த 4 பேர் உயிரிழந்தனர். காயமடைந்த 67 பயணிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நியூயோர்க் அருகே ஸ்புய்டென் டியுவில் ரயில் நிலையம் அருகே பிரோன்ஸ் பகுதியில் வந்து கொண்டிருந்த மெட்ரோ ரயில் ஒன்று நேற்றுமுன்தினம் காலை 7.20 மணியளவில் தடம் புரண்டது. ஹட்சன் நதியோரம் ஒரு வளைவு பகுதியில் வந்து கொண்டிருந்த போது ரயிலின் 5 பெட்டிகள் தடம்புரண்டன. இதில் 4 பயணிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

# பலரின் அன்பைப்பெற்ற அழகற்ற நாய் மரணம்

உலகின் அழகற்ற நாய் என்ற பட்டத்தை 2007ஆம் ஆண்டு வென்ற எல்வுட் என்று அழைக்கப்பட்ட நாய், அமெரிக்காவில் உயிரிழந்துள்ளது.



அமெரிக்காவின் நியூஜெர்ஸியைச் சேர்ந்த கரேன் குவிக்லிக்கு சொந்தமான நாயான எல்வுட் 2007ஆம் ஆண்டு கலிபோர்னியாவில் நடைபெற்ற உலகின் மிகவும் அழகற்ற நாய் என்ற போட்டியில் பங்கேற்று பட்டத்தை வென்றது.

அதன் பின் அதன் புகழ், அமெரிக்கா மட்டுமின்றி பிரேஸில், ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளிலும் பரவத் தொடங்கியது. அந்த நாய்க்கு ஏராளமானோர் இரசிகர்களாக மாறினர். இது தொடர்பாக குவிக்லி கூறுகையில், 'மிகவும் சிறிய நாயான எல்வுட், தான் வாழ்ந்த குறுகிய காலத்திலேயே பலரின் அபிமானத்தைப் பெற்றுள்ளது. எல்வுட்டை நேரில பார்க்காதவர்கள் கூட, அதன் மீது அன்பு செலுத்தியது நெகிழ்ச்சியாகவுள்ளது. கடந்த வாரம் வியாழக்கிழமை (அறுவடைத் திருநாள்) அன்று திடீரென நோய்வாய்ப்பட்டு எல்வுட் உயிரிழந்தது. இறப்புக்கான காரணம் தெரியவில்லை' என்றார்.

உலகச் செய்திகள்


# உண்ணாவிரதப் போராட்டத்தை மீண்டும் தொடங்குகிறார் ஹசாரே

ஊழலுக்கு எதிராக போராடி வரும் பிரபல சமூகசேவகரும் காந்தியவாதியுமான அன்னா ஹசாரே மீண்டும் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் தனது சொந்த ஊரில்உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளார். வலுவான லோக்பால் மசோதாவை நிறைவேற்ற வலியுறுத்தி முன்பு டில்லியில் காலவரையற்ற உண்ணாவிரதம் இருந்துவந்தார் இதைத்தொடர்ந்து மத்திய அரசு லோக்பால் சட்டத்தை கொண்டு வந்தது.

அந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, தற்போது நாடாளுமன்ற மேல்-சபையின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது. ஊழலுக்கு எதிரான வலுவான லோக்பால் சட்டத்தை இயற்ற வலியுறுத்தி மீண்டும் காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தை நடத்தப்போவதாக அன்னாஹசாரே அறிவித்து உள்ளார்.

இதை அவர் தனது சொந்த ஊரான ராலேகானில் தனது ஆதரவாளர்களுடன் நேற்று முன்தினம் நடந்த ஆலோசனை கூட்டத்திற்கு பின்னர் அறிவித்தார். இதுகுறித்து அன்னாஹசாரே மேலும் கூறுகையில்

வலுவான லோக்பால் சட்டத்தை நிறைவேற்றக்கோரி எனது ஆதரவாளர்களின் உதவியுடன் - ஜன டிரந்தா மோர்ச்சா' என்ற அமைப்பின் கீழ் எனது சொந்த ஊரான ராலே கானில் உள்ள யாதவ்பாபா கோவிலில் காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தை தொடங்க உள்ளேன் என்றார்.



# இந்தோனேசியாவில் நிலநடுக்கம் விடுகளுக்குள் சிக்கி 9பேர் பலி

இந்தோனேசியாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் வீடுகளுக்குள் புதைந்து 9 பேர் பலியாகியுள்ளனர். இந்தோனேசியாவில் கிழக்கு பகுதியில் நேற்று முன்தினம் காலை 10.24 மணிக்கு கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் மலுரு மாகாணத்தில் உள்ள சவுமலாகி என்ற கடற்கரை நகரம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் பூமியதிச்சி ஏற்பட்டது.

இதனால் அதிர்ச்சி அடைந்த மக்கள் தங்கள் வீடுகள் மற்றும் கட்டடங்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடைந்தனர்.

## ஒருங்கிணைப்புக் குழு....

அவர் சிவில் உறுப்பினராக இருந்தாலும் சரி, முன்னாள் இரணுவ அதிகாரியாக இருந்தாலும் சரி அவர் ஜனாதிபதியின் அதிகாரத்திற்குள் கட்டுப்பட்டவர். ஆளுநர் யார்? என்பது முக்கியமல்ல. யாராக இருந்தாலும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒருவர் ஜனாதிபதியின் விருப்பைத்தான் கவனத்தில் கொள்வார். இந்த யதார்த்தத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். 13ஆவது திருத்தச் சட்டத்தில் ஒரு முன்னாள் இராணுவ அதிகாரி முதலமைச்சராக இருக்கக்கூடாது என்று குறிப்பிடப்பட்டு இருந்தாலோ அல்லது முதலமைச்சருக்கும் ஜனாதிபதிக்கும் பொதுவான ஒருவரையே ஆளுநராக நியமிக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தால் நீங்கள் குறிப்பிடுவதில் நியாயம் உள்ளது என்று கூறலாம். ஆனால், 13ஆவது திருத்தச் சட்டத்தில் அவ்வாறு எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆளுநர் ஜனாதிபதியின் பிரதிநிதி என்பதால் அவர் ஜனாதிபதியின் விருப்புக்கு அமைவாகவே செயற்படுவார்.

அதேநேரம் ஓர் சிவில் சமூகத்தைச் சேர்ந்தவரை ஆளுநராக நியமிக்கும் பட்சத்தில் அவர் சரியாக செயற்படுவார் என்பதற்கு என்ன உத்தரவாதம்? நீங்கள் குறிப்பிடுவதைப்போல சிவில் அதிகாரி ஒருவரை நியமித்தாலும் அவரும் ஜனாதிபதியின் விருப்பைத்தான் கவனிப்பார்.

ஆளுநர் பொதுவான பதவி ஒன்றை வகிப்பவராக இருந்தால், அதாவது மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பதவியை வகிப்பவராக இருந்தால் நீங்கள் குறிப்பிடுவது போல் இராணுவத்தில் இருந்தவர் என்பதால் பொருத்தமற்றவராக இருக்கலாம். ஆனால், இந்த ஆளுநர் பதவி என்பது ஓர் சுதந்திரமானது அல்ல. இந்தப் பதவி ஒரு வரையறைக்கு உட்பட்டு ஜனாதிபதியின் பிரதிநிதியாகச் செயற்படுபவரே ஆளுநராவார். நீங்கள் சொல்வது போல் சிவில் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் பதவிக்கு வரும்போது அவர்கள் இப்போதுள்ள ஆளுநரைவிட மோசமானவராகவும் இருக்கலாம்.

**கேள்வி :** வடமாகாண ஆளுநரை வெளியேற்ற வேண்டும் என்பதை மக்களிடம் தெரிவித்து அவர்களது ஆணையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் பெற்றுள்ளதே?


**பதில்:** மக்களிடம் ஆணை வாங்கிய எல்லாம் நடைபெறும் என்று குறிப்பிட முடியாது. 1977ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் தமிழ் அரசுக்குத்தான் ஆணை வழங்கினார்கள். அடுத்த தேர்தல் தமிழ் ஈழத்தில் தான் என்று அந்த ஆணையை மக்கள் வழங்கினார்கள். மக்கள் ஆணை வழங்கிவிட்டார்கள் என்பதற்காக எல்லாம் அதன்படி நடைபெறும் என்று குறிப்பிட முடியாது. மக்கள் ஆணையைத் தான் செய்வோம் என்று குறிப்பிடுபவர்கள் அரசியல் அமைப்புக்குக் கீழ் சத்தியப் பிரமாணம் எடுக்கத் தேவையில்லை.

**கேள்வி :** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கில் ஆட்சியைக் கொண்டு நடத்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆதரவை வழங்குமா?

**பதில்:** நிச்சயமாக நாங்கள் எந்தவிதமான முட்டுக்கட்டைகளையும் இடைஞ்சல்களையும் ஏற்படுத்தமாட்டோம். வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தனது கன்னிப் பேச்சில் மிகவும் தெளிவாக இந்த விடயத்தை குறிப்பிட்டிருக்கிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட விடயங்களை அவர்களால் செய்து முடிக்க முடியும் என்றால் அதற்கும் நிச்சயமாக நாங்கள் ஆதரவை வழங்குவோம். எங்களைப் பொறுத்தவரை அவர்கள் நடைமுறைக்கு சாத்தியமற்ற பொய்ப் பிரசாரங்களைச் செய்து வந்தார்கள் என்று நாங்கள் குறிப்பிட்டோமே தவிர அவர்கள் குறிப்பிட்ட விடயங்களை அவர்கள் சாதித்துக் காட்டுவார்களேயானால் அதற்கு நாங்கள் எந்த விதத்திலும் தடையாக இருக்கமாட்டோம்.

- நன்றி வீரகேசரி

# புதையல் மூலம் தங்கம் தருவதாக வர்த்தகரிடம் பெருமளவு பண மோசடி



(மன்னார்)

புதையல் மூலம் எடுக்கப்பட்ட பெருமளவு தங்கம் இருப்பதாகத் தெரிவித்து மன்னார் வர்த்தகர் ஒருவரிடம் பெருமளவு பணம் அபகரிக்கப்பட்ட சம்பவமொன்று அண்மையில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மன்னாரிலுள்ள வர்த்தகர் ஒருவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட கெப்பிட்டிக் கொல்லாவையைச் சேர்ந்த ஒருவர் தம்மிடம் புதையல் மூலம் எடுக்கப்பட்ட தங்கம் இருப்பதாகவும், தேவையெனில் வருமாறும் தெரிவித்துள்ளார்.

இதனை நம்பிய அந்த வர்த்தகர் குறித்த நபருடன் நேரடியாகத் தொடர்பு கொண்ட வேளை புதையல் மூலம் எடுக்கப்பட்டதாகத் தெரிவித்து சிறியதொரு தங்கத்தைக் கொடுத்துள்ளார். இவரும் சிறுதொகைப் பணத்தைக் கொடுத்த பின் அதனை வாங்கி வந்து சோதித்துப் பார்த்ததில் அது தங்கமென்பது உறுதியானது.

அதன் பின்னர் குறித்த நபர் வர்த்தகரிடம் தொடர்புகொண்டு தன்னிடம் 18 தங்கத் துண்டுகள் உள்ளதாகவும், எனவே ஐந்து இலட்சம் ரூபா காசுடன் கெப்பிட்டிக்கொல்லாவுக்கு வருமாறும் தெரிவித்தார்.

அவரின் பேச்சை நம்பி வர்த்தகரும் பணத்துடன் சென்ற வேளை, அவரும் 18 துண்டுகளைக் கொடுத்துள்ளார். இவரும் முழுப்பணத்தையும் கொடுத்துவிட்டு ஊருக்கு வந்து அவற்றைப் பரீட்சித்தவேளை அந்த 18 துண்டுகளுக்குள்ளும் ஈயம் இருப்பது தெரியவந்ததுடன், தான் ஏமாற்றப்பட்டதனையும் உணர்ந்தார்.

இந்த நிலையில், குறித்த நபருடன் தொடர்புகொள்ள முயன்றவேளை அவரது தொலைபேசி தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தது. தற்போது அவர் பணத்தை இழந்த நிலையில் உள்ளார். (113)

# மூன்றாம் தவணை விடுமுறை தினத்தில் இலவச பாடநூல் விநியோகம்

சகல பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல் வழங்கும் செயற்திட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதன்படி பாடசாலைகளில் அன்றைய தினம் தேசிய கீதம், பாடநூல் கருத்துரைக் கீதம் என்பன இசைக்கப்படுவதுடன், 'இலவச பாடநூல் நோக்கமும் தெளிவுபடுத்தலும்' என்னும் விடயம் பற்றி அதிபரின் உரை, பாடநூலின் மீள்பாவனையும், அதன் அவசியமும் என்னும் விடயம் பற்றி விசேட அதிதி அல்லது பொறுப்பான ஆசிரியர் ஒருவரின் உரை என்பன முன்னெடுக்கப்பட வேண்டும்.

தொடர்ந்து வைபவ ரீதியாக பாடநூல் விநியோகத்தை அதிபர் ஆரம்பித்து வைத்தல், தொடர்ந்து வகுப்பறையில் ஆசிரியர்களால் மாணவர்களுக்கு பாடநூல் வழங்கி வைத்தல் போன்ற செயற்பாட்டை முன்னெடுக்குமாறு பாடசாலைக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன், பாடநூல் தொடர்பான அறிக்கையினை அவ்வவ் வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# தனியார் க்ல்வி நிலையத்தை உடைத்தெறிந்த விஷமிகள்

சுதுமலைப் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையத்தின் வகுப்பறைகளின் கூரைகள் சேதமாக்கப்பட்டு, தளபாடங்கள் உடைக்கப்பட்டு கிணற்றில் வீசப்பட்டுள்ளன.

சுதுமலைச் சந்தியிலிருந்து தாவடி செல்லும் வீதியில் சுதுமலை அம்பாள் ஆலயத்திற்கு அண்மையில் மர அரிவு ஆலைக்கு முன்பாக உள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றினது வாங்குகள், மேசைகள், கரும் பலகைகள் என்பனவே உடைக்கப்பட்டுள்ளன. அத்துடன், அலுவலகமும் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது. அங்கிருந்த அலுமாரிகள் உடைக்கப்பட்டு கோப்புகள், வினாத்தாள்கள் என்பனவும் வீசியெறியப்பட்டிருப்பதுடன் சேதமாக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் கடந்த வெள்ளியன்று இரவு இடம்பெற்றுள்ளது. உடைக்கப்பட்ட வகுப்பறைகளின் தளபாடங்கள் சில கிணற்றிலும் வீசப்பட்டுள்ளது.

வகுப்பறைகளின் கூரைத் தகடுகளும் பிடுங்கப்பட்டு கிணற்றில் வீசப்பட்டுள்ளன.

கல்வி நிலையங்களிற்கிடையிலான போட்டியே இதற்கு காரணமாக இருக்கலாம் எனத் தெரியவருகின்றது.

இரவு வேளைகளில் பொலிஸாரின் ரோந்துகள் இடம்பெற்றாலும் துணிகரமாக இவ் தனியார் கல்வி நிறுவனத்தின் சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

சேதமாக்கப்பட்டுள்ளதன் மதிப்பு சுமார் ஒன்றரை இலட்சமாகும் என கல்வி நிலைய நிர்வாகி தெரிவித்தார். (48)

# கொழும்பு நகரில் நேற்று விவசாயிகள் போராட்டம்

அரசின் புதிய வரவு-செலவுத் திட்டத்தைக் கண்டித்து ஒரு தொகுதி விவசாயிகள் நேற்று கொழும்பு நகரில் விநோதமான முறையில் போராட்டம் ஒன்றை நடத்தினர். போராட்டத்தில் பங்குபற்றிய அனைவரும் அரை நிர்வாணமாக நின்று போராட்டம் நடத்தினர்.

நிவாரணம் இல்லாத வரவு - செலவுத்திட்டத்தைக் கண்டித்தும், எதிர்ப்பு தெரிவித்தும் நேற்று மாலை 4.00 மணியளவில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று அகில இலங்கை கமநல சம்மேளனத்தினால் நடத்தப்பட்டது.

வரவு - செலவுத்திட்டத்திற்கு முன் நிதி அமைச்சு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றாமை மற்றும் வரவு-செல வுத் திட்டத்தில் விவசாயிகள் மறக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இவ் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் வயதை 60 இல் இருந்து 63 ஆக அதிகரித்தமையை உடனடியாக இரத்துச் செய், விவசாயிகளின் நிலுவையான ஓய்வூதியத்தை செலுத்துவதற்கு நிதி ஒதுக்கு போன்ற கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக இவ் ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

# வடக்கில் கண்ணி அகற்றல் இன்னும் பூரணமாகவில்லை

(யாழ்ப்பாணம்)

வடக்கில், இதுவரைக்கும் 1073.91 சதுரகிலோமீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக அந்தந்த மாவட்ட செயலக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

வடக்கு மாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பகுதிகளிலேயே மேற்படி 1073.93 சதுரகிலோமீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளது. அதனடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 387.15 சதுர கிலோமீற்றரிலும், கிளிநொச்சியில் 262 சதுரகிலோமீற்றரிலும், முல்லைத்தீவில் 127.04 சதுர கிலோமீற்றரிலும், மன்னாரில் 208.29 சதுரகிலோமீற்றரிலும், வவுனியாவில் 89.43 சதுரகிலோமீற்றரிலும் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளது.

அதேவேளை யாழ்ப்பாணம் மாவட்டம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களிலும் ,துவரையில் 54.07 சதுரகிலோமீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்படவுள்ளது. எனவும் மாவட்ட செயலக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

# ஆளணி நியமனம் வழங்கல் கோப்பாயில் நடந்தது நேற்று

(யாழ்ப்பாணம்)

புதிதாக நியமனம் பெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், கால்நடை உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், பட்டதாரிப் பயிலுநர்கள் ஆகியோருக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் கோப்பாய் கல்வியற் கல்லூரியில் இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களினைச் சேர்ந்த 219 முகாமைத்துவ உதவியாளர்கள், 119 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், 20 கால்நடை உத்தியோகத்தர்கள், 25 ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டது.

இவ் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் சந்திரசிறி கலந்து கொண்டு நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

அத்துடன், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், வடமாகாண பிரதம செயலாளர் விஜயலக்ஷ்மி ரமேஷ், அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களங்களின் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர். (48,114)

## யாழ்.வருகிறார்...

நேரடியாகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளவிருப்பதாக ஐ.நா. செய்திக் குறிப்பு கூறுகிறது.

அவ்வகையில் இடம்பெயர்ந்த மக்களையும், பாதிக்கப்பட்டுள்ள சமூகங்களையும் அவர் நேரடியாக சந்திக்கவுள்ளார்.

தமது பயணத் தின் போது அவர் கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு செல்வார் எனவும் ஐ.நா.வின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் இப்போது எதிர்கொள்ளும் சவால்கள், அவர்களுக்கான வாய்ப்புகள் மற்றும் காத்திரமான தீர்வுகள் குறித்து தான் கவனம் செலுத்தவுள்ளதாக பெயானி தெரிவித்துள்ளார்.

அதேநேரம் அவர்களின் பாதுகாப்பு மற்றும் உதவிகள் தொடர்பான முன்னேற்றங்கள் குறித்தும் அவர் அங்கு விவாதிப்பார். தமது பயணத்துக்கு பிறகு தான் கண்டவை குறித்து முதற்கட்டமாக எழுத்துபூர்வமான ஒரு அறிக்கையை அவர் வெளியிடவுள்ளார்.

அவரது பயணம் குறித்த முழுமையான அறிக்கை அடுத்த ஆண்டு யூன் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் குழுவில் சமர்ப்பிக்கப்படும்.

எதிர்வரும் ஆறாம் திகதி வரை தங்கியிருந்து அரச தரப்பினர், சிவில் சமூகத்தினர் மற்றும் இலங்கையிலுள்ள ஐ.நா.வின் உயரதிகாரிகள் ஆகியோரையும் பெயானி சந்திப்பார் என்று அவரது பயணம் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பு கூறுகிறது.

## சர்வதேச...

பட்டாலும் அது உள்நாட்டுக்குள்ளேயே முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு பரிந்துரை, தேசிய செயற்திட்டம் போன்றவற்றை அரசாங்கம் தற்போது செயற்படுத்தி வருவதாக ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.

நாட்டில் இன்று சமூக புரட்சி ஏற்பட்டுள்ளதாகவும் கல்வித்துறையை எடுத்துக் கொண்டால் கிராமப்புற மாணவர்கள் முன்னிலை பெறுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இலங்கை குறித்து சீனா வெளியிட்ட கருத்து ஊடகங்களால் திரிபுபடுத்தப்பட்டுள்ளதாகவும் ஆனால் இலங்கையின் செயற்பாடுகளை சீன முழுமையாக வரவேற்பதாகவும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

## இந்தியப்...

குறிப்பிட்டார்.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பை ஏற்காத இந்தியப் பிரதமர் வடக்கு மாகாண முதலமைச்சரின் அழைப்பை ஏற்று அங்கு செல்வதற்காக நாட்டுக்கு வருவாராயின் அதனை ஐ.தே.கட்சி எதிர்க்கும்.

வடக்கு மாகாண முதலமைச்சரின் அழைப்பை ஏற்று இந்தியப் பிரதமர் இலங்கை வரவுள்ளதாக சில ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை சீர்குலைக்கும் சதித்திட்டமாக இது இருக்கலாம் எனவும் ஜோன் அமரதுங்க குறிப்பிட்டார்.

## மூன்று போட்டிகளில்...

சுவட்டு நிகழ்ச்சிகளிலும் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

இவரது சாதனை தொடர்பாக கருத்துத் தெரிவித்த கல்லூரி அதிபர் சேதுராஜா இவர் கல்லூரிக்கும், மாவட்டத்திற்கும், வடமாகாணத்திற்கும் பெருமை சேர்த்துள்ளதாகவும், அவரது சாதனையை இட்டுத் தாம் பெருமையடைவதாகவும் தெரிவித்தார். (12)

## வடக்கின்...

ரூபாவும், கல்வி மற்றும் சுகாதார மேம்பாட்டிற்காக 686 மில்லியன் ரூபாவும், வாழ்வாதாரத் திட்டத்திற்காக 15.27 பில்லியன் ரூபாவும், வறுமை ஒழிப்புத் திட்டத்திற்காக 323 மில்லியன் ரூபாவும், பிரதேச செயலகங்களின் கட்டுமானம் மற்றும் அரச நிறுவனங்களின் கட்டுமானத்திற்காக 33.962 பில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பெண்ணின் சடலம் மீட்பு

(பொலிகண்டி)

துன்னாலை தெற்கு கரவெட்டிப் பகுதியில் இளம்பெண்ணொருவர் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்த நிலையில் சடமலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த முகவரியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை விஜயகுமாரி (வயது - 40) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். நேற்றுக் காலை 8 மணியளவில் இவர் கிணற்றில் தண்ணீர் அள்ளிய வேளை தவறி விழுந்துள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

இவருக்கு வலிப்பு நோய் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வீட்டிற்கு வெளியில் சென்ற மகளைக் காணவில்லையென தாயர் தேடியவேளை இவர் கிணற்றில் வீழ்ந்திருந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து உறவினர்களின் உதவியுன் சடலம் மீட்கப்பட்டு மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டது. அங்கு கரவெட்டி பிரதேச மரண விசாரணை அதிகாரி வெ.பாஸ்கரன் விசாரணைளை மேற்கொண்டதையடுத்து சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. இது தொடர்பான விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (116)

# கல்வி நிர்வாக சேவைக்கு 488 பேர் இணைக்கப்படவுள்ளனர்

(கொழும்பு)

நாட்டின் கல்வி நிர்வாக சேவைக்காக மேலும் 488 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர். தெரிவுகள் திறந்த நிலை போட்டிப் பரீட்சை, மட்டுப்படுத்தப்பட்ட நிலை போட்டிப் பரீட்சை, சேவை மூப்பு திறமை அடிப்படை என்ற மூன்று வகைப்பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ளன.

திறந்த நிலை போட்டிப் பரீட்சை மூலம் 122 பேரும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை நேர்முகப் பரீட்சை மூலம் 146 பேரும் இலங்கை அதிபர் சேவை தரம் IV இல் இருந்து சேவை மூப்பு திறமை அடிப்படையில் 220 பேரும் தெரிவு செய்யப்படவுள்ளனர் .

தெரிவுக்கான போட்டிப் பரீட்சைகள் நடைபெற்று முடிவடைந்திருப்பதால் தெரிவுகள் அடுத்த வருட முற்பகுதியில் இறுதி முடிவு செய்யப்பட்டு நியமனம் வழங்கப்படலாம் எனக் கூறப்படுகின்றது

இந்தமுறை மட்டுப்படுத்தப்பட்ட நிலை போட்டிப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை தெரிவு செய்யப்படுபவர்களுக்கும் ஒரு வருட முழுச் சம்பளத்துடன் கூடிய படிப்பு விடுமுறையில் பயிற்சி வழங்கப்பட்ட பின்னரே பணியில் அமர்த்தப்படவுள்ளனர்.

திறந்த நிலைப் போட்டிப் பரீட்சைகள் மூலம் தெரிவு செய்யப்படுபவர்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட நிலைப் போட்டிப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுபவர்களுக்குமான பயிற்சி ஜனவரி மாதம் பிற்பகுதியில் ஆரம்பிக்கலாம் எனக் கூறப்படுகின்றது . ஆகையால் அதற்கு முன்னரே நியமனம் வழங்கப்படவுள்ளது.

கடந்த முறை 410 பேருக்கு கல்வி நிர்வாக சேவை நியமனம் வழங்குவதற்கு ஆளணி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் போட்டிப் பரீட்சையில் உரிய வெட்டுப்புள்ளியைப் பெறத் தவறியமையால் 210 பேர் மாத்திரமே நியமனம் பெற்றிருந்தனர்.

இந்த வருடம் நியமனத் தொகையை அதிகரிப்பதற்கு வசதியாக போட்டிப் பரீட்சையில் பாட ரீதியிலான சித்திக்கான புள்ளி 60 இலிருந்து 40 புள்ளியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

# ஹெரோயின் இறக்குமதியுடன் பிரதமருக்கு தொடர்பு உண்டா?

## நாடாளுமன்றில் நேற்று சர்ச்சை

(கொழும்பு)

கொழும்பில் அண்மையில் மீட்கப்பட்ட அதிக ஹெரோயின் தொகையுடன் நாட்டின் இரண்டாம் நிலை பிரஜையான பிரதமர் சம்பந்தப்படுத்தப்பட்டது எப்படி என மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று நாடாளுன்றில் கேள்வி எழுப்பினார்.

260 கிலோ கிராம் ஹெரோயின் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் விசாரணை மேற்கொள்ளப்படுவது நாட்டிற்கு உகந்ததல்ல என அவர் குறிப்பிட்டார்.

கராச்சியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 260 கிலோ கிராம் ஹெரோயின் மாளிகாவத்தை ரி-30 ரயில் வீதி முகவரியில் ரொஹான் இம்பெக்ஸ் என்ற நிறுவன பெயருக்கு குறித்த ஹெரோயின் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அநுர குமார தெரிவித்தார்.

ஆனால் குறித்த நிறுவனம் ஹெரோயின் இறக்குமதி செய்யப்பட்ட யூன் 22 ஆம் திகதிக்குப் பின்னரே பதிவு செய்யப்பட்டுள்ளதாக அநுரகுமார சுட்டிக்காட்டினார்.

சிறு வியாபாரி ஒருவரால் இவ்வாறு பாரிய தொகை ஹெரோயின் இறக்குமதி செய்யமுடியாது எனவும் அரசியல் பக்கபலமுள்ள பெரிய வியாபாரியாலேயே இதனை இறக்குமதி செய்யமுடியும் எனவும் அநுர குமார குறிப்பிட்டார்.

குறித்த ஹெரோயின் அடங்கிய கொள்கலன்களை சலுகை வரி அடிப்படையில் விடுவிக்குமாறு பிரதமர் அலுவலகத்தில் இருந்து அதன் ஊழியர் ஒருவரால் ஒக்ஸ்ட் 23 ஆம் திகதி கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதென நவம்பர் 10 ஆம் திகதி சன்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளதாக அநுரகுமார கூறியுள்ளார்.

புதிய நிறுவனம் என்பதால் அதிக கட்டணம் செலுத்த முடியாது. ஆகவே அவர்களுக்கு கட்டண சலுகையும் துறைமுக கட்டண நிவாரணமும் வழங்கும்படி பிரதமர் அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க குறிப்பிட்டார்.

எனவே இது குறித்து எழும் கீழ்வரும் கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டும் என அநுர குமார திஸாநாயக்க நாடாளுமன்றில் நேற்றுக் கேட்டுக் கொண்டார்.

கொள்கலனின் இருந்து மீட்கப்பட்ட திரவியம் மற்றும் அதன் அளவு எவ்வளவு?

கொள்கலனை விடுவித் துக் கொள்ள நிறுவனத்திற்கு உதவும் வகையில் கடிதங்கள் எதுவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனவா?

அவ்வாறு கடிதம் அனுப்பியவருக்கு ஆலோசனை வழங்கியது யார்?

போதைப் பொருள் தொடர்பில் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்துடன் தொடர்புடைய நபர் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

இதன் விசாரணைக்கு சர்வதேச பொலிஸாரின் உதவி கோரப்பட்டுள்ளதா?

முழு விசாரணையின் தற்போதை ,நிலைமை என்ன?

அநுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த பிரதமர், சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளப்படுவதாகக் கூறினார்.

## மோட்டார் சைக்கிள் தீக்கிரை

யாழ். பருத்தித்துறையிலுள்ள வீடொன்றில் தரித்து நின்ற மோட்டார் சைக்கிள் இனந்தெரியாத நபர்களினால் நேற்று முன்தினம் இரவு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

மதில் பாய்ந்து குறித்த வீட்டு வளவிற்குள் நுழைந்த இனந்தெரியாத நபர்கள் மோட்டார் சைக்கிளை தீக்கிரையாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிள் தீக்கிரையாக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் மோட்டார் சைக்கிள உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வெளியாகியது சனத்தொகை விபரம்

(கொழும்பு)

இலங்கையின் சனத்தொகை கணக்கெடுப்பின் முடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டில் இடம்பெற்ற கணிப்பீட்டின்படி 31 இலட்சத்து 13247 பேர் தமிழர்கள் என்றும், ஒரு கோடியே 51 இலட்சத்து 73820 பேர் சிங்களவர்கள் என்றும், 18 இலட்சத்து 69820 பேர் முஸ்லிம்கள் என்றும் 33061 பேர் பேர்கர்கள் என்றும், 40189 பேர் மலே இனத்தவர்கள் என்றும் இதன்படி நாட்டின் மொத்த சனத்தொகை இரண்டுகோடியே இரண்டு இலட்சத்து 63723 என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

# சுற்றுலாப் பயணி யாழில் மரணம்

(யாழ்ப்பாணம்)

உறவினர்களுடன் சுற்றுலா வந்திருந்த தென்பகுதியைச் சேர்ந்த ஆண் ஒருவர் பலாலிப் பகுதியில் சுற்றுலாவில் ஈடுபட்டிருந்த சமயம் தடக்குண்டு வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த நிலையில் அவர் பலாலி படையினரால் யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டபோதும் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

எஸ்.ஜசாண் (வயது - 35) என்பவரே இவ்வாறு உயிரிழந்ததாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. இதே வேளை நயினாதீவிற்குச் சென்று திரும்பிய வெளிநாட்டு சுற்றுலாப் பெண் பயணி ஒருவர் படகில் ஏற முயன்றபோது சறுக்குண்டு வீழ்ந்ததன் காரணமாக இடது கால் தொடைப்பகுதி எலும்பில் முறிவு ஏற்பட்ட நிலையில் சத்திரசிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

# தமிழரசுக் கட்சியின் மானிப்பாய் கிளை கலைப்பு

(மானிப்பாய்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மானிப்பாய் தொகுதிக்கான கிளை கலைக்கப்பட்டுள்ளது. இதற்கான கடிதங்கள் கிளை உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

கட்சியின் தலைமைத்துவத்தினை தொடர்ச்சியாக பலப்படுத்த தவறியதன் காரணமாகவும், கட்சிக்கும் கட்சித் தலைமைக்கும் கட்டுப்படாமை காரணமாக இக்கிளையின் அங்கத்தவர்கள் சிலரின் மீது நடவடிக்கை எடுப்பதற்காகவே இக்கிளை கலைக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மானிப்பாய் தொகுதிக்கான அமைப்பாளராக கௌரிகாந்தன் இதுவரை காலமும் பதவி வகித்தார்.

எனினும் தொடர்சியாக மேற்கொண்டு வந்த குழப்பகரமான செயற்பாடுகளைப் பொறுத்துக் கொள்ள முடியாத கட்சித்தலைமை உடனடியாக மானிப்பாய் கிளையினை கலைக்குமாறு கோரியதனைத் தொடர்ந்து கட்சியின் பொதுச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா இது தொடர்பாக கடிதம் மூலம் குறித்த நபரிற்கு அறிவித்துள்ளார்.

இதன் பிரதி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மானிப்பாய் தொகுதியின் செயலரும் மாகாண சபை உறுப்பினருமான கஜதீபனுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்திலும், பிரதேச சபையிலும் இடம்பெற்ற குழப்பமான சூழ்நிலைகளினைத் தொடர்ந்தும், தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளினைத் தொடர்ந்துமே குறித்த நபர் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு பலர் வேண்டுகோள் விடுத்திருந்தாலும் பல மாதங்களுக்குப் பின்பே இம்முடிவு கட்சித்தலைமையினால் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பின்னர் சபை நடவடிக்கைகள் சுமுகமாக இடம்பெறலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கலைக்கப்பட்ட மானிப்பாய் தொகுதிக்கான புதிய நிர்வாகிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் இடம்பெறவுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வருடாந்த மாநாட்டிற்கு முன்பாக தெரிவு செய்யப்படலாம் எனவும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

எனினும் கடந்த ஒரு மாதத்திற்கு முன் வலி.தென் மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் சமர்ப்பித்த பதவி விலகல் கடிதம் தொடர்பாக கட்சியின் எந்த முடிவும் வெளியாகவில்லை. (48)

# கல்வியில் மறுசீரமைப்பு; மகிந்த சிந்தனை அமுல்

(யாழ்ப்பாணம்)

மகிந்தா சிந்தனை வேலைத்திட்டத்தின கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய கல்வி மறுசீலமைப்பு நடவடிக்கைகள் சில 2014 முதல் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்மென கல்வியமைச்சின் செயலாளர் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

இதன்படி வடமாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களும் ஐந்து வலயங்களாக மாவட்டத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் செயற்படுத்தப்படவுள்ளதாகவும், இந்தக் கல்வி வலயங்கள் அவ்வப் பிரதேச கல்வி நிர்வாகம், முகாமைத்துவம் ஆகிய விடயங்களையே முக்கிய கடமைகளாகக் கொண்டியங்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மத்திய கல்வியமைச்சின் பாடவிதான அபிவிருத்திக்குப் பெறுப்பாக இனிமேல் கல்விக் கோட்டப் பணிமனைகளே இயங்கும் எனவும், கல்விக் கோட்டப் பணிப்பாளர்கள் கல்வி நிர்வாக சேவை III ஐச் சேர்ந்தவர்களக இருக்கவேண்டும். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கேற்ப பாடத்துறை சார்ந்த உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் அனைவர்களதும் சேவை நிலையம் 2014 முதல் கல்வி வலயங்களிலிருந்து கோட்டக் கல்விப் பணிமனைக்கு மாற்றப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கல்விக் கோட்டப்பணிமனைக்குள்ளடங்கும் பாடசாலைகளின கல்வி அபிவிருத்திக்கு இவர்களே வகை கூறவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (06)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 டிசம்பர் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.